Registered as a News Paper
பக்கம் - 24

www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 25 | 12 - 18 - ஓகஸ்ட் - 2005

## ஐ.ஆர்.ஏ அமைப்பு தந்திரமாக...




## பயங்கரவாதம் பற்றிய பயங்கரமான வாதங்கள்



## இடதுசாரிகளின் பலிபீடம்...

# சட்டவிரோத மண்அகழ்வினால் எதிர்கொள்ளப்போகும் அபாயம்..!




# எமக்கென ஒரு நாடு வேண்டும்



சுந்தரி

அம்மன் கோவில். அதனை அடுத்து சிறிய குளங்கள், தாமரைகள் மலர்ந்து சிரிக்கும். குளக்கரையில் நிற்கும் காட்டு மரங்கள், செடிகள், கொடிகளில் ஏதேதோ மலர்கள், மரங்களில் கூடு கட்டி வாழும் பறவைகள் குருவிகள்.

கன்னிப்பருவத்தை எட்டிப் பிடித்துக்கொண்டிருக்கும் சின்னப் பெண்கள் குளித்து குதூகலமாய் கும்மாளமடிப்பார்கள். அவர்கள் குளித்து முடித்து புறப்படும்போது பையன்கள் வந்து குதித்து நீந்தி குளிக்க ஆரம்பிப்பார்கள். ஈர உடையுடன் இந்தச் சின்னப் பெண்கள் நின்றால் கழுத்தை சுற்றி கையைப் போட்டு மார்பை மறைத்துக் கொண்டு பற்றை மறைவுக்கு போய் உடை மாற்றியதும் ஆசுவாசமாய் குளித்த உடைகளை குளத்தில் அலம்பி பற்றைக் கொப்புகளில் காயவிடுவது வழக்கம். யாருமே அதை எடுக்கமாட்டார்கள்.

மூன்று நான்கு தாமரைப் பூக்களை மட்டும் எடுத்துக் கொண்டு அம்மன் கோவிலை தப்பாமல் மூன்று முறை சுற்றி விழுந்து கும்பிட்டு முடித்தபின் அந்தத் தாமரை மலர்களை அர்ச்சகர் கையில் கொடுக்கும் போது பயபக்தி மகிழ்ச்சி. அவர் கொடுக்கும் திருநீற்றை நெற்றி நிறைய பூசுவதில் வெட்கமோ துக்கமோ கிடையாது. சந்தோஷம் தான். அந்த நேரத்தில் கொஞ்சம் தொலைவில் புகைவண்டிச் சத்தம் சிலவேளை கேட்டால் ஐயோடி வாங்கடி கெதியாய் கொழும்பு ரயில் வருகுது போலை கிடக்குது. அந்த செகிட்டு வாத்தி வாசலில் பிரம்போடை நிற்கும். நான் சாவகச்சேரியிலிருந்து ரயிலேறி வந்திட்டன் உங்களுக்கு நேரத்துக்கு வர முடியாதோ என் அதட்டுவார். ஆனாலும் ஒரு நாளும் அடிப்பதில்லை.

குளித்து முடித்து வீட்டுக்கு போனதும் அங்கே பிட்டு, இடியப்பம், தோசை, அப்பம், ரொட்டி, ஒடியற் பிட்டு, பாற்கஞ்சி, களி இவற்றில் ஏதோ இருக்கும். பாணோ சம்பலோ கிடையாது. அப்போதெல்லாம் மாவை அறியாதகாலம்.

இந்த சின்னஞ்சிறு சிறுமிகள் படிப்பதெல்லாம் தேவையல்ல என்ற எண்ணம் பெற்றோரிடம். சிறுமிகளுக்கும் அதைப்பற்றி பெரிதாய் தெரியாது. ஏதோ இருபது வயதுக்குள் அநேகமாக கலியாணமாகிவிடும் மாப்பிள்ளை சொந்தக்காரனாகவோ அன்றி அந்தக் கிராமத்தை சேர்ந்தவனாக இருக்கலாம். ஆண்கள் வீட்டில் முடங்கிக் கிடப்பது அரிது. மாலையில் எங்காவது வெளியே போய்விடுவார்கள் காத்திருக்கும் இளம் மனைவிக்கு கணவன் சிக்கிரம் வரவில்லையே என்ற தவிப்பு. நிலாஒளிவீசும் இரவு என்றால் சந்தோஷம். இருட்டுக் காலம் என்றால் காற்றுடன் போராடிப் போராடி களைத்து கைவிளக்கு அணைந்துவிடும் கண்ணாடி விளக்கு-அரிக்கன் லாம்பு கொஞ்சம் வெளிச்சம் கொடுக்கும் அதுதான் அன்றைய வெளிச்சம்.

சில கணவன்மார் மனைவியில் எவ்வளவு அன்பாக இருந்தாலும் குடிப்பார்கள். குடிப்பது எந்தக் கிராமத்து மனைவிக்கும் பிடிக்காது. மணக்கும் என்பதற்காக வாயைக் கழுவி வெற்றிலை போட்டுக் கொண்டு காத்திருக்கும் மனைவியின் அருகில் அமர்ந்து செல்லம் கோபமாடி என்று கெஞ்சலாகக் கதைக்கும் போது அவள் கோபம் பறந்துவிடும். வாங்க சாப்பிடலாம் என அழைத்துப்போய் சாப்பிடும் போது மகிழ்ச்சிதான். குடித்துப் போட்டு வந்து அடி அடியென்று அடிப்பவர்களும் உண்டு.

ஆண்கள் மன்னிக்க வேண்டும். சில கணவன்மார் மனைவியை ஏமாற்றுவதுண்டு. குடித்தாலும் குடிக்காதமாதிரி நடிப்பார்கள். மனைவிக்கு அது தெரிந்தே இருக்கும்.

சரி அது வேறு கதை. இப்படி அமைதியாய் அன்பாய் உள்ளதை பங்கிட்டு மற்றவர்க்கு உதவி வாழ்ந்த காலம் மிக இனிமையானது.

அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பட்ட மாற்றத்தினால் ஆண் பிள்ளைகள் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தை நாடினார்கள். படித்தார்கள். சிலருக்கு கண்டியிலோ கொழும்பிலோ பல்கலைக்கழக அனுமதி. வேறு சிலருக்கு கொழும்பில் வேலை. நாளடைவில் பெண்களும் இந்த நிலைக்கு மாறினார்கள். இப்படி அனுமதி கிடைத்து அல்லது வேலை கிடைத்து மகன் கொழும்புக்கு புறப்பட்டால் வீட்டில் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே எல்லார் முகமும் வாடிவிடும். புறப்படும் நாள் மாமி, பாட்டி, அம்மா இன்னும் சிலர் புகையிரத நிலையத்துக்கு போவார்கள். தம்பியை வழியனுப்பவேண்டுமே ரயில் வரும் வரை நெஞ்சுகள் படபடக்கும். தம்பி அம்மாவின் அருகில் அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டு அமர்ந்திருப்பான். வண்டிவரும் தூரத்தில் வரும்போது எல்லாரும் எழுந்து ஆயத்தமாகி நிற்கையில், அழுகை வரம்பு மீறும்.

வண்டி வரும். நிற்கும். தம்பி வண்டியிலேறி உள்ளே போய் யன்னலால் எட்டிப் பார்ப்பார். பாட்டி தள்ளாடி நடந்து போய் அவர் கையை பிடித்து கண்ணில் ஒற்றி கதைக்க முடியாமல் திணறி உட்கார்ந்து விடுவாள். மாமியார் ராசா கவனம் அங்கே இங்கே இரவிலை திரியக்கூடாது கவனமாக இருக்க வேண்டும். மகளை வைத்திருக்கிற மாமியாய் இருக்கும். அம்மாவோ சொல்லத்தேவையில்லை அழுகை தம்பியின் கையைப்பிடித்துக்கொண்டு பேச முடியாமல் வரும் கண்ணீரையும் துடைக்காமல் திணறிக் கொண்டிருப்பார். புகைவண்டிக்கு சிரிப்பாய் இருக்கும் போலும். நான் ஒவ்வொரு நாளும் கொழும்புக்கு போய்வாறன். இதுகள் இப்படி என்று எண்ணியிருக்குமோ புகைவண்டி புறப்படுவதற்கான விசில் சத்தம் எல்லோரையும் திடுக்கிட வைக்கும். வண்டி அசையும். மெதுவாக ஓட ஆரம்பிக்கும். அம்மா தம்பியின் கையைப் பிடித்துக்கொண்டு கொஞ்சம் தூரம் போய் வண்டி வேகமெடுத்ததும் திரும்பி வருவா. இது அநாகரிகமல்ல, முட்டாள் தனமல்ல, அன்றைய வாழ்க்கை அப்படி. அப்போதும் ஒரு வித அடிமை வாழ்வு தான். எங்கோ இருந்து வந்த ஆங்கிலேயனுக்கு கீழ் வாழ்ந்த காலம்.

அதன் பின் இலங்கை சுதந்திரமடைந்தது மகிழ்ச்சி தான். ஆனால் சுதந்திரம் என்ற அமுதம் அவர்களுக்கு மட்டும் தான் என்ற எண்ணம், செயல்கள் நம்மவர்களை வெகுவாக பாதிக்கத் தொடங்கின. சுதந்திரம் என்பது அமுதம்தான். அமுதம் உண்டவர்கள் அழியா திருப்பார்களாம். அந்த அமுதம் எங்களுக்கு தேவையல்லவா. எங்கள் பரம்பரை அழியாது வாழ அமுதம் அவசியமாயிற்று. அந்த அமுதை பெற போராட்டங்கள் கொஞ்சம் கொஞ்சமாக தோன்றி இழப்புகள், உயிர் இழப்பு, பொருட்களின் இழப்பு, இடம் பெயர்வு,புலம் பெயர்வு.

புலிகளிடமிருந்து மக்களை காக்கவா வந்தார்கள். யார் இராணுவம் தான். சமாதான உடன்படிக்கை பேச்சுவார்த்தை இப்படி ஏதேதோ. ஆனால் எப்போதும் பதட்டமான ஒரு வாழ்க்கை வாழுகிறார்கள் மக்கள். அழகாயிருந்த கிராமம் எப்படி ஆகிவிட்டது. அம்மன் கோவில் குளத்தில் குளித்து குதூகலிக்கும் நிலை இல்லை வீட்டுத் திண்ணைகளில் பாய்விரித்து படுத்து வானத்தில் ஓடும் வெண்முகில்களையும் உலா வரும் சந்திரனையும் பார்க்கும் மகிழ்ச்சி இல்லை. இரவில் நாய் குலைத்தால் பதட்டம், வேலியில் சத்தம் கேட்டால் பயம், சப்பாத்து காலடி ஓசை சிலவேளை கேட்டால் கலவரம்.

பாவம் முதியவர்கள் வெளிநாடுகளில் இருக்கும் பிள்ளைகளின் விருப்பத்துக் கிணங்கி போவார்கள். பூட்டிய அறைகளும் கொட்டும் பனியும், குளிரூட்டியும், சூடேற்றியும் பலருக்கு பிடிப்பதில்லை. சொந்த மண் சொர்க்கம் என்று திரும்பி வந்து தனிமையில் ஒரு வாழ்வு.

எது எப்படி இருந்தாலும் எங்கள் குழந்தைகள் இளம் சந்ததியினர் நாம் பட்ட பாட்டை படக்கூடாது. அதற்கு வழி பிறக்கவேண்டும். நமக்கென நாடுவேண்டும் சொந்த மண் சொர்க்கமாய் சுதந்திர அமுதுண்டு வாழவேண்டும் எங்கள் பரம்பரை பதட்டமின்றி பயமின்றி வாழ வேண்டும்.




# இடதுசாரிகளின் பலிபீடம்

- அன்பரசு -

> *சிறிலங்காவை இடதுசாரிகளின் பலிபீடம் என்ற அரசியல் விஞ்ஞானிகள் கூறுவதற்கு இடது சாரிக் கொள்கைகள் அப்பட்டமான சந்தர்ப்பவாதத்திற்காக உதறித் தள்ளப்பட்டதுதான் மூலகாரணம். சிறந்த இடதுசாரித் தலைவர்கள் சிறிலங்காவில் வாழ்ந்திருக்கிறார்கள். அத்தனை பேரும் மத, மொழி, இன வெறியால் ஆட்கொள்ளப்பட்டுத் தமது கொள்கைகளை வெறுத் தொதுக்கினார்கள்.*

வளர்ச்சிபெற்ற வேகத்திலேயே இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோன இடதுசாரி அரசியல் கட்சிகளை சிறிலங்கா வில் காணலாம். இதோ ஆட்சியைப் பிடித்துவிடுவார்கள் என்று சொல்லுமளவுக்கு அவற்றின் வளர்ச்சி வேகம் காணப்பட்டது. ஆனால் குறைப்பிரசவமாகவும் குருத்தில் கருகிய கதையாகவும் யாவும் முடிந்துவிட்டன. மாக்சிசத்தின் தந்தை (FATHER OF MARXISM) என்று அழைக்கப்பட்ட பிலிப் குணவர்த்தனாவைப் பாருங்கள். அவர் அயர்லாந்து விடுதலைப் போரில் பங்குபற்றியதாகச் சொல்லப்படுகிறது. அத்தோடு அமெரிக்காவில் மேற்படிப்பு மேற்கொண்டதாகவும் அவர் பற்றிய வரலாறுகள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் சுதந்திரத்திற்கான இயக்க மூதாதையர்களில் ஒருவராகவும் அவரைச் சிலர் கணிப்பிடுகின்றனர். ஆனால் ஈற்றில் நடந்ததென்ன? அவர் எம்.ஈ.பி எனப்படும் மகாஜன எக்சத் பெரமுன கட்சியை உருவாக்கி அதை எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தோற்றுவித்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியோடு கூட்டுச் சேர்ந்தார். 1956 ஆம் ஆண்டுத் தேர்தல்களில் இந்தக் கூட்டு வெற்றிபெற்றது.

பிலிப் குணவர்த்தனாவுக்கு அமைச்சர் பதவி கிடைத்தது. அவர் தனிச்சிங்களச் சட்டத்திற்கு ஆதரவளித்தார். அத்தோடு தனக்குக் கீழிருந்த இலாகாக்களில் மிகத் தீவிரமாக தனிச்சிங்களத்தை அமுலாக்கினார். தமிழ் உத்தியோகத்தர்களை சிங்களத்தில் பணியாற்றுங்கள் அல்லது வெளியேறுங்கள் என்று மிரட்டி வேலை வாங்கினார்.

இந்த இடதுசாரி முன்னோடியின் மகன்தான் பேரினவாதியான தினேஷ் குணவர்த்தனா. எம்.ஈ.பி. கட்சியை மறையவிடாமல் காப்பாற்றிவரும் தினேஷ் குணவர்த்தனா தமிழர்கள் மீது கண்டனக் கணை செலுத்துவதையே தனது ஒரே அரசியல் மூலதனமாகக் கொண்டுள்ளார். பிலிப் குணவர்த்தனாவின் சகோதரி அந்தோனிப் பிள்ளை என்ற தமிழரைத் திருமணம் செய்தவர். இருவரும் நெடுங்காலமாகச் சென்னையில் வாழ்கின்றனர். இந்திய தொழிற்சங்க வரலாற்றில் அந்தோனிப்பிள்ளைக்கு நிலையான இடமுண்டு. அந்தோனிப்பிள்ளை பெருந்தலைவர் காமராசா காலத்தவர். சிறுவயதில் அந்தோனிப் பிள்ளை குடும்பத்தினரை சென்னையில் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. தம்பதிகள் இருவரும் தமக்கிடையில் சிங்கள மொழியில் பேசிக்கொண்டனர். கேட்க என்னவோபோல் இருந்தது.

லங்கா சமசமாஜ கட்சியைத் சேர்ந்த றொபேட் குணவர்த்தனா பிலிப்பின் தம்பி. அவர் ஒரு சட்டத்தரணியாக இருந்தவர். முழுக் குடும்பமே தமிழ்-சிங்கள மொழிச் சமத்துவத்தில் இருந்து தீவிர சிங்களப் பேரினவாத முன்னெடுப்புக்கு வந்ததாகும். இதற்கு அரசியலும் தமிழர்களின் ஆதரவு தமது அரசியலுக்குத் தேவையில்லை என்ற நிலைப்பாடும் காரணமாகின்றன. சிங்களத் தலைவர்கள் மனங்களில் இயல்பாகவே தமிழர்கள் மீதான காழ்ப்புணர்வு பிறிதோர் காரணமாக இடம்பெறுகின்றது.

சிறிலங்காவை இடதுசாரிகளின் பலிபீடம் என்று அரசியல் விஞ்ஞானிகள் கூறுவதற்கு இடதுசாரிக் கொள்கைகள் அப்பட்டமான சந்தர்ப்பவாதத்திற்காக உதறித்தள்ளப்பட்டதுதான் மூலகாரணம். சிறந்த இடதுசாரித் தலைவர்கள் சிறிலங்காவில் வாழ்ந்திருக்கிறார்கள். அத்தனைபேரும் மத, மொழி, இனவெறியால் ஆட்கொள்ளப்பட்டுத் தமது கொள்கைகளை வெறுத்தொதுக்கினார் கள். 1956இல் பிலிப் குணவர்த்தனா பலியா னார். 1964 இல் மாபெரும் கல்விமான், இரட்டைக் கலாநிதி பட்டம் பெற்றவரான டாக்டர் என்.எம். பெரேரா, அவருடைய முக்கிய சகாவான சொல்லின் செல்வர் கலாநிதி டாக்டர் கொல்வின ஆர்.டி.சில்வாவும், சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சுதந்திரக் கட்சியோடு கூட்டுவைத்தார்கள்.

அத்தோடு இக்கட்சி காணாமல் போய்விட்டது. நுவரெலியாவிலுள்ள பிரிட்டிஷ் கவர்னர்களின் கோடைகால வாசஸ் தலம் இப்போது சிறிலங்கா சனாதிபதியாலும், சனாதிபதி ஆட்சிமுறை வருவதற்கு முன்பு சிறிலங்கா பிரதமர்களாலும் பயன்படுத்தப்பட்டது. இந்த மிகச் சொகுசான சூழலுக்கு சமசமாஜ கட்சித் தலைவர் டாக்டர் என்.எம். பெரேராவையும் அவருக்கு வேண்டிய சில உயர்மட்டத் தினரையும் வரும்படி சிறிமாவோ அழைப்புவிடுத்தார். நான் மிகவும் அழகாகப் பின்னிய வலையைப் பார்க்க வாறியா என்று தான் உண்ணவிரும்பிய பூச்சியைப் பார்த்து சிலந்தி கேட்டுதாம். என்.எம்.பெரேரா நுவரெலியா விடுதியில் தங்கியிருந்தபோது சிறுவனாக இருந்த அநுராவுடன் கிரிக்கெட் விளையாடி அவனைக் குஷிப்படுத்தினாராம்.

1964 ஆம் ஆண்டு எல்.எஸ். எஸ்.பி எனப்படும் சமசமாஜக் கட்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் எஸ்.எல். எப்.பி எனப்படும் சுதந்திரக் கட்சியுடன் கூட்டு வைத்தன. இரு கட்சிகளும் தமது மொழிக் கொள்கையை மாற்றிக்கொண்டன. அதாவது தனிச் சிங்கள நிலைப்பாட்டை எடுத்தன. அன்று தொட்டு இன உறவு துருவமயப்படுத்தப்பட்டது. சிங்களக் கட்சிகள், தமிழ்க்கட்சிகள் என்று இரு துருவங்கள் தோன்றின.

1964 ஆம் ஆண்டில் எல்.எஸ். எஸ்.பி மூன்று துண்டுகளாக உடைந்தது. என்எம்பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, விவியன் குணவர்த்தனா ஆகிய மூவரும் சுதந்திரக்கட்சியுடனான கூட்டிற்கு ஆதரவு வழங்கினர். விவியன் குணவர்த்தனாவின் கணவரான லெஸ்லி குணவர்த்தனா நடுநிலை வகித்தார். இவர் ஒரு அப்பாவி, பயங்கர சாதி அடிப்படையிலான எதிர்ப்புக்களை மீறி நல்ல வசதியுள்ள குடும்பத்தில் பிறந்த விவியனைத் திருமணம் செய்தவர். விவியன் ஒரு பெரிய வாய்க்காரி, லெஸ்லி மிகவும் மென்மையான போக்கு உடையவர். காலப்போக்கில் குடும்பம் இரண்டுபட்டது. என்.எம் பெரேரா விவியனை தன்னோடு சேர்த்துக் கொண்டார். என்.எம் இத் துறையில் சற்றுப் பலவீனமானவர். கோழிக் கூட்டிற்குள் முட்டை இடுமவான்கோழி என்று அவரை அழைப்பார்கள்.

அரசியலே வேண்டாம் என்ற கருத்தோடு கட்சியைவிட்டு வெளியேறிய எட்மன்ற் சமரக்கொடி மூன்றாம் அணிக்குத் தலைமை தாங்கினார். கட்சிக் கொள்கை மாற்றத்திற்கு அவர் கடும் எதிர்ப்புக் காட்டியதோடு கட்சியிலிருந்து விலகினார். நேர்மையான சிங்களவர்கள் எங்கோ ஒருவர் இருக்கலாம் என்பதற்கு சமரக் கொடி ஒரு உதாரணமாகலாம்.

யாழ்ப் பாணத்திற்குத் தாக்குதல் நடத்துவதற்காக சிங்கள இராணுவத்தையும் பொலிசையும் சிறிமாவோ அனுப்பிய போது எட்மன்ற் சமரக்கொடி பின்வரு மாறு நாடாளுமன்றத்தில் கூறினார். "பெரும் அநீதியையும் அவமதிப்பையும் தமிழர்களுக்குச் செய்கிறீர்கள். அவர்களுக்கு மிகப் பெருமை வாய்ந்த வரலாறு உண்டு. இந்த அவமானத்தை அவர்கள் பொறுத்திருக்கமாட்டார்கள். அவர்கள் பதிலடி கொடுக்காவிட்டால் அவர்களை உப்புத்தின்னாத மனிதர்கள் என்று சொல்ல வேண்டும்" எட்மன்ற் சமரக்கொடியின் விலகல், லெஸ்லி குணவர்த்தனாவின் இரண்டும் கெட்டான் நிலை ஆகியவற்றுடன் சமசமாஜக் கட்சி ஒரு வெளிப்படையான இனவாத அமைப்பாக மாறியது. இதை நிரூபிப்பதற்கு அதற்கு மிக விரைவாகச் சந்தர்ப்பம் கிடைத்தது. 1964 இல் நிறுவப்பட்ட சிறிமாவோ ஆட்சி சில மாதங்களில் பெரும்பான்மையின்றி வீழ்ச்சி கண்டது. 1965 இல் நடந்த தேர்தலில் டட்லி சேனநாயக்கா சமஷ்டி கட்சியின் ஆதரவோடு ஒரு சிறுபான்மை அரசை உருவாக்கினார். சிறிமாவோ கூட்டணியினர் எதிர்க்கட்சியில் இருந்து தமிழர்களுக்கு எதிரான இனவாதக் கருத்துக்களை வெளியிட்டனர். 1965 இல் தொடங்கிய டட்லி அரசு 1969வரை நீடித்தது. தமிழர்களுக்கான சில மிகவும் குறைந்த 'சலுகை களை' டட்லி அரசு கொடுக்க முன்வந்தது. அப்போதுதான் எல்எஸ்எஸ்பியும் கம்யூனிஸ்ட் கட்சியும் தங்கள் சுயரூபத்தைக் காட்டின.

1966 ஆம் ஆண்டில் சமசமாஜக் கட்சி டட்லி அரசுக்கு எதிரான பேரணிகளைக் கொழும்பில் நடத்தியது. அப்போது கட்சித் தலைவர்கள் வெளியிட்ட தமிழர் எதிர்ப்புக் கோசங்கள் சுதந்திரக் கட்சியினர் கூட வெட்கித் தலை குனியும் அளவுக்கு மோசமாக இருந்தது. சமசமாஜக் கட்சியில் அங்கத்துவம் வகித்த தமிழ் உறுப்பினர்கள் மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டனர். காராள சிங்கம், செனேற்றர் நாகலிங்கம் போன்ற மூத்த உறுப்பினர்கள் கட்சியா, தமிழ் அடையாளமா என்று இருதலைக்கொள்ளி எறும்பு போன்று தவித்தனர். யாழ் கல்விமான்கள் மத்தியில் சமசமாஜக் கட்சிக்கு நல்ல ஆதரவுத் தளம் இருந்தது உண்மையே. தனது முறைகேடான வாழ்க்கை காரணமாக என்.எம்.பெரேரா நித்திய நிதித் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டவர் றோயல் பார்மசி அதிபர் செல்லையா போன்ற வசதியுள்ளவர்கள் அவருக்குப் பண உதவி செய்தனர். எல்லாம் படிப்படியாக நின்று போய்விட்டன. பிரபல வழக்கறிஞராக இருந்த செனேற்றர் நாகலிங்கம் அரசியலில் இறங்கியதால் நலிவுற்றவர். மிகவும் நேர்மையான மனிதரான இவர் என்.எம்.பெரேராவை நம்பி மதி மோசம்போனார்.

1969இல் டட்லி சேனநாயக்கா அரசு வீழ்ச்சி கண்டு 1970ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் சிறிமாவோ கூட்டணி அரசைக் கைப்பற்றியது. சிறிமாவோ ஆட்சி 1977வரை நீடித்தது. 1970 யூலை மாதம் சிறிமாவோ தலைமையிலான அரசு நாடாளுமன்றத்தை "சட்ட உருவாக்க சபையாக" (CONSTITUENT ASSEMBLY) மாற்றிக் கொண்டு புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் முயற்சியில் இறங்கியது. 1971 ஆம் ஆண்டு தனிச் சிங்களத்தையும் பௌத்த மதத்தையும் முதன் நிலைப்படுத்தும் புதிய அரசியல் சாசனம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதை கொல்வின் உருவாக்கினார்.

இதுவரை காலமும் தமிழர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அற்ப சொற்ப உரிமைகளையும் அவர்தனது சாசனத்தின் மூலம் பறித்தெடுத்தார். சட்ட உருவாக்க சபையில் பேசும் போது எல்.எஸ்.எஸ்.பி கட்சியின் மூத்த உறுப்பினரும் என்.எம்.பெரேராவின் வலது கையுமான பேர்னாட் சொயிசா பின்வருமாறு கொள்கை விளக்கமளித்தார். " மொழி பற்றிய சமுதாய நீதியை நாம் பொருளாதார சீர்திருத்தத்தின் மூலம் அடையவிரும்பும் சோசலிச எதிர்காலத்திற்காக நிராகரிக்க வேண்டியுள்ளது" அவர் என்ன சொல்லவாறார் என்றால் மொழியுரிமையைத் தரமறுக்கிறோம் என்பதுதான். அதற்காக சோசலிச எதிர்காலத்தை அவர் காரணம் காட்டுகிறார், அவ்வளவும்தான். இப்படியாக இடதுசாரிகள் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொண்டன.

சிறிமாவோ ஆட்சிக்காலத்தில் 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி கட்சியினரின் முதலாவது ஆயுதப் புரட்சி நடைபெற்றது. சிறிமாவோ இந்திய இராணுவ உதவியை நாடினார். முதலாவது இந்தியப்படையெடுப்பு 1971இல் நடந்தது என்று சொல்வதில் தவறில்லை. மிகவும் கொடூரமான முறையில் ஜே.வி.பியினர் நசுக்கப்பட்டனர். றோகண விஜயவீரவும் அவருடைய ஜே.வி.பி சகாக்களும் யாழ் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். அவர்களை மீட்பதற்கு தெற்கிலிருந்து ஒரு ஜே.வி.பி இளைஞர் குழு பஸ் வண்டி மூலம் யாழ்ப்பாணம் வந்தது. கோட்டை மீது தாக்குதல் தொடுக்கும்போது அனைவரும் அப்போதைய யாழ் பொலிஸ் நிலையத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

என்.எம். பெரேராவை நிதி அமைச்சராகக் கொண்ட சிறிமாவோ ஆட்சி அவசரகாலப் பிரகடனத்தின் மூலம் ஆட்சியில் இருந்தது. ஆறு வருடகாலம் அவசரகாலச் சட்டம் அப்போது நீடித்தது. தனது பதவிக்காலம் 1975இல் முடிந்த பின்பும் பதவியில் இருந்து விலக சிறிமாவோ மறுத்தார். 1977 ஆம் ஆண்டு வரை அவர் தனது அரசை இடதுசாரிகள் உதவியோடு இழுத்துக்கொண்டு போனார். அதற்கு மேல் இயலாமல் அவர் பதவி விலகினார். 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஜெயவர்த்தனா தலைமையிலான யூ.என்.பி அமோக வெற்றிபெற்றது. உடனடியாகத் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரத்தை சிறிமாவோ கூட்டணியினர் நடத்தினார்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகளின் சிங்கள மாதச் சஞ்சிகை "தேதுன்ன" 2005 ஆடி-ஆவணி இதழின் ஆசிரியர் கருத்து.**

மீண்டும் ஒரு பலத்த அடி விழுந்துள்ளது. ஆம், சிங்கள மேலாண்மை வாதிகள் தமிழ் மக்கள்மீது இறக்கிய அடிகளின் வரிசையில் மீண்டும் ஒரு பலமான அடி. சுனாமிப் பொதுக்கட்டமைப்பு என்ற குழந்தை கருவிலேயே சிதைக்கப்பட்டுவிட்டது. உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் பொதிந்து கிடக்கும் 'வெற்றியைப்' பேரினவாதிகள் கொண்டாடும் நாட்கள் இவை. ஐம்பது வருடகாலமாக இந்தத்தீவு கண்ட இரத்தம் தோய்ந்த வரலாற்றுப் பாதைக்கு மீண்டும் இட்டுச் செல்வதில் பேருவகை கொள்ளும் கயமையை என்னென்று சொல்வது?

சிறிலங்காவின் உயர் நீதிமன்றம் வழங்கிய இடைக்

நிலையில் நிற்கும் மக்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் மறுவாழ்வு கொடுக்கும் அவசியத்தையும் தெற்கிலுள்ள இனவாதிகள் அறியாமல் இருப்பார்களா? சுனாமி அடித்து ஆறு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் தெற்கில் பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் வீதியோரக்கூடாரங்களில் வாழ்வாதாரம் இன்றித் துடிப்பதையும் மழை பெய்தால்

வதற்குப் பேரினவாதிகள் முனைப்புடன் செயற்பட்டது அதனால்தான். வரலாறு கண்டிராத விதத்தில் சர்வதேச உதவி வந்துகொண்டிருப்பதாகச் சொல்லப்படும் பின்னணியில் தெற்கிலுள்ள சுனாமி அனர்த்த அகதிகளுக்குப் போதிய அளவு உணவுப் பொருட்கள்கூட ஒழுங்காகச் சென்றடைவதில்லை, ஊழலும் மோசடியும் நடக்கின்றன என்

சிறிலங்காவின் உயர் நீதிமன்றத்தில் சிங்கள பௌத்தம் அல்லாத இனத்தையும் மதத்தையும் சார்ந்தோரது உரிமைகள் மதிக்கப்படாது மிதிக்கப்படுவது இது ஒன்றும் முதற்தடவையல்ல, அது போலவே கயமையான கடசித் தீர்ப்பும் இதுவல்ல, இன்னும் வரலாம், வரும். கடந்த ஐம்பது வருட வரலாற்றில் தமிழ் மக்களின் கூட்டுச்சமூக

யும் உருவாக்கி விடுதலைப் பயணத்தைத் தடுக்கமுயன்ற தன் விளைவே தமிழ்மக்கள் ஆக்கிரமிப்பு இராணுவ சக்திக்கு எதிராக தமக்கென ஒரு ஆயுதப்படையை உருவாக்கி,

"உங்கள் செய்தியை நாங்கள் நன்கு விளங்கிக் கொண்டோம்"

என்ற விதத்தில் பதிலளிக்க நேர்ந்தது.

இத்தீவில் வாழும் சகல மக்களும் நன்கு அறிந்த, இயற்கை அழிவிலிருந்து மீளெழும்ப, முற்றிலும் மனிதாபிமான அடிப்படையில் வரையப்பட்ட புனர்வாழ்விற்கான அமைப்பைச் சீர்குலைப்பதற்குத் கங்கணம் கட்டி நின்ற சக்திகளுக்குத் துணைபோன சிறிலங்காவின் நீதித்துறையிட மிருந்து தமிழ் மக்கள் தமக்கு நீதி, நியாயம் கிட்டுமென நம்பிக்கை கொள்ளமுடியும் என்று சொல்லும் தற்றுணிவு ஆகக் குறைந்தது ஒரு சிங்களக் குடிமகனுக்கேனும் உண்டா?

பொதுக்கட்டமைப்பைச் செயலிழக்கச் செய்யும் கைங்கரியம் கச்சிதமாக நிறைவேற்றப்பட்டுவிட்டது. "இறைமைக்கான வெற்றி" என்று



# உயர் நீதி மன்றத் தீர்ப்பு ஐம்பது வருட மேலாண்மை முதுசம்

**"வரலாற்றுச் சிறப்பு" மிக்க இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை வழங்கியிருப்பதன் மூலம் சிறிலங்காவின் உயர் நீதிமன்றம் சால்பிழந்து உதாசீனம் செய்திருப்பது வெறுமனே தமிழ், முஸ்லிம் மக்களின் விசேட உரிமை எதையுமல்ல, மாறாக மானிட அவலமொன்றுக்கு ஆட்பட்டுத் தவிக்கும் மனிதக் குழுமமொன்றின் உயிர்வாழும் உரிமையே இந்தத் தீர்ப்பின் மூலம் மறுக்கப்பட்டிருக்கிறது.**

காலத்தடை உத்தரவை ஆராய்வதற்கு முன் அதற்குக் கட்டியம் கூறிய பேரினவாதக் கூச்சலையும் அப்பாவி மக்களை உசுப்பிவிட்ட பிரசாரப் பின்னணியையும் நோக்குவது அவசியமாகின்றது. பொதுக் கட்டமைப்பிற்கான வரைவு இனப்பிரச்சினைத் தீர்விற்கான ஒரு அரசியற் பொதியல்ல; இரண்டு தசாப்தமாக இரத்த ஆறு ஓட வைத்த கொடிய யுத்தத்தை நிரந்தரமாக நிறுத்தி இறுதித் தீர்வு காண்பதற்கான ஒரு ஆவணமோ என்றால் அதுவுமில்லை. வரலாறு கண்டிராத இயற்கை அனர்த்தம் ஒன்றால் அனைத்தையும் பறிகொடுத்து உயிரை மட்டும் காப்பாற்றிக்கொள்ள முடிந்த



ஏதிலிகளின் வாழ்வில் இயல்பு வாழ்வினை ஏற்படுத்தி மறுவாழ்வு கொடுக்கத் தேவையான நடைமுறைகளின் பொதிவே பொதுக்கட்டமைப்பிற்கான வரைவு.

தெற்கே அம்பாந்தோட்டையிலிருந்து வடக்கே முல்லைத் தீவு வரைக்கும் ஒரே நேர் கோட்டில் நிகழ்ந்த இயற்கையின் கோர நர்த்தனம் விட்டுச் சென்ற அழிவுகளையும், காவுகொடுத்துவிட்டுக் கையறு

முழங்கால் அளவு தண்ணீரில் தவிப்பதையும் நாளும் பொழுதும் காணும் இந்தத் தென்னிலங்கைப் பேரினவாதிகளுக்கு மட்டக்களப்பிலும், முல்லைத் தீவிலும், பருத்தித்துறையிலும் பரிதவிக்கும் மக்களின் துன்பியல் பற்றிப் புதிதாகப் பாடமெடுக்கவேண்டுமா என்ன?

பேரினவாத மேலாதிக்கத்

தின் சுபாவமே இதுதான். பாடம் எடுப்பதிற் பயனேதும் இல்லை. மேலாதிக்கம் தொடர்ச்சியாக நீடிக்க அவர்கள் எதையும் செய்வார்கள். தமிழ் மக்களும் முஸ்லிம்களும் பெருமளவில் வாழும் வடக்குக் கிழக்குத்தான் பேரலையின் பெரும் தாக்கத்தைக் கண்டதென்ற உண்மை தெரிந்திருந்தும், அந்த மக்களின் அவலத்தை நீக்கவெனத் தயாரிக்கப்பட்ட திட்டத்தை முடக்கு

றெல்லாம் பரவலாக முறைப்பாடுகள் வருகின்ற சூழலில் அந்த முறைகேடுகள் குறித்து உயர் நீதிமன்றத்தின் தலையீட்டைக் கோர எண்ணாத இந்தப் பேரினவாதச் சக்திகள் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஒழுங்கான முறையில் உதவி கிடைக்கவெனத் தயாரிக்கப்பட்ட திட்டம் நாட்டின் இறைமைக்குக் குந்தகமானதெனக் குரல் எழுப்பி பொதுக்கட்டமைப்பைக் கருவிலேயே சிதைத்த கைங்கரியம் பேரினவாத மேலாதிக்கத்திற்கேயுரித்தான தனித்துவச் சிறப்பாகும். இருபதுவருட யுத்தத்தின் போது கண்மூடித்தனமான வான் குண்டுவீச்சுகளுக்கு முகம்கொடுத்து உறவு, உடமை இழந்து ஏதிலிகளாகப் பல தடவை இடம்பெயர வைக்கப்பட்ட மக்கள் குழுமம் மீது இராட்சத அலையின் தாக்கம் எத்தகைய மானிடப் பேரவலத்தை ஏற்படுத்தியிருக்கும்.

"வரலாற்றுச் சிறப்பு" மிக்க இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை வழங்கியிருப்பதன்மூலம் சிறிலங்காவின் உயர் நீதிமன்றம் சால்பிழந்து உதாசீனம் செய்திருப்பது வெறுமனே தமிழ், முஸ்லிம் மக்களின் விசேட உரிமை எதையுமல்ல, மாறாக மானிட அவலமொன்றுக்கு ஆட்பட்டுத் தவிக்கும் மனிதக் குழுமமொன்றின் உயிர் வாழும் உரிமையே இந்தத் தீர்ப்பின் மூலம் மறுக்கப்பட்டிருக்கிறது.

உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுவதற்கு அரசியலமைப்பு நிறைவேற்று அதிகாரப்பலம், ஆயுதப்படை என்பவற்றிற்கு மேலாக சிங்கள ஆட்சியாளர்களுக்கு நீதித்துறையின் பலமே பெரிதும் உதவியிருக்கிறது. எந்தவொரு மானிடக் குழுமமும் தனக்குரித்தான, எந்தச் சந்தர்ப்பத்திலும் மீறப்பட முடியாத சனநாயக உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்படும் போது மாற்று ஒழுங்குகள் பற்றிச் சிந்திக்க விழைவது இயல்பே. அதுதான் இங்கும் நடைபெற்றுள்ளது.

கடந்த காலங்களில், மேலே குறிப்பிட்ட அரசியலமைப்பு, நிறைவேற்றதிகாரம் என்பவற்றுடன் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகள் மூலமாகவும் சொல்லப்பட்ட உண்மை என்ன? அவை மூலம் தெரிவிக்கப்பட்ட செய்திதான் என்ன?

"உங்களுக்குத் தேவைப்படும் நீதி, கௌரவம், சுதந்திரம் என்பவற்றை எங்கள் அதிகாரமையங்கள் உத்தரவாதப் படுத்தமாட்டா, தேவையான மாற்றுவழிகளை நீங்களே தேடிக்கொள்ளுங்கள்"

இதுதான் உண்மை, இதுதான் தெளிவான செய்தி.

விடுதலைப் போராட்டம் முன்னோக்கி நகர்ந்து சுயபலம் உறுதி பெறும் ஒவ்வொரு காலகட்டத்திலும் சிங்கள அதிகாரவர்க்கம் சிறப்பு நீதிமன்றங்களையும், விசேட பொலிஸ் பிரிவுகளை

பேரினவாதிகள் கொண்டாடும் உயர் நீதிமன்றத் தீர்ப்பு தெற்கில் சுனாமித் தாக்கத்தினால் அநாதைகளாக்கப்பட்டு பசி, பட்டினியுடன் செயற்றிறனற்ற அரசுக்கெதிராகப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் சாதாரண சிங்கள மக்களுக்கு வழங்கிய வெற்றி என்னவெனத் தெரியாது தமிழ் மக்கள் யோசிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வேறொன்று தெளிவாகியுள்ளது.

"கால ஓட்டத்தில் மறந்திருந்தாலும் கடந்த கால நயவஞ்சக வரலாறு இத்தீர்ப் பின் மூலம் நினைவுபடுத்தப்பட் டுள்ளது" தெளிவாகியுள்ள அந்த வரலாறு தரும் பாடம் என்ன?

"தமிழ் இனத்திடமிருந்து கோரப்பலி கொண்ட யுத்தம் அவர்களை இரத்தத்திற்கும் கண்ணீருக்கும் மட்டுமே உரித்துடைய ஏதிலிகளாக்கி விட்ட நிலையில், இயற்கையும் அவர்களைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கியபோது இறைமை பற்றிப் பேசும் சிங்கள ஆளும் வர்க்கமும் அவர்களுக்கு ஆலவட்டம் பிடிக்கும் பேரினவாதிகளும் தமிழ் மக்களது அடிப்படை சனநாயக உரிமைகளை மதிக்கப் போவதுமில்லை, வழங்க வழி செய்யப்போவதுமில்லை"

இறுதித் தீர்வு இடைக் காலத் தீர்வு என்பவை பற்றிச் சிங்களப் பேரினவாதிகள் மூச்சுக்கு முன்னூறு தரம் பேசுவது அவர்களின் பொழுதுபோக்கிற்கே என்பது தெளிவாகிவிட்டது. உயர் நீதி மன்றத் தீர்ப்பு உண்மையில் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த விடுதலை எழுச்சியை முன்னெப்போதுமில்லாத விதத்தில் கூர்மைப்படுத்தியுள்ளதென்றே கொள்ளவேண்டும்.

# பயங்கரவாதம் பற்றிய பயங்கரமான வாதங்கள்!



**'ஏற்றுக்கொள்ள முடியாத மோசமான அரசியல், ராணுவ ஒடுக்குமுறைகளுக்கு உள்ளானவர்கள் இவ்வாறான தற்காப்பு நடவடிக்கைகளுக்குத் தயாராகிறார்கள்.**

**சு.ஞாலவன்**

இன்று சர்வதேச அரசியல் அரங்கில் அதிகமாகப் பேசப்பட்டு வரும் விடயம் எது என்றால் அது நிச்சயமாக 'பயங்கரவாதம்' ஆகத்தான் இருக்கமுடியும். தேசிய மட்டத்திலும், சர்வதேசிய அளவிலும் ஆளுக்காள் அவரவர் விருப்பத்திற்கு அல்லது தேவைக்கேற்றவாறு வரையறுத்துக்கொண்டு வியர்க்க, விறுவிறுக்க விவாதித்துக்கொள்ளும் ஒன்றாக இந்த 'பயங்கரவாதம்' என்ற பதம் மாறிவிட்டது.

அந்த வழக்கத்தில் இன்று அமெரிக்கா உலக அச்சுறுத்தலாகக் கருதிக்கொள்ளும் பயங்கரவாதமும், சிறிலங்கா அரசு கருதும் பயங்கரவாதமும் ஒன்றாகி விடுமா!

அப்படியென்றால் தமிழ்மக்களாகிய நாம் கடந்த 60 ஆண்டுகளாக சிங்கள பேரினவாதிகளுக்குக் கீழே அனுபவித்து வருவது பயங்கரவாதம் அல்லாமல் குடியியல் உரிமைகளா? உலகம் கண்ட படுமோசமான (கட்சி பேதங்களுக்கு அப்பாலே) அரசைக் கொண்ட சிறிலங்காவின் ஒடுக்குமுறையின் கீழ், வேதனைக்குள்ளும் சிரிக்கக்கூடிய ஒரு கேள்வியாக அல்லவா இது உள்ளது.

மேலைநாடுகள் பயங்கரவாதம் என்று தாம் கருதுவது குறித்து நடத்தும் வாதப்பிரதிவாதங்களுக்கிடையில், தன்னுடைய இடைச்செருகல் மூலம் லாபம் சம்பாதிப்பதற்காகக் கதிர்காமப்பிரயத்தனம் எடுக்கும் சிறிலங்காவைப் பற்றிப் பட்டுத்தெளிந்தவர்களே தமிழர்களாகிய நாம் ஒவ்வொருவரும் (சில கோடரிக்காம்புகள் நீங்கலாக). இதன் நீட்சியாக 'பயங்கரவாதம்' என்பதைக் குறிக்கும் terror என்னும் ஆங்கிலப் பதத்தினால் பன்னாட்டளவில் நடாத்தப்பட்டுவரும் அரசியலின் சில அங்கங்களை நோக்குவது பொருத்தமாக இருக்கும்.

பயங்கரவாதம் என்று கருதப்படுவதை நியாயப்படுத்துவதோ, விமர்சிப்பதோ இக்கட்டுரையின் நோக்கமல்ல ; terror என்ற சொல் பயன்படுத்தப்பட்டுவரும் வெவ்வேறு சந்தர்ப்பங்களையும், அவற்றின் பின்புலங்களையும் பற்றிய விவகாரங்களை ஓரளவிற்கு அறிந்துகொள்வது மட்டுமே ஆகும்

'அச்சுறுத்தல்' எனப் பொருள்படும் பயங்கரவாதம் என்ற சொல்லிற்கான வேர் *terrere* என்ற லத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டது. தற்காலத்தில் தினந்தோறும் எந்தப் பத்திரிகையிலும் தலைப்புச்செய்தியாக வரத்தவறாத இச்சொல் ஐரோப்பிய மொழிப்பயன்பாட்டுக்குள் புகுந்துகொண்ட வரலாறு சுவாரஸ்யமானது.

இன்று இச்சொல் பலதரப்பாலும் பலவிதமாகத் துஸ்பிரயோகப்படுத்தப்பட்டுக் குழப்பியடிக்கப்படுவதற்குக் காரணம் இதனது பிறப்புத்தானோ என்றுகூட எண்ணத்தோன்றுகிறது. 1789 இல் மன்னராட்சிக்கெதிரான பிரெஞ்சுப்புரட்சி நிகழ்ந்தேறியது. காலம்காலமாக அரசவம்சத்தினர் அனுபவித்து வந்த சிறப்புரிமைகள் கடவுளால் அவர்களுக்கு அருளப்பட்டவை என்று நம்பப்பட்ட காலம்மாறி, மக்கள் தம் உரிமைகளுக்காக அரசை எதிர்த்துப்போராடிய முதல் புரட்சியே 'பிரெஞ்சுப்புரட்சி'.

அவ்வாறு நிகழ்த்தப்பெற்ற புரட்சியை அடுத்து சனநாயக விழுமியங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் கொண்டுவரப்பட்ட regime de la terreur எனப்படும் அரசியல் சீர்திருத்தச்சட்டத்திலேயே லத்தீன் ( வரிலிருந்து உருவாக்கப்பட்ட terreur என்ற சொல் முதன்முதலில் கையாளப்பட்டது. 'எதிர்ப்பு அல்லது மிகையான செயல்களின் அரசு' என்று அக்காலத்தில் கருதப்பட்ட அச்சீர்திருத்தம் ஆனது தற்காலத்தில் terror என்னும் சொல்லால் குறிக்கப்படுவதை வைத்து அர்த்தப்படுத்திக்கொண்டால் 'பயங்கரவாதத்தின் அரசு' என்றல்லவா பொருள்படும்!

சனநாயகத்துக்கான உலகின் முதலாவது முன்னெடுப்பாகிய 'பிரெஞ்சுப்புரட்சி' இப்படிப் பழிப்பெயர் ஏற்பது தகுமா? பிரெஞ்சுப்புரட்சி மூலம் ஆட்சி கவிழ்க்கப்பட்ட மன்னன் லூயிஸின் ஆட்சி தொடர்ந்திருந்தால் நிச்சயமாகப் பிரெஞ்சுப் புரட்சி 18ஆம் நூற்றாண்டின் 'படுமோசமான பயங்கரவாதச் செயல்' ஆக வரலாற்றில் முத்திரை குத்தப்பட்டிருக்கும். ஏனென்றால் வெற்றி பெறும் தரப்பினரே எப்போதும் வரலாற்றைப் பதிப்பிக்கிறார்கள்.

இவ்வாறு terror என்ற சொல்லின் பிறப்பே சற்று விவகாரமான விடயமாக இருந்திருக்கிறது. இருந்தபோதிலும் ஐரோப்பா அளவில் இச்சொல் பெரிதாகப் பிரபல்யம் அடைந்தது ரஷ்யப்புரட்சியை அடுத்தே. 1881இல் 'மக்களின் விருப்பம்' (Narodnaya Volya) என்றதொரு அமைப்பு ரஷ்ய மன்னன் அலெக்சாண்டருக்கு எதிராகக் குண்டுவீச்சை நிகழ்த்தி அடியெடுத்துக் கொடுக்க, 1917இல் பொல்சேவிக்கினரால் நடாத்தப்பட்ட ஒக்ரோபர் புரட்சியுடன் terror என்ற சொல் உலகளவில் பிரபல்யம் அடைந்தது.

இருந்தபோதிலும் பிரெஞ்சுப் புரட்சியில் போலல்லாது சற்றே மாறுபட்டு 'எதேச்சதிகார மன்னராட்சிக்கெதிரான வன்முறைகளைக் குறிப்பதாகவே terror என்ற சொல் ரஷ்யப்புரட்சியின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

அதாவது to rebel (கலகம் விளைவித்தல்) என்ற அர்த்தத்திலேயே terror அப்போது கையாளப்பட்டிருக்கின்றது. 'கலகம்' என்ற சொல் கூட உறுதியான அர்த்தத்தைக் கொண்டிருக்கவில்லை.

கூட்டத்தில் குழப்பம் விளைவிப்பதை 'கலகம்' என்று குறிப்பிடலாம். அதேநேரம் மன்னர் அல்லது மகாராணியின் எதேச்சதிகார மேலாதிக்கத்திற்கு எதிரான மேலைத்தேசத்தவர்களின் முயற்சிகள் அமெரிக்கப் புரட்சி, பிரெஞ்சுப்புரட்சி என்றெல்லாம் அழைக்கப்படும் அதேநேரம், அதற்கு எந்தவிதத்திலும் நியாயப்பாடுகள் குறைந்து விடாத இந்திய சுதந் திரத்துக்கான முதலாவது பரந்துபட்ட எழுச்சியை 'சிப்பாய்க் கலகம்' என்று அழைப்பது எவ்விதத்தில் நியாயப்படும் ? இந்திய ஆளும் வர்க்கமும் தங்களின் 'மேன்மை தங்கிய மகாராணி மீதான பிரிட்டிஷ் விசுவாசத்தை' வெளிப்படுத்தும் வகையில் தங்கள் புரட்சியாளர்களைக் கலகக்காரர்களாகவே வரலாற்றில் பதிந்துகொண்டு விட்டார்கள்.

இவ்வாறான வரலாற்றைக் கொண்ட terror இற்குப் பல வடிவங்கள் உண்டு. மேலைநாடுகளில் சூழல் மாசுபடுத்தப்படுவதை எதிர்க்கும் கடும்போக்காளர்கள் கூட green terrorists என அழைக்கப்படுகிறார்கள். எல்லாச் சொற்களையும் அவற்றின் மொழிபெயர்ப்புச்சொற்கள் முழுமையாக உணர்த்தி விடுவதில்லை. இலக்கிய வழக்கில் மட்டுமன்றி பேச்சடிப்படையில் ஏற்படும் உணர்வு ரீதியாகவும் சொற்களின் அழுத்தங்கள் மாறுபடுகின்றன.

toilet என்பதன் தமிழ்ச் சொல்லை நாம் சொல்லத் தயங்குவதேன்? அந்தச் சொல்லை நமக்கு அந்நியமான மொழியில் சொல்லிக்கொள்வது நெருடல் அற்றிருப்பது உணர்வுரீதியானதொரு விடயமே. அதற்கீடாகப் பரவலாக உள்ள சொல் போர்த்துக்கேய மொழியாய் இருந்தாலும், நீண்ட காலமாகவே நம்முடைய மொழியிலே வழங்கி வந்த காரணத்தினால் அதன் அந்நியம் குறைந்து அச்சொல்லும் அநாகரிகமாகப் போய்விட்டது. அதாவது சொற்களின் பிரயோகம் வெறுமனே அர்த்தம் சார்ந்தது மட்டுமல்ல; அதைத் தாண்டி உணர்வியல் அடிப்படையிலானதும் கூட. இந்த உணர்வுகளை ஒவ்வொருவரும் சார்ந்து சமூகப் புறநிலை தீர்மானிக்கின்றது.

அந்த வகையிலேயே முற்றிலும் மாறுபட்ட பின்னணியைக் கொண்ட terror என்ற சொல்லின் அதிதீவிர வடிவமாக சர்வதேசம் இன்றுணர்வது 'தற்கொடைக்குண்டுத் தாக்குதல்' களையே! உலக நிலவரங்கள் அப்படி நிர்ப்பந்திப்பதால் பொதுவாக மேலைநாடுகளே இங்கு 'சர்வதேசம்' என்று குறிப்பிடப்படுகின்றது. அதிலும் வளர்ச்சியடைந்த நாடுகளின் அதிநவீன ஆயுதங்களின் செயற்றிறனைக் கேள்விக்குள்ளாக்கும் வகையிலான இந்த தற்கொடைக்குண்டுத் தாக்குதல்கள் சர்வதேசத்தை (மேலைநாடுகளை) சிக்கலான நிலைமைகளுக்கு இட்டுச்சென்றுள்ளன.

செப்ரெம்பர் 11 இல் தொடங்கியது ஈராக்கில் தினந்தோறும் தவறாது உயிர்குடித்து வருவதைப் பத்திரிகைகள் வாயிலாக அறியமுடிகிறது. அரசுகள் தத்தம் அரசியல், பொருளாதார, ராணுவ நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு இடையூறாக உள்ள இத்தகைய 'தற்கொடைக் குண்டு'த் தாக்குதல்களை உணர்ந்துகொள்வதற்கு மேலைத்தேசங்கள் கடும் பிரயத்தனம் எடுத்துவருகின்றன.

'மத அடிப்படைவாதமும், வறுமையுமே மனிதர்களை இவ்வாறான முடிவுகளுக்கு இட்டுச்செல்கின்றன. 3ஆம் உலகநாடுகளிலே நிலவிவரும் வேலையில்லாப் பற்றாக்குறையை அதிலும் முஸ்லிம் நாடுகளிலே மதவாதிகள் தங்களுக்கேற்ற வகையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இவ்வாறு மூளைச்சலவைக்குட்பட்டவர்கள் சுயபிரக்ஞை அற்று வெடித்தழிந்து போகிறார்கள்...', இவ்வாறான மேலைத்தேசங்களின் கண்டுபிடிப்புகள் நீண்டுகொண்டு போனதொரு கட்டத்திலே தான் லண்டன் நகரிலே 07.07 அன்று குண்டுவெடிப்புகள் நிகழ்ந்தன. அடிப்படைவாதமற்ற, தனிநபர் ஆர்வங்களைத் தூண்டும் ஆயிரமாயிரம் உல்லாசங்களைக் கொண்ட லண்டன் சூழலிலே நல்ல வேலையுடன் வசதியாக வாழ்ந்து வந்தவர்களே அந்த தற்கொடைக்குண்டுத் தாக்குதல்களை நடாத்தியிருக்கிறார்கள் என்பதுவும் தெரியவந்தது.

ஐயைய்யோ! இவ்வளவு காலமாக உளவியல்-நிபுணர்கள், குற்றப் புலனாய்வாளர்கள், வரலாற்றாசிரியர்கள் என்று அனைவரும் சேர்ந்து கண்டுபிடித்ததாக நினைத்த கதையெல்லாம் கந்தலாகிவிட்டதே! இவ்விடத்தில் RAND எனப்படும் 'பயங்கரவாதம்' குறித்து ஆராயும் பன்னாட்டு-நிபுணர்களைக் கொண்டதொரு அமைப்பைச் சேர்ந்த பிறயன் யென்கின்ஸ் terror இற்கு 'விளைவுகள் அல்லது பயன்களைக் கருத்திற் கொண்டு நிகழ்த்தப்படும் வன்முறை' என வரைவிலக்கணம் கொடுக்கிறார்.

இதற்கு மேலாக தற்கொடைக் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பாக விளங்கிக்கொள்ள விரும்பாத நாடுகளின் 'வேலை மினைக்கெட்ட கண்டுபிடிப்புகளுக்கு' அப்பாலே, சில வரலாற்றாசிரியர்களும், உளவியலாளர்களும் குறிப்பிடுவதுபோல 'ஏற்றுக்கொள்ளமுடியாத மோசமான அரசியல், ராணுவ ஒடுக்குமுறைகளுக்கு உள்ளானவர்கள் இவ்வாறான தற்காப்பு நடவடிக்கைகளுக்குத் தயாராகிறார்கள் அல்லது மதரீதியான அடிப்படைவாதங்களில் ஊறியதன் காரணமாகத் தம்மை இதற்கு ஒப்படைக்கிறார்கள்' என்ற ஒழுங்கான விளக்கங்களும் உண்டு.

ஆனாலும், லண்டனில் அண்மையில் நடாத்தப்பெற்ற தற்கொடை குண்டுத்தாக்குதல்களை அடுத்து பிரித்தானியப்பிரதமர் 'எந்தக் காரணமும் தற்கொடை குண்டுத்தாக்குதல்களை நியாயப்படுத்தி விடமுடியாது; இங்கும், எங்கும்' என்றிருக்கிறார். தனது கருத்தின் மூலம் அவர் தாக்குதல்களின் நோக்கத்தையோ, மனித இழப்புக்களையோ கண்டிப்பதற்குப் பதிலாக ஒட்டுமொத்தமாக தாக்குதல்-வடிவத்தையே குறிப்பிட்டிருக்கின்றார்.

எதையோ நினைத்துக்கொண்டு, எத்தனைக்கோ முகங்கொடுத்து ஈராக்கை ஆக்கிரமித்தும், அதற்குப் பின்னர் அங்கு நிகழும் நிலவரங்கள் அதிநவீன யுத்த தளபாடங்களின் செயற்றிறனையே கேள்விக்குள்ளாக்கி நிற்க, இப்போது வெளியே ஆசையாகத் தொடக்கிய போர் வீட்டின் நடுவே புகுந்துவிட்டதே, ஒருதலைப் பட்சமான அவரது வெறுப்புக்குக் காரணமாகலாம்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 12. 08 . 2005
மின் அஞ்சல :— weekly @ eezhanatham.com

## அரசின் துரோகச்செயல்..!

மீண்டும் ஒருமுறை சிறிலங்கா படையினரினதும், துணைக்குழுக்களினதும் துரோகத்தனத்திற்கு இரண்டு போராளிகள் பலியாகியுள்ளனர்.

மட்டக்களப்பு காஞ்சிரங்குடாப் பகுதியில் வைத்து அரசியற்பணி மேற்கொள்ளச்சென்ற போராளிகள் மீது தாக்குதலை மேற்கொண்டு சமாதானத்திற்கு எதிரான கொடுஞ்செயலை அரசு வெளிப்படுத்தியுள்ளது.

போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது கருணா குழுவினரின் ஆயுதங்களை களைவதற்கு அரசு எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது என சிறிலங்காவின் சமாதானச் செயலக பணிப்பாளர் ஜெயந்த தனபால தெரிவித்திருக்கின்ற சூழலில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

அரசியல் பணியினை மேற்கொள்ளும் போராளிகள் மீதான தாக்குதல்களும் அரசியல் அலுவலகங்கள் மீதான தாக்குதல்களும் அதிகரித்துக்கொண்டு வருகிறதேயொழிய அதனைத் தடுப்பதற்குரிய எந்தச் செயற்பாடுகளையும் அரசு மேற்கொண்டதாக இல்லை.

சமாதான முயற்சிகளை முன்னகரவிடாது சமாதானப் பாதையில் அரசு தடைக்கல்லை போட்டுக்கொண்டு போராளிகளின் மீதான தாக்குதல்களை ஊக்குவித்துவருகின்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அரசு செயற்படாது அதிலிருந்து விலகி செயற்படுவதோடு, சமாதானச் செயற்பாட்டிற்கு முற்றிலும் முரணான காரியங்களையே மேற்கொண்டுவருகிறது.

இந்த நிலையில் போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்துத் தொடர்பான விடயத்திலும் அரசு செய்ய வேண்டிய பொறுப்பை தட்டிக்கழித்துக்கொண்டு போராளிகள் மீது இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்வதானது அரசு வலிந்து யுத்தத்திற்கு புலிகளை இழுப்பதையே காட்டுகிறது.

இந்தநிலையில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட அரசு தவறியிருப்பதன் விளைவாக நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையானது போராளிகள் மீதான இந்தத் தாக்குதலோடு நிலைமையை மோசமான ஒரு நிலைக்கு கொண்டுசென்றுவிடக்கூடிய சூழலே காணப்படுகிறது.

சமாதானத்திற்காக எதுவரை பொறுப்பது என புலிகள் இயக்கம் சிந்திக்கத் தலைப்படும் சூழலில் போராளிகளின் பாதுகாப்பிற்கு அரசு அச்சுறுத்தல் விடுப்பதன்மூலம் எதற்காக பொறுத்திருக்கவேண்டும் என்ற நிலைக்கு புலிகள் இயக்கத்தை தள்ளிவருகிறது.

சமாதான முயற்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து போராளிகள் மீதான தாக்குதல்களையும், கெடுபிடிகளையும் அரச படைகள் மேற்கொண்டவண்ணமே உள்ளனர்.

போருக்கும், அமைதிக்கும் என புலிகள் இயக்கம் ஒரேவிதமான இழப்புக்களையே கொடுத்து வருகின்றார்கள் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டிய தரப்புக்கள் இனி கவனத்தில் கொள்ளவேண்டிய அவசியமான நிலை இன்று தோன்றியுள்ளது.

சமாதானத்துக்காக யுத்தம் செய்ததாகக் கூறிய சிறிலங்கா அரச படைகள் தமது மறைமுகமான இந்தச் செயறபாடுகள் மூலம் இன்று யுத்தத்துக்காகச் சமாதானம் செய்துவருகிறதா என சந்தேகிக்க வைக்கிறது.

அரசின் இந்த யுத்தத்திற்கான சமாதானத்தில் தொடர்ந்தும் தமிழ் மக்களும், புலிகள் இயக்கமும் இழப்புக்களையும், துயரங்களையும் சுமக்கமுடியாது.

ஆகவே அண்மையில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், தமிழர்கள் கௌரவத்தோடு வாழ்வதற்கான வழிகளைப் புலிகள் கையில் எடுத்தே தீருவர் என்று குறிப்பிட்ட வழியை நோக்கிப் புலிகளை தள்ளுகின்றனர்.

## குளிர்காய முனையும் சிங்களதேசம்

***உண்மையான அர்த்தத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையை பாதுகாக்கவேண்டும் என்பதோ அல்லது தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்பதோ சிங்களதேசம் தமிழ் மக்களின் அரசியல் ரீதியான உரிமைகளை வழங்கமுனையும் பட்சத்திலேயே சாத்தியமாகும்.***

யார் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. நாம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென சிங்கள தேசம் சிந்திப்பதுபோலத் தோன்றுகிறது.

காரணம் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்டிக்கையை சிங்களதேசத்துக்கான ஒரு பாதுகாப்பு ஒப்பந்தமாக சிங்கள தேசத்தில் கருதி செயற்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து பேணுவது தொடர்பாக ஒரு கூட்டு இணக்கத்திற்கு வரலாம் என்ற செய்திகள் வெளியாகியிருந்தன.

இதில் என்ன வேடிக்கை என்றால் அதிகாரத்தில் உள்ள பிரதமரும் அரச அதிகாரமற்ற ஒரு எதிர்க்கட்சித்தலைவரும் இத்தகையதொரு இணக்கப்பாடுபற்றி சிந்திப்பதற்கோ அல்லது வருவதற்கோ காரணம் என்ன?

சுமார் நான்கு வருட காலத்தை நெருங்கிக்கொண்டிருக்கும் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தக்காலத்தில் இதன் முழு பலாபலன்களையும் சுவைத்துக்கொண்டவர்கள் இவர்கள் என்பதாலேயேயாகும்.

காரணம், சிங்களதேசம் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் அச்சமற்ற ஒரு முழுமையான பாதுகாப்பை பெற்றுக்கொள்வதற்கு இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை பெரிதும் வாய்ப்பளித்திருக்கிறது என்பது மிகைப்படுத்தப்படாத ஒரு கூற்றாகும்.

இந்த நிலையில் இன்று சிங்களதேசத்தின் எல்லாத் தேவைகளுக்கும் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை செத்துப்போகாமல் உயிர்வாழவேண்டிய தேவை அதிகமாகவே உள்ளது.

அது சிங்களதேசம் சந்திக்கப் போகும் ஒரு தேர்தலாக இருந்தாலும் சரிதான் அந்தத் தேர்தலுக்கான பிரச்சார வேலைத்திட்டங்களுக்காக இருந்தாலும் சரிதான் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பலாபலன் நன்மை பயக்கும்.

இதனால்தான் எதிர்வரும் தேர்தலை சந்திக்கப்போகும். இரண்டு பிரதான கட்சிகளினதும் பிரதான வேட்பாளர்கள் இது பற்றிய ஒரு கரிசனையைக் கொள்வதற்குக் காரணமாகும்.

இதேவேளை கடந்த மாவீரர்நாள் செய்தியில் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் ஒரு கோரிக்கையை முன்வைத்திருந்தார். அதாவது, சிங்களதேசத்திலுள்ள பிரதான கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பான தமது தெளிவான நிலைப்பாடுகளை முன்வைக்குமாறு கோரியிருந்தார்.

ஆனால் தனித்தனியாகவோ, கூட்டாகவோ எந்தவொரு கட்சியும் தேசியத் தலைவரின் இந்தக்கோரிக்கைக்கு தெளிவான பதிலை அளிக்கவில்லை. மாறாக தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களின் ஊடாக மெதுவாக நழுவிக்கொண்ட ஒரு போக்கையே காணக்கூடியதாக இருந்தது.

உண்மையில் சிங்கள தேசம் தேசியத்தலைவர் அவர்களின் கோரிக்கையை ஒரு நாட்டின் தேசிய பிரச்சினையாகக் கருத்தில் எடுத்து உருப்படியான ஒரு உடன்பாட்டுக்கு வந்து சமாதானப்பேச்சுக்களை முன்னெடுத்திருக்கும் பட்சத்தில் இன்று தடைப்பட்டுப்போயிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் கணிசமான அளவு முன்னேறியிருக்கும்.

ஆனால், எந்தவொரு கட்சியுமே இதில் கரிசனை கொள்ளவில்லை. எல்லோருமே புரிந்துணர்வு உடன்படிக்கையை பற்றி மட்டுமே சிந்திக்கத் தலைப்படுபவர்களாக உள்ளனர்.

ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரை புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலமாக பெற்றுக்கொண்ட அனுகூலங்கள் இன்று குறிப்பிட்ட காலம்வரையான அதிக நெருக்கடியற்ற வாழ்க்கை மட்டுமே.

ஆனால், அவர்கள் எதிர்பார்த்த அரசியல் ரீதியான எந்த பலாபலன்களையும் சிங்களதேசம் வழங்கவில்லை. வழங்க எத்தணிக்கவும் இல்லை.

இந்த நிலையில் சிங்கள தேசம் மட்டும் நன்மைகளை அனுபவித்துக்கொண்டுபோகும். இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை தமிழ் மக்கள் கட்டிக்காத்துக்கொண்டிருப்பதால் எந்தப் பலனைப் பெற்றுக் கொள்ளப்போகிறோம் என்ற கேள்வி எழச்செய்கிறது.

இந்தநிலையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரை தொடர்ந்தும் சிங்களதேசத்தை நம்பி செயற்படுவதிலோ, சிங்களதேசத்தோடு இணங்கி செயற்படுவதிலோ அர்த்த மேதும் இருப்பதாகக் கருதமுடியாதுள்ளது.

இதே புரிந்துணர்வு உடன்படிக்கையைக்கொண்டு சிங்களதேசம் பெற்றுக்கொண்ட பாதுகாப்பின் ஒரு குறிப்பிட்ட அளவுதானும் தமிழ் மக்களால் பெற்றுக்கொள்ள முடியாமலே இருக்கிறது.


இறுதியாக அண்மையில் காஞ்சிரங்குடாப்பகுதியில் இரண்டு போராளிகள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமூடாக சிங்களதேசம் தமிழ் மக்களுக்கு வழங்கமுனையும் செய்திதான் என்ன?

ஆகவே உண்மையான அர்த்தத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையை பாதுகாக்கவேண்டும் என்பதோ அல்லது தொடர்ந்து கடைப்பிடிக்கவேண்டும் என்பதோ சிங்களதேசம் தமிழ் மக்களின் அரசியல் ரீதியான உரிமைகளை வழங்கமுனையும் பட்சத்திலேயே சாத்தியமாகும்.

மாறாக இதனையொரு தமது அரசியல் இலாபநட்டக் கணக்கில் முதலீடாகக் கருதி செயற்படுமாக இருந்தால் அதில் சிங்களதேசம் இறுதியில் தோல்வியையே சந்திக்கும்.

ஏனெனில், தொடர்ந்தும் தமிழ் மக்கள் சிங்களதேசத்தின் பாதுகாப்பிற்காகத் தம்மைப் பலியிட முடியாது.


**சிறி. இந்திரகுமார்**



# நேர்நோக்கு

# வாக்குறுதிகளின் காலம்

விரைவில் தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இலங்கை உள்ளது. அதில் சனாதிபதித் தேர்தலா அல்லது பொதுத் தேர்தலா முதலில் என்ற கேள்வி ஒருபுறமிருக்க தேர்தலுக்கு முன்னரான நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலையில் ஆளும் கட்சி உள்ளது.



கடந்த பொதுத் தேர்தல் நடைபெற்று மிகக்குறுகிய காலத்தில் அடுத்த தேர்தல் வர இருப்பதால் கடந்த தேர்தலில் ஆளும் கட்சியால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையென்பது பாரிய ஒரு விளைவை ஏற்படுத்தும்.

குறிப்பாக பெரும் எண்ணிக்கையிலான வாக்குகளை வைத்திருக்கும் அரச ஊழியர்களின் சம்பள உயர்வானது கடந்த தேர்தலில் வாக்குறுதி அளிக்கப்பட்ட அளவிற்கு செய்து முடிக்கப்படவில்லை.

அதே போல் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் விவகாரமும் ஏமாற்றும், இழுத்தடிப்புமாகவே சென்று கொண்டிருக்கிறது.

அதைவிட மோசமாக வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு இருக்கின்றது. எரிபொருளின் விலை குறிப்பாக பெற்றோலின் விலை ஐம்பது வீதத்துக்கு மேற்பட்டதொகையால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியில் அதிகரித்திருப்பது விலைவாசி ஏற்றத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக தற்போதைய ஆட்சியானது பலமற்ற சிறுபான்மை அரசாக நாடாளுமன்றத்தில் இருப்பது வெளிப்படை. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விடவில்லையே தவிர அரசாங்கம் செயலற்றுப் போயுள்ளது என்பதை மறுக்கமுடியாது. அதிலும் தேர்தல்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் அதன் இன்றைய நிலை ஆளும் கட்சிக்குச் சாதகமானதல்ல.

மேலும் எந்தவித கொள்கையுடன்பாடு

**அடுத்த தேர்தலொன்றை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு சிறிலங்காசெல்கின்றது. பாரிய நிதிநெருக்கடியில் சிக்கித்தவிக்கும் சிறிலங்கா சுமார் 100 கோடி ரூபா செலவில் மீண்டும் ஒரு தேர்தலை விரைந்து சந்திக்கவேண்டியுள்ளது.**

மற்ற முரண்பட்ட கொள்கைகளின் கூட்டுக்கு வாக்களித்த மக்கள் இவ்வாறான கூட்டு மீண்டும் ஏற்படுமாயின் அதற்கு வாக்களிக்கத் தயங்குவர். ஏனெனில் ஆறு வருடங்களுக்கென தெரிவுசெய்யப்பட்ட 13 ஆவது நாடாளுமன்றம் சுமார் 14 மாதங்களிலேயே இந்நிலையை அடைந்துள்ளதால் இதே கூட்டணி மீண்டும் அமைந்தால் அதில் மக்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்.

இன்று சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தில்தான் நாடாளுமன்றம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் நிறைவேற்று அதிகாரம் கூட பெரும் சர்ச்சையில் சிக்கிக் கொண்டுள்ளது. அதாவது சனாதிபதியின் பதவிக்காலம் எப்போது முடிவடையும் என்பதில் எழுந்துள்ள வாதப்பிரதிவாதங்கள் அப்பதவியின் உறுதித்தன்மையையும் கேள்விக்குரியதாக்கியுள்ளது.

இதன் காரணமாக இப்பொழுது பதவியிலிருக்கும் அரசாங்கத்தினுடனான இராசதந்திர நகர்வுகள், ஒப்பந்தங்கள் என்பன ஏனைய நாடுகளால் அக்கறையுடன் மேற்கொள்ளப்படுபவையாக இராது. ஏனெனில் அரசாங்கங்கள் மாறும்போது அவற்றால் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகளும் மாறுபடுவது சிறிலங்காவில் வழமையானதாகும்.

உதாரணமாக ஆயுதக் கொள்வனவு தொடர்பான ஒப்பந்தங்கள் கூட அரசாங்கம் மாறும்போது கைவிடப்பட்டிருக்கின்றமை கடந்த கால நிகழ்வுகளாகும்.

இதேவேளை கடந்த வருட இறுதியில் சுனாமி இயற்கை அனர்த்தத்தால் பேரழிவைச் சந்தித்த மக்கள் தமது இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கு முட்டுக்கட்டையிடப்பட்டு விட்டது. இம்முட்டுக்கட்டையை உடைத்துச் செயற்பட சனாதிபதிக்கு இயலவில்லை. அல்லது அவர் விரும்பவில்லை.

அத்துடன் யுத்த நிறுத்த ஒப்பந்தமும் சமாதான நடவடிக்கைகளும் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பதில் அனுசரணையாளர்களுக்குக் கூட சந்தேகம் எழுந்துள்ளது. இது குறித்து அவர்களால் அறிக்கையிட முடிகிறதே தவிர சீர்செய்யவோ அல்லது முன்னேற்றமடையச் செய்யவோ முடியவில்லை. மாறாக அது சீர்குலைந்து கொண்டு செல்வதையிட்டு கவலை தெரிவிக்க மட்டுமே முடிகின்றது.

இந்நிலையில்தான் அடுத்த தேர்தலொன்றை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்கு சிறிலங்கா செல்கின்றது. பாரிய நிதிநெருக்கடியில் சிக்கித்தவிக்கும் சிறிலங்கா சுமார்100 கோடி ரூபா செலவில் மீண்டும் ஒரு தேர்தலை விரைந்து சந்திக்கவேண்டியுள்ளது.

அத்துடன் முடிந்துவிடாது. ஏனெனில் சனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றை ஒருவருடகாலத்திற்குள் அது சந்திக்கவேண்டியுள்ளமையால் இச் செலவீடு 200 கோடியைத் தாண்டும் என எதிர் பார்க்கலாம்.

அது மட்டுமல்லாது தேர்தல் குறித்து தமது சிந்தனையைச் திசை திருப்பியுள்ள நிலையில் அரசியல்வாதிகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களையோ யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களையோ மட்டுமல்ல விலைவாசி ஏற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களைக் கூட இவர்கள் எண்ணிப்பார்க்கப்போவதில்லை.

வியூகமும் பதில் வியூகமுமாக வகுத்து அதிகாரத்தைக் கைப்பற்றத் துடிக்கும் இவர்கள் வாக்குறுதிகளை மட்டும் அள்ளிவீசும் காலமாகவே இது அமையப்போகிறது.

**வேலவன்**

---

# மறக்கமுடியாத மைலந்தனை படுகொலை

இலங்கைத் தீவில் சிங்கள பேரினவாதிகளால் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வந்த தமிழர்கள் எப்போது பேரினவாதத்திற்கு எதிராக கிளர்ந்தெழுந்தார்களோ குறிப்பாக தமிழர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள எப்போது ஆயுதம் ஏந்தினார்களோ அப்போதே சிங்கள அரசு தனது படைகளை பயன்படுத்தி தமிழின அழிப்பில் இறங்கிவிட்டது.

**வடக்கு கிழக்கு தமிழின படுகொலை மலிந்த மண்ணாக மாறியது. அதிலும் மட்டக்களப்பு அதிகமான படுகொலைகளை சந்தித்துள்ளது. இன்றும் அம் மக்களிடம் அந்நாளைப்பற்றி ஏன் குறிப்பிட்ட அவ்வாண்டைப் பற்றிக் கேட்டுப்பாருங்கள் கண்ணீருடன் கதை கூறுவார்கள்.**

அதன் பின் வடக்கு கிழக்கு பகுதி ஏன் இத் தீவில் எங்கெங்கெல்லாம் தமிழன் வாழ்கிறானோ அங்கெல்லாம் சிங்களத்தின் தமிழின அழிப்பு தொடர்ந்தது. இதன் மூலம் சிங்கள தேசம் எதிர்பார்த்தது வேறு. அதாவது இவ்வாறு தமிழர்களை அழிப்பதன் மூலம் தமது அடக்குமுறைக்கு எதிராக தமிழ் மக்கள் கிளர்ந்தெழுவதனை தடுக்கலாம், இதன் மூலம் இத்தீவை தனிச் சிங்களத் தீவாக மாற்றலாம் எனவும் எண்ணியே தமிழின அழிப்பில் சிங்கள தேசம் அன்று கண்மூடித்தனமாக இறங்கியது.

அன்றைய சூழலில் இலங்கை வாழ் தமிழர்கள் சிங்களவர்களாக மாற்றப்பட்டுக்கொண்டிருந்தனர். மாற மறுத்தவர்கள் மரணத்தை சுவைக்க வேண்டி வந்தது. ஆனால் இதற்கப்பால் எந்தவொரு இனத்தின் மீது அடக்குமுறையும் ஒடுக்குமுறையும் கட்டவிழ்த்து விடப்படுகிறதோ அங்குதான் விடுதலை உணர்வும் விடுதலைக்கான வழிகளும் அந்த மக்கள் மத்தியில் கொழுந்துவிட்டெரியும் என்பதற்கு சாட்சியாக தமிழ் மக்கள் சிங்கள பேரினவாதத்திற்கு எதிராக தமது போராட்டத்தினையும் முனைப்புடனேயே மேற்கொண்டு வந்தனர்.

ஆனால் சிங்கள அரசும் அதன் படைகளும் தமிழின அழிப்பில் கங்கணம் கட்டி நின்றதே தவிர தமிழர்கள் உரிமையுடனும், சுதந்திரமுடன் வாழ்வதற்கான எவ்வகை வழிகளையும் மேற் கொண்டதாக இன்றுவரை இல்லை.

அந்த வகையில் வடக்கு கிழக்கு தமிழின படுகொலை மலிந்த மண்ணாக மாறியது. அதிலும் மட்டக்களப்பு அதிகமான படுகொலைகளை சந்தித்துள்ளது. இன்றும் அம் மக்களிடம் அந்நாளைப்பற்றி ஏன் குறிப்பிட்ட அவ்வாண்டைப் பற்றிக் கேட்டுப்பாருங்கள் கண்ணீருடன் கதை கூறுவார்கள்.

அந்த வகையில்தான் மட்டக்களப்பு மைலந்தனையில் நடந்த தமிழின படுகொலை இடம்பெற்று பதின்மூன்றாண்டுகள் கடந்துவிட்டன. 09.08.1992 ஆம் ஆண்டு மட்டு நகர் தனது வழமையான செயற்பாடுகளோடு ஒன்றித்துப்போயிருந்தது. குறிப்பாக மைலந்தனை மக்கள் அலுவலகங்களிலும், பாடசாலைகளிலும், வேலைத்தளங்களிலும் எதிர்கால கனவுகளோடு இருந்த நேரம் இனப் படுகொலைக்கென்றே உருவாக்கப்பட்ட படையினர் போல் மைலந்தனைக்குள் சிங்களப் படைகள் புகுந்து விசாரணையின் பேரில் தங்களது காடைத்தனமான வேலைகளில் வெறித்தனமாக இறங்கினர்.

பூவும்-பிஞ்சும் குருத்தோலை-காவோலை என்ற வேறுபாடின்றி காட்டுமிராண்டித் தனமான தமது படுகொலை வேலையில் சிங்கள படைகள் ஈடுபட்டன. இதில் எல்லாவற்றையும் முன்கூட்டியே அறிந்த சிறிலங்கா பொலிஸ் கைகட்டி வேடிக்கை பார்த்தது. வேலியாக இருக்க வேண்டிய அவர்களே பயிரை மேய்வதற்கு வழி சமைத்தார்கள் "ஐயா நாங்கள் அப்பாவிகள்". "ஐயா நான் ஐந்து பிள்ளைக்கு தகப்பன்" "சேர் நான் படிக்கிறன்" என்றெல்லாம் அந்த மக்கள் கையெடுத்து கும்பிட்டபடி சிங்கள படைகளினது கால்களில் வீழ்ந்தனர்.

கொல்லாமை சொன்ன புத்தனை கையெடுத்து வணங்குகின்ற அந்த படையினர் அந்த அப்பாவித் தமிழ் மக்கள் தமது காலில் கையெடுத்து கும்பிட்டபடி கிடந்தவர்களின் நெஞ்சில் சப்பாத்துக் காலால் மிதித்தபடி குருவிகளை சுடுவதைப் போன்று சுட்டுத் தள்ளினார்கள். இந்த படுகொலையால் 50 பொதுமக்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். இந்த இனப் படுகொலையின் பதின்மூன்றாண்டுகள் கடந்தனவே தவிர அதன் நினைவுகள் இன்றும் எம் மக்கள் மத்தியில் சிங்கள தேசத்திற்கு எதிரான உணர்வுகளாக காணப்படுகின்றன.


காலம் எல்லாவற்றுக்கும் விடை தரும். அந்த வகையில் படுகொலைகளுக்கு எதிராகவும் ஒரு விடைதந்தது. அதுதான் தமிழீழ விடுதலைப்புலிகளின் பலம்.

**மு.தமிழ்ச்செல்வன்**

# சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளரும் அரச ஊடகங்களும்

சிறிலங்காவின் அரச ஊடகங்களின் இன்றைய பேசு பொருளாகத் தேர்தல் ஆணையாளர் மாறியுள்ளார். ' அரசாங்கத்தின் எதிரியைத் தாக்குவதே அரச ஊடகங்களின் வேலை' என்று தற்போதய அரசின் முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர போதித்ததற்கமைய அவை செயற்படுகின்றன. அந்த வகையில் இன்றைய சிறிலங்கா அரசின் தற்போதய எதிரியாக விளங்கும் சிறப்பினை சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்கா பெற்றிருக்கிறார்.

சிறிலங்கா அரசாங்கமும் அதன் ஊடகங்களும் இவ்வாறு வரிந்து கட்டிக்கொண்டு வசைபாடுமளவுக்கு தேர்தல் ஆணையாளர் என்ன செய்து விட்டார்? அடுத்த சனாதிபதித் தேர்தல் எப்போது நடத்தப்பட வேண்டுமென் பதைத் தீர்மானிப்பதில் அரசியலமைப் பின்படி "அதிகாரம் பெற்றவராக" விளங்கும் தேர்தல் ஆணையாளர் அடுத்த தேர்தல் திகதி பற்றி ஊடகங்களுக்கு வெளியிட்ட கருத்துக்களே அரச ஊட கங்களின் சன்னதத்துக்குக் காரணமாகும்.



அப்படி என்னதான் சொல்லி விட்டார் தயானந்த திசாநாயக்கா? 2006 ஆம் ஆண்டு நவம்பரிலேயே சந்திரிகா அம்மையாரின் பதவிக்காலம் முடிவடைகிறது என சிறிலங்கா சுதந்திரக்கட்சி அடம்பிடிப்பதற்கு ஆதாரமாகக் காட்டப்படும் 2ஆவது முறையாக 2000 ஆம் ஆண்டில் சந்திரிகா அம்மையார் சனாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டமையை தேர்தல் ஆணையாளர் கேள்விக்குள்ளாக்கி விட்டார். இந்தத் தொனியில் லக்பிம பத்திரிகையின் வார இதழுக்கும், தினசரிக்குமாக இரண்டு செவ்விகளை அவர் வழங்கியிருந்தார்.

"நீங்கள் ஒரு ஆடையை புதிதாக வாங்கி அணிகிறீர்கள். அதை அலுமாரியுள் வைத்துவிட்டு ஒருமாதம் கழித்து மீண்டும் அணியும்போது அதனைப் புதிய ஆடை என்று சொல்லமுடியுமா?"

இதுதான் ஆணையாளர் எழுப்பிய கேள்வி. சனாதிபதித் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பதில் சந்திரிகா அம்மையார் 2ஆவது முறை சத்தியப்பிரமாணம் செய்தது பற்றிய விடயம் பற்றிக் கேட்கப்பட்டதற்கே அவர் இவ்வாறு பதிலளித்திருந்தார்.

வந்தது வினை

சனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிப்பதே தனது முதற்பணி என்று பிரகடனப்படுத்தி, அதற்காக தனது வேலைப்பளுவைக் குறைப்பதற்காக "சபை முன்னவர்" பதவியையும் துறந்த; சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, "இனிமேலும் தேர்தல் ஆணையாளரைப் பக்கச்சார்பற்றவராகக் கருத முடியுமா?" எனப் பகிரங்கமாகக் கேள்வியெழுப்பிவிட்டார்.

" தேர்தல் ஆணையாளர் தனது அதிகார வரம்புக்கு அப்பாற் சென்று கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்த கருத்து ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்தே" என்றும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அத்தோடு " தேர்தல் நடத்தப்பட வேண்டிய திகதி குறித்து உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையிலிருக்கும்போது தேர்தல் ஆணையாளர் அவ்விடயத்தில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய வகையில் கருத்து வெளியிட்டிருப்பது அவருடைய வரையறையை மீறிய செயல்" எனவும் பத்திரிகையாளரிடம் தெரிவித்தபின்னர்,

"எனவே இனியும் தேர்தல் ஆணையாளரைப் பக்கச்சார்பற்றவர் எனக் கருதமுடியுமா?" எனக் கேள்வி எழுப்பியிருக்கிறார் சிறிசேன.

இவ்வளவும் போதாதா அரச ஊடகங்களுக்கு? தேர்தல் ஆணையாளரை வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டன அவை. அச்சு ஊடகங்களில் ஆசிரியர் தலையங்கங்களும் இலத்திரனியல் ஊடகங்களில் ,செய்திகள், ஆய்வுகள், விமர்சனங்கள் எனவும் தேர்தல் ஆணையாளரின் தலை உருட்டப்படுகிறது.

இந்த ஊடக கூச்சல்களை தேர்தல் ஆணையாளர் எவ்வாறு பார்க்கிறார் என்பதே முக்கியமான விடயம். அவரது செயலூக்கத்தை இந்த சன்னதங்கள் எவ்வாறு பாதித்துள்ளன?

"அரச ஊடகங்களின் ஊக்குவிப்பு மருந்து" என தயானந்த திசாநாயக்க இதனை வர்ணித்திருக்கிறார். இந்த ஊக்க மருந்துக்காகதான் அவற்றுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறியிருக்கிறார்.

"அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சனாதிபதித் தேர்தல் சட்டம் என்பவற்றின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி அடுத்த சனாதிபதித் தேர்தலுக்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன் எனக் கூறியதனால் அரச ஊடகங்கள் எனக்கெதிராக ஆயுதமேந்தியுள்ளன. அவற்றின் இந்த நடவடிக்கை தொடர்பாக நான் வியப்படையவில்லை.

2000 ஒக்ரோபர் பொதுத் தேர்தலின் போது வாக்காளர்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக வாக்குச்சீட்டுக்களில் ஸ்ரிக்கர் ஒட்டுவதை நான் அறிமுகப்படுத்தியபோதும் அரச ஊடகங்கள் இவ்வாறுதான் நடந்து கொண்டன" என இதனை விபரித்துள்ளார் ஆணையாளர்.

இதன் பின்னர் தேர்தல் திணைக்களத்திலிருந்து "தன்னை வெளிக் காட்டிக் கொள்ள விரும்பாத உயர் அதிகாரி" ஒருவரினால் மேலும் காத்திரமான தகவல்கள் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன்படி தேர்தல் ஆணையாளரின் கையில் பிரமாஸ்திரம் இருக்கிறது என்பதை அந்த அதிகாரி விளக்கியுள்ளார்.

எந்த அச்சுறுத்தலுக்கும் தேர்தல் ஆணையாளரோ தேர்தல் திணைக்களமோ பயந்துவிடவில்லை. தேர்தல் ஆணையாளரின் செயற்பாட்டில் உடன்பாடில்லாதவர்கள் உயர் நீதிமன்றை அணுக வேண்டுமேயொழிய வெறுமனே விமர்சிப்பது அர்த்தமற்றது என்ற அவர்; சிறிலங்காவின் அரசியலமைப்பின் பிரதி தேர்தல் ஆணையாளரிடமும் இருக்கிறது என நினைவூட்டினார்.

அரசியலமைப்பின் படி சனாதிபதித் தேர்தல் குறித்த தனது தீர்மானத்தை "தற்றுணிவு அதிகாரத்தின்படி" எடுத்து அறிவிக்க ஆணையாளர் தயாராக உள்ளார். இந்த விடயத்தில் அவர் இறுக்கமாக இருக்கிறார். "நான்தான் சனாதிபதித் தேர்தல் திகதியை தீர்மானிப்பேன். அதனை வேறு எவரும் தீமானிக்கமுடியாது" என்பதே ஆணையாளரது நிலைப்பாடு என்பதை வலியுறுத்தியவர் சிறிலங்கா அரசியலமைப்பின் மூன்றாவது திருத்தத்தின் ஈ (I), (II) சரத்துக்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

என்ன சொல்கின்றன அந்தச் சரத்துக்கள்?

சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட ஆளானவர்.

(I) பதவியிலிருக்கும் சனாதிபதியெனில் அவரது முதலாவது பதவிக்காலம் தொடங்கிய திகதிக்கு நேரொத்ததான அந்தத் தேர்தல் நடத்தப்பட்ட ஆண்டின் (அத்தகைய தேர்தலுக்குப்பின்னரான திகதியொன்றாக இருப்பதான) அல்லது அடுத்துவரும் ஆண்டின் அத்தகைய திகதிகளில் எத்திகதி முந்தி யதோ, அத்திகதியிலிருந்து தொடங்குவதாக 6 ஆண்டுகள் கொண்ட தவணையொன்றிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

(II) அத்தகைய ஆள் (சனாதிபதியாக வெளிப்படுத்தப்பட்டவர்) பதவியிலிருக்கும் சனாதிபதியல்லரெனில் அத்தகைய தேர்தல் முடிவு வெளிப்படுத்தப்படும் திகதியன்று தொடங்குவதாக 6 ஆண்டுகள் கொண்ட தவணையொன்றிக்கு பதவி வகித்தல்வேண்டும்.


எனவே இங்கு பதவியிலிருப்பவரே மீளவும் சனாதிபதியாக 1999இல் தெரிவு செய்யப்பட்டதால் அவரது பதவிக்காலம் பற்றிய கருத்து ஈ(I) ஆகும். அது'.... அத்தகைய திகதிகளில் எத்திகதி முந்தியதோ, அத்திகதியிலிருந்து....' எனக் குறிப்பிடுவதே இங்கே பொருத்தப்பாடுடையது எனத் சிறிலங்காவின் தேர்தல் திணைக் களமும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்காவும் கருதுவது கோடிகாட்டப்பட்டுவிட்டது.

எனவேதான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அக்கட்சியின் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஊடகங்களும் பதற்றமும் விசனமும் அடைந்து காணப்படுகின்றன. ஆகவேதான் அவை நெறிமுறைகளுக்கும் அப்பாற்பட்ட வகையில் ஆணையாளரைத் தூசிக்கின்றன.

இந்த தூசிப்புக்களுக்கெல்லாம் பணிந்து விடாமல் ஒரு அதியுயர் அதிகாரி என்ற வகையில் தேர்தல் ஆணையாளர் நடந்து கொள்வாராக இருந்தால் சிறிலங்காவின் மக்கள் தனது நிர்வாக இயந்திரத்தின் மேலாவது சிறிது நம்பிக்கை கொள்ளமுடியும். இல்லாவிடில் அவர்களைக் காப்பாற்ற கௌதமபுத்தராலும் இயலப்போவதில்லை.

**"நீங்கள் ஒரு ஆடையை புதிதாக வாங்கி அணிகிறீர்கள். அதை அலுமாரியுள் வைத்துவிட்டு ஒருமாதம் கழித்து மீண்டும் அணியும் போது அதனைப் புதிய ஆடை என்று சொல்ல முடியுமா?'' இதுதான் ஆணையாளர் எழுப்பிய கேள்வி. சனாதிபதித் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பதில் சந்திரிகா அம்மையார் 2ஆவது முறை சத்தியப்பிரமாணம் செய்தது பற்றிய விடயம் பற்றிக் கேட்கப்பட்டதற்கே அவர் இவ்வாறு பதிலளித்திருந்தார்.**

**பு.சத்தியமூர்த்தி**



## பாதுகாப்பாகத் தரையிறங்கிய டிஸ்கவரி

பதினான்கு நாட்கள் விண்வெளிப் பயணத்துக்குப் பிறகு அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் நாஸாவின் டிஸ்கவரி விண்வெளி ஓடம் அந்நாட்டு மேற்குப்பகுதி கலிபோர்னியா மாநிலத்தில் பத்திரமாகத் தரை இறங்கிவிட்டது.

இரண்டரை ஆண்டுகள் முன்பு அமெரிக்கா விண்வெளிப் பயணத்துக்குப் யன்படுத்தி வந்த கொலம்பியா என்ற விண்வெளி ஓடம் விண்ணிலிருந்து திரும்பியபோது வெடித்துச் சிதறியது.

அதில் பயணித்த இந்தியாவில் பிறந்த கல்பனா சாவ்லா உள்ளிட்ட வண்வெளிவீரர்கள் அனைவரும் பலியானார்கள். இந்த விபத்தை அடுத்து அமெரிக்காவின் விண்வெளி ஓடத்திட்டமே நிறுத்திவைக்கப்பட்டது. கொலம்பியாவின் தோல்விக்குப் பிறகு, இப்படி மீண்டும் மீண்டும் சென்று வரவல்ல ஒருவாகனம் இனி மேலும் சாத்தியம்தானா என்ற கேள்வியும் எழத்தான் செய்தது.

கொலம்பியாவின் தோல்விக்கான காரணங்களைஆராயும் பணி நடந்தது. பிறகு இப்போது இருவாரங்கள் முன்பு அமெரிக்கா டிஸ்கவரி ஓடத்தை விண்ணில் ஏவியபோது அது வெற்றி அடையுமா என்று உலகம் கவனத்துடன் பார்த்துக்கொண்டிருந்தது.

கொலம்பியா ஓடத்துக்கு என்ன விபத்து நேர்ந்தது என்று பார்த்தால் அது பூமிக்குத் திரும்பும் வழியில் காற்றுமண்டலத்தில் நுழையும்போது உராய்வின் நிமிர்த்தம் கடும் வெப்பம் ஏற்படும். அப்போது அந்த வெப்பம் உள்ளே வராமல் பலகைகள் தடுத் திருக்க வேண்டும்; ஆனால் தடுக்கவில்லை எனவேதான் விபத்து.

இதேபோன்ற பிரச்சினை இப்போது டிஸ்கவரி ஓடம் எம்பிய போதும் கவனத்துக்கு வரத்தான் செய்தது. இந்த ஓடம் கிளம்பிய உடனாகவே இதேபோல பலகைகளுக்கு இடையே சிறுதுகள்கள் நீட்டிக்கொண்டிருந்ததை நாங்கள் காணமுடிந்தது என்றார் அமெரிக்க விஞ்ஞானி வெய்ன் ஹால்.

இதுபோன்ற சிறு துகள்கள் எப்படி வந்தன என்பதை ஆராய விஞ்ஞானிகளுக்கு நேரமிருக்கவில்லை. ஒருவேளை இந்தப் பலகைகளை ஒட்டவைக்கப்பயன்படும் பசையின் மூலம் இவை வந்திருக்கலாம்.

எது எப்படியாயினும் இந்த சிறுதுகள்களைப் பிடுங்கி எடுப்பது என்பதான ஆணையை அவர்கள் டிஸ்கவரி விண்வெளி வீரர்களுக்குப் பிறப்பித்திருந்தார்கள். ஓடம் விண்வெளிக்குச் சென்று, அங்கு அமெரிக்க ரஷ்ய ஒத்துழைப்பில் செயல்பட்டு வரும் அனைத்துலக விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் தன்னுடைய அவசியப் பணிகளை முடித்துக்கொண்ட பிறகு இந்தப் பழுது பார்க்கும் பணி தொடங்கியது.

விண்வெளியில் சென்று இப்பணியைச் செய்தவர் வீரர் ஸ்டீவ் ராபின்சன். ஓடம் ஒன்றில் விண்வெளியில் வைத்து இத்தகைய பழுதுபார்க்கும் பணி நடந்தது இதுவே முதன்முறை.

இதற்கென எந்திரக்கை ஒன்றில் ஏறி விண்வெளி ஓடத்தின் அடிப்பாகத்துக்குச் சென்று செயல்பட்டிருக்கிறார் ஸ்டீவ் ராபின்சன். ஓடத்தின் பிரதான விமானிக்கு அருகே உள்ள ஜன்னல் திரை கிழிந்துபோய்விட்டதோ என்கிற ஐயமும் ஏற்பட்டது.

இதனால் பிரச்சினை இல்லை என்று இறுதியில் விஞ்ஞானிகள் முடிவுசெய்த பிறகே டிஸ்கவரி பூமிக்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டது. அதிலும் பிரச்சினைகள் புளோரிடா பகுதியில் இறங்க முடியாத படி பருவநிலை இருந்ததால், தாமதமாகி, ஒரு வழியாக கலிபோர்னியாப் பகுதியில் சூரிய உதயத்திற்கு சற்றே முன்பாக ஓடத்தை இறக்க முடிவானது. பூமிக்குத் திரும்பும் முன்பாக சூரியோதயம் நிச்சம் என்ற பொருள்படும் பீட்டிஸ் இசைக்குழுவின் பாடலைக் கேட்ட வண்ணம் டிஸ்கவரி ஓடத்தில் விண்வெளி வீரர்கள் துயில் எழுந்தனர்.

இருந்தபோதும் விண்வெளி ஓடத்தில் பூமிக்குத் திரும்பும் போது வெப்பத்தைக் கட்டுப்படுத்தவேண்டிய பலகைகளுக்கு இடையே இப்படித் துகள்கள் தோன்றுவதால் வரும் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்று முடிவாகாத நிலையில் அமெரிக்காவின் விண்வெளி ஓடத்திட்டத்தின் எதிர்காலம் கேள்விக்குறிதான்.

ஆக இந்தத் திட்டத்தையே முடக்கிவிடவேண்டும் என்று கூறி விமர்சித்துவரும் பிரிட்டிஷ் விண்வெளி விஞ்ஞானி மார்ட்டின் ரீஸ் இது பலனற்றது என்று கூறுகிறார்.

டிஸ்கவரி ஓடத்துக்கும் வயதாகிவிட்டது. இந்தநிலையில் அமெரிக்காவின் விண்வெளி ஓடங்கள் திட்டம் இறுதியில் வெற்றி பெறுமா என்பதற்கு காலம்தான் பதில் கூறமுடியும்.



# ஐ. ஆர். ஏ அமைப்பு
# தந்திரமாக நகர முயல்கிறது?



**IRA உடன் விடுதலைப்புலிகளை ஒப்பீடு செய்ய முயலும் தென்னிலங்கைச் சக்திகளுக்கு விடுதலைப்புலிகளையோ உலக விடுதலைப் போராட்டங்களையோ தெளிவாக தெரியவில்லை என்பதே இன்னோர் வேடிக்கையாகும். அதுவும் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே போடவேண்டுமென அறிக்கை விடுவது எவ்வளவு முட்டாள்தனமான அறிக்கை என்பது தெளிவாகியுள்ளது. இவர்கள் உலகத்தையோ அதன் போக்கில் ஏற்படும் மாற்றங்களையோ தெரியாதவர்களாக இருப்பதே அவர்களது பலவீனமாகும்.**

தேசிய இனப்பிரச்சினையில் உலகம் பின்பற்றிவரும் அணுகுமுறைகள் பற்றி இதே பத்தியில் அவ்வப்போது சில அவதானிப்புக்களை முன்வைத்துள்ளோம். அத்தகைய அவதானிப்புகளில் இதுவரையும் அரச தரப்பின் அணுகுமுறைகளை அதிகம் பார்த்திருக்கிறோம். ஆனால் தற்போது ஆயுதப் போராட்டத்தை மேற்கொண்டுவரும் IRA என சுருக்கமாக அழைக்கப்படும் ஐரிஸ் விடுதலை இராணுவம் மேற்கொண்டிருக்கும் அணுகுமுறை பற்றி அவதானிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

IRA இன் நடவடிக்கையின் பின்பு விடுதலைப்புலிகள் மீதான அழுத்தமும் அதற்கான தயார்ப்படுத்தலும் தென்னிலங்கையால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும்போது தென்சூடான் போராட்டத்தின் தலைமையும் சூடானின் உபசனாதிபதியுமான கராங் கொல்லப்பட்ட சம்பவமும் நடைபெற்றுள்ளது. இவற்றை விரிவாகப் பார்ப்போம்.

ஐரிஸ் விடுதலை இராணுவமும் அதன் அரசியல் பிரிவும் ஆயுதப் போராட்டத்தை கைவிடப்போவ மீதும் தாக்குதலை ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடத்தொடங்கியது. இதனால் மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் ஆர்வலர்கள், சர்வதேச தொண்டு நிறுவனங்கள் என்பன மனித உரிமைகள் சிறுவர் மற்றும் பெண்களின் பாதுகாப்புக்கள் பற்றி பெரும் சர்ச்சையை உருவாக்கின.

இதனை அடுத்து ஐரிஸ் விடுதலைப் போராளிகளுக்கும்- பிரித்தானிய அரசாங்கத்துக்கும் இடையில் போர்நிறுத்த உடன்படிக்கை 1994 இல் உ நவாக்கப்பட்டது. பல தசாப்தங்களாக பல உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் 'Good Frilay Agreement' மட்டுமே நிலையான வடிவத்தை கொண்டு செயல்படுத்தப்படுகின்றது. ஏறக்குறைய பன்னிரெண்டு உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளபோதும் எதுவுமே நிலையான தொன்றாக பேணப்படவில்லை. ஆனால் வெள்ளிக்கிழமை உடன்பாடு ஓரளவு நிலைத்து நிற்கிறது.

ஐரிஸில் செல்வாக்குடைய சின்பெயின் அதாவது ஐ.ஆர்.ஏ இன் அரசியல் பிரிவான சின்பெயின் மற்றும் UUP எனப்படும் Ulster Unionist Party உம் SDLP எனப்படும் Social Democratic party உம், DUP என்பது Democratic ஆளும் தரப்பு இக்கொள்ளைக்கும், படுகொலைக்கும் ஐ.ஆர்.ஏ காரணம் எனவும் அது பயங்கரவாத நடவடிக்கையை கைவிடவில்லை என்றும் கூறியது. இது ஐ.ஆர்.ஏ இன் சர்வதேச முக்கியத்துவத்தை மோசமாகப் பாதித்ததுடன் அதன் நடவடிக்கையில் பெரும் நெருக்கடியையும் ஏற்படுத்தியது.

இதுவே ஐ.ஆர்.ஏ மீதான பிரதான சவாலாகவுள்ளது. ரொனி பிளேயர் மூன்றாவது தடவை ஆட்சியமைத்தபோது அதனை வரவேற்ற ஐ.ஆர்.ஏ இத்தகைய நெருக்கடிகளால் அரசியல் ரீதியில் அசௌகரியங்களை எதிர்நோக்கியது. ஐரிஸ் விடுதலையின் சமாதான முயற்சியின் விளைவாக ஏற்பட்ட அங்கீகாரத்திற்குப் பின்பும் ஐரிஸ் ஆட்சியின் அணுகுமுறைகள் இலங்கையின் JVP+HUP போன்ற அமைப்புகளின் அணுகுமுறைக்கு ஒப்பானதாகவே அமைந்திருந்தது.

ஐ.ஆர்.ஏ மீதான படுகொலைக் குற்றச்சாட்டு வங்கிக் கொள்ளைக் குற்றச்சாட்டு மற்றும் பயங்கரவாதம் என்ற குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அதன் நடவடிக்கையை மட்டுமன்றி சமாதானத்தின் அடுத்தகட்டத்தை பாதிப்பதாக அமைந்துள்ளது. இயன்புஸ்லியின் அடம்ஸ் பலதடவை அமெரிக்கா சென்றிருப்பதுடன் அமெரிக்கா முன்னாள் சனாதிபதி கிளின்டன் அத்தகைய சகாப்தத்தை ஆரம்பித்து வைத்ததுடன் அமெரிக்கா அயர் லாந்தை படிப்படியாக தீர்வுநோக்கி நகர்த்தி வருகிறது. இத்தகைய ஆயுதப் போராட்டம் கைவிடுவதென்ற அறிவிப்புக்குப் பின்னால் அமெரிக்கா செயல்பட்டிருக்கக்கூடிய வாய்ப்பு உண்டு.

இத்தகைய IRA இன் அறிவிப்பு எல்லா நாடுகளின் விடுதலைப்போராட்ட அமைப்புக்களை நோக்கிய கோரிக்கைக்கு வழிவகுக்கலாம். இலங்கையில் இதற்கான வரவேற்பும் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கைவிடவேண்டும் என்ற கோரிக்கையும் பரபரப்பாக பேசப்படுகின்றது. இதனை விளங்கிக் கொள்ள இன்னோர் விடயத்தைப் பார்ப்போம்.

**கராங்கின் விமான விபத்து:-**

சூடான் விவகாரம் கணிசமான மாற்றங்களை நோக்கி நகர்ந்து வந்தபோது உப சனாதிபதி கராங்கின் மரணம் மீளவும் கலவரத்தை கிளப்பிவிட்டுள்ளது. உள்நாட்டு சண்டைக்குத் தீர்வுகாண முன்வைத்த சமாதான முயற்சிக்கு ஆதரவும். ஒத்துழைப்பும் வழங்கியதுடன் சூடானிய விடுதலை இராணுவத்திற் அதனால் தமது பாதுகாப்பையும் நிலைமைகளையும் பிரதிநிதிகளையும் தாமே பராமரிக்கும் வலுவை விடுதலைப் போராட்டங்கள் இழக்கக் கூடாது என்பதையே ஏற்படுத்தியுள்ளது. இவ்வகை நடவடிக்கைகளால் சமாதானம் மீதான நம்பிக்கை ஆயுதப் போராட்ட அமைப்புகளுக்கு ஆபத்தானவை என்ற நிலையையே உணர்த்தியுள்ளது.

தென்சூடானின் தலைமை பாதுகாக்க தவறிய வடசூடான் அரசியல் தலைமை முழு மேற்குலகத்தின் நம்பிக்கையையும் இழக்க வைத்ததுடன் IRA போன்ற அமைப்புக்களுக்கும் எச்சரிக்கையை தந்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் IRA இன் அணுகுமுறை எந்தளவுக்கு ஆபத்தானதென்பது (அவர்கள் அறிவித்ததுபோன்று நடந்தால்) IRAக்கு தெரியாததொன்றல்ல. அப்படியாயின் அவர்களது அறிவிப்பு ஒரு தந்திரமான நகர்வாகவே அமையும்.

கடந்த IRA உடன் விடுதலைப் புலிகளை ஒப்பீடு செய்ய முயலும் தென்னிலங்கைச்சக்திகளுக்கு

தாகவும் ஆயுதத்தை கீழே போடப் போவதாகவும் அறிவித்துள்ளன. ஐரிஸ் விடுதலைப் போராட்டம் மிக நீண்ட வரலாற்றைக்கொண்டது. இதன் தனித்துவமும், முக்கியத்துவமும், பலவீனமும் பற்றிய மார்க்ஸிய பார்வையை அறிமுகப்படுத்திய கால்மாக்ஸின் கருத்துக்களே முன்வைக்கப்பட்டிருந்தன. அந்தளவுக்கு முக்கியத்துவமும் பழமையும் வாய்ந்த ஒரு போராட்டமாக ஐரிஸ் அமைந்தபோதும் கடந்த ஐம்பது ஆண்டுகளாக முக்கியம் பெற்றதாக விளங்கியது.

ஐரிஸ் விடுதலைப் போராட்டத்திற்கு மூலவேராக மதப்பிணக்கே காரணமாக உள்ளது. கத்தோலிக்க குடியரசுவாதிகளுக்கும், புரட்டஸ்சாந் யூனியனிஸ்டுகளுக்கும் இடையிலான முரண்பாடே ஆயுதப் போராக வெடித்ததென வரலாறு கூறுகிறது.

யூனியனிஸ் பூர்வீகக் குடிகளான குடியரசுவாதிகளுக்கு எதிராக பிரித்தானிய அரசுடன் ஒத்துழைப்பாளர்களாகவும், குடியரசுவாதிகள் தனிநாட்டுக்கான பக்கத்தை ஆதரிப்பவராகவும் விளங்குகின்றனர்.

ஐரிஸ் விடுதலைப் போராட்டம் படிப்படியாக பிரித்தானிய அரசாங்கத்தினதும், சொத்துக்கள் Unionist Party உம் முக்கிய அரசியல் கட்சிகளாக உள்ளன. UUP பெருமளவுக்கு ஐ.ஆர்.ஏக்கு ஆதரவான கட்சியாக இருந்ததோடு உடன்பாட்டுக்குக் காரணமாக அமைந்தது. இலங்கையில் UNP போன்று அவ்வாறே DUP முழுமையாக ஐ.ஆர்.ஏ.ஐ எதிர்ப்பதோடு அதனை ஒரு பயங்கரவாத அமைப்பாக கருதுகின்றது.

இலங்கையில் JVP போன்றதென கருதலாம். DUP இன் தலைமைய இயன்புஸ்லி (Ian Puisley) என்பவன் ரொனி பிளேயாரை விட ஏன் வில்லியம் புஷ்ஷையும் விட மோசமாக ஐ.ஆர்.ஏ ஐயும் அதன் தலைமையையும் விமர்சிப்பவர். இவரது கட்சியே ஐரிஸ் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையை பெற்றிருப்பதுடன் ஐ.ஆர்.ஏ இன் அரசியல் பணிகளை கடுமையாக விமர்சித்து வருகின்றார்.

கடந்த காலங்களில் லண்டன் குண்டுவெடிப்பு பெரும் சர்ச்சையை உருவாக்கியது போல் வட அயர்லாந்தின் வங்கியொன்றில், (26.5 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் கொள்ளை ஒன்றும் அக்காலப்பகுதியில் றொபேட் மக்காணி (Robert Mccartney) என்பவரது படுகொலையும் ஐ.ஆர்.ஏ மீது பெரும் நெருக்கடியை உருவாக்கியது. ஐரிஸ் குற்றச்சாட்டும் சமாதான நடைமுறைக்கு போடும் தடையையும் முறியடிப்பதே ஐ.ஆர்.ஏ இன் பிரதான நோக்கம். ஐ.ஆர்.ஏ இதனை ஒரு இராஜதந்திர நகர்வாகவே மேற்கொண்டுள்ளதென பி.பி.ஸி தெரிவித்தது. இந்த இராஜதந்திர நகர்வு ஏற்படுத்தப்போகும் விளைவுகள் தான் எவை என்பது இப்போதுள்ள பிரச்சினையாகும்.

ஆயுதங்களை கீழே போடுவதாகக் குறிப்பிடும் ஐ.ஆர்.ஏ எந்த இடத்திலும் ஆளும் தரப்பிடம் ஆயுதங்களை கையளித்ததாக தெரியவில்லை. இப்பத்தி எழுதும் வரை அதற்கான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அப்படியாயின் இது ஒரு தந்திரமான நகர்வென்பது வெளிப்படை. ஐம்பது வருட விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆயுதங்களைக் கையில் எடுப்பது என்பது கடினமானவிடயமுமல்ல. அதனை கைவிடுவதாக அறிவிப்பதும் ஒன்றும் பெரியவிடயமல்ல. எனவே இது ஒரு தந்திரமான நகர்வாகவே விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

அயர்லாந்தின் சமாதான முயற்சிக்கு சர்வதேச அரசுகளின் ஆதரவு அமைந்ததோடு, அமெரிக்காவின் செல்வாக்கும் அனுசரணையும் அதிகமதிகமாக உண்டு. ஜெரி கும் (SIA) அதன் அரசியல் பிரிவுக்கும் தென்சூடானிய மக்களால் (டார்பூர்) அதிகம் நேசிக்கப்பட்ட தலைவருமான கராங்கின் மரணம் நிரந்தர பாதிப்பை ஏற்படுத்தும் என்ற அச்சம் மேற்குலகத்துக்கு ஏற்பட்டுள்ளது. கலவரம் தொடர்கிறது. தென்சூடானிய மக்கள் வடசூடானின் நகரங்களுக்குள் புகுந்து அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றனர். இது அவர்களுக்கு ஜோன் கராங்கின் விபத்துப்பற்றிய சந்தேகத்தின் எதிரொலியாகும்.

சூடான் அரசாங்கம் வானிலையில் ஏற்பட்ட குழப்பமே விபத்துக்கு காரணமெனக் கூறுகின்றது. ஆனால் இதுவரை விமான விபத்துத் தொடர்பாக எந்தவிதமான முரண்பட்ட தகவலும் வெளிவரவில்லை.

இது வானிலையால் ஏற்பட்டதோ இல்லையோ வேறுவிடயம். எப்படியாயினும் சுமூகமான உறவைப் பாதுகாக்கும் அரசாங்கத் த்ரப்பு சரியாகவும் பாதுகாப்பாகவும் செயல்பட்டிருக்கவேண்டும். இது தென்சூடான் மக்களை மட்டுமல்ல உலகளாவிய தேசிய விடுதலைப் போராட்ட அமைப்புகளின் தலைமைகளுக்கு அதிக சர்ச்சையானதாகவும் சமாதான முயற்சி ஆபத்தானதென்பதையும் ஏற்படுத்தக்கூடியது.

விடுதலைப்புலிகளையோ உலக விடுதலைப் போராட்டங்களையோ தெளிவாகத் தெரியவில்லை என்பதே இன்னோர் வேடிக்கையாகும். அதுவும் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே போடவேண்டுமென அறிக்கை விடுவது எவ்வளவு முட்டாள்தனமான அறிக்கை என்பது தெளிவாகியுள்ளது. இவர்கள் உலகத்தையோ அதன் போக்கில் ஏற்படும் மாற்றங்களையோ தெரியாதவர்களாக இருப்பதே அவர்களது பலவீனமாகும்.

ஐங்கரன்

எனவே ஒரு தேசிய விடுதலைப் போராட்ட அமைப்புள்ளது. அது தந்திரமாகவே நகர்ந்துள்ளது. இதன் அணுகுமுறை ஒன்றும் கதிர்காமர் கூறுவதுபோல் முட்டாள்தனமானதல்ல. இதனை புரிந்து கொள்வதே அவசியமானது. இவற்றை மீறி ஆயுதங்களை இறுதித் தீர்வுக்கு முன்பு கையளிப்பார்களாயின் அதைவிட தவறான நடவடிக்கை வேறு ஒன்றுமில்லை எனக்கூறலாம். IRA அப்படியான அமைப்பாக இருக்கமுடியாது. காரணம் அதன் போராட்டகாலமும் அனுபவமும் நீண்டது.




# தொலைபேசியில் நாடகம்




வர வர உலகம் எங்கே போகிறது? என்ன என்ன செய்கிறது என்றே புரியாமல் இருக்கிறது. பிரச்சினை இதுதான். இப்போதெல்லாம் சின்னத் திரையின் தொடர்களினாலேயே பெரும்பாலான குடும்பங்கள் சீரழிந்து போகின்றன. அந்தச் சின்னத் திரையின் தொல்லையே தாங்க முடியாமல் இருக்கும்போது,

சிங்கப்பூரில் உள்ள அரசு தொலைக்காட்சி நிலையமான Mediacovo கையடக்கத் தொலைபேசி வழியாக தொலைக்காட்சி தொடர் ஒன்றை ஒளிப்பரப்புச் செய்யவுள்ளது. இவ்வாறு ஒளிபரப்புச் செய்வது இதுவே முதல் தடவை. 30 வாரங்கள் ஒளிபரப்பாகவுள்ள இத்தொடர் சீன மொழியில் அமையவுள்ளது தினமும் மூன்று நிமிடங்கள் ஒளிபரப்பப்படவுள்ளன. இத்தொடரின் பெயர் இதுதான் " Please I love you" இதில் தாய்வான் நடிகர்கள் நடித்துள்ளனர்.

இது மட்டுமன்றி மேலும் பத்து தொலைக்காட்சி தொடர்களை தயாரித்து கைத் தொலைபேசி வாயிலாக சிங்கப்பூர் தொலைக் காட்சி நிலையம் ஒளிபரப்புச் செய்யவுள்ளது. சிலரின்பாடு கொண்டாட்டம். ஆனால் பலரின்பாடு திண்டாட்டம்தான்.

# எப்படி..? எழுதக் கற்றுக்கொண்டோம்



மனித குலம் எழுதுவதற்கு எப்போது கற்றுக்கொண்டது என்று சரியாகத் தெரியாது. மனித நாகரிகம் பின்னாளில், எண்ணங்களை வெளிப் படுத்து வதை விட ஒலியைக் குறிப் பிட எழுதும் முறை உருவாக்கப் பட்டது. ஒரு தேனீயையும், இலையையும் வரைந்தால் அது நம்பிக் கையைக் குறிக்கும் (Bee+leaf= Belief)

அதற்கும் பின்னால், எழுத்துக்கள் உருவாக்கப் பட்டன. ஒவ்வொரு எழுத்தும் ஒரு கருத் திற்குப் பதில் ஒரு ஒலியைக் குறித் தது. தற்போது உலகம் முழுவதும் பல்வேறு மொழிகள் உள்ளன. பெரும்பாலானவை வளர வளர படங்கள் எளிமையாயின. அவை குறியீடுகளாக மாறின. அதற்குரிய எழுத்துக்களைக் கொண் டுள்ளன.

# பொய் சொல்லக்கூடாது..!

1921 இல் ஜேம்ஸ் லார்சன் என்பவர், ஒருவர் பொய் சொன்னால் அதைக் கண்டு பிடிக்கும் எந்திரத்தை உருவாக்கினார். நாம் அதைப் பொய்யைக் கண்டுபிடிக்கும் கருவி அல்லது பாலிகிராப் என்று கூறலாம். நீங்கள் பொய் சொன்னால், உங்கள் உடலில் மாற்றங்கள் ஏற்படுகிறது. உங்கள் இதயத் துடிப்பு அதிகரிப்பதோடு அதிகம் வியர்க்கிறது. இம்மாற்றங்களை இக்கருவி பதிவு செய்கிறது.



பொய் சொல்லுவதைக் கண்டுபிடிக்கும் கருவி மிகவும் துல்லியமானது என்று கூற முடியாது. பெரும்பாலும் அது விசாரிப்பவரின் திறமையைப் பொறுத்தது. கடுமையான குற்றவாளிகள் வினாக்களுக்கு விடையளிக்கும் போது அவர்களின் உடல் உணர்வை வெளிப் படுத்தமாட்டார்கள். இனியும் ஒரு புதுமையான கருவியைக் கண்டுபிடித்தால்தான் இந்தப் பொய்யர்களினால் ஏற்படும் துன்பம் குறையும்.



# மருத்துவம்

# தலைமுடி உதிர்தல்..!



முகச்சுருக்கம், தலை நரைப்பது மாதிரி தலைமுடி உதிர்தலும் கூட நமக்கு மிகப் பெரிய கவலைதான். முன்பெல்லாம் ஆண்களுக்கு மட்டுமே உரியதாக இருந்த இந்தப் பிரச்சினை, இப்போது பெண்களுக்கானதாகவும் மாறியுள்ளது. ஏன் இப்படி தலைமுடி உதிர்கிறது? என்பதற்கான காரணங்களைக் கவனிக்கும் முன்பு தலைமுடியின் வளர்ச்சி பற்றி பொதுவாகத் தெரிந்துகொள்வோமா?

எந்த நேரத்திலும் நம் மொத்தத் தலைமுடியில் பத்து சதவிகிதம் ரெஸ்டின்ஸ் ஃபேஸ் எனப்படுகின்ற அமைதி நிலையில் உதிராமல் இருக்கும் இரண்டு, மூன்று மாதங்களுக்கு பிறகு, இந்த அமைதி நிலையிலுள்ள முடிகள் எல்லாம் உதிர்ந்து விடும். அடுத்து புதிய முடிகள் வளர ஆரம்பிக்கும். இது இயல்பானது.

இந்த இயற்கை சுழற்சியில் தினம் தோறுமே சில முடிகள் உதிரக்கூடும். இதைக் கண்டு பயப்படத் தேவையில்லை.

பொதுவாகவே 'ஃபாலிக்கில்' எனப்படுகிற வேர்க்கால் ஒவ்வொன்றிலிருக்கும் (குறிப்பிட்ட இடைவெளிகளில்) வாழ்நாளில் இருபத்தைந்து முடிகள் உருவாகும். பிறகு அந்த வேர்க்கால் செயலிழந்துவிடும். இப்படி ஒரு வேர்க்காலுக்கு 25 முடிகள் உருவாகிற இந்த இயல்பு நிலை தொடர்ந்தால் வழுக்கையே விழாது.

**சரி இந்த இயற்கைச் செயலைத் தடுப்பது எது?**

இறுக்கமாக கொண்டை போடுவது, முடிகளை இறுக்கிக் கட்டுவது, முடிகளைப் பிடித்து இழுப்பது, அடிக்கடி ப்ளீச் செய்வது, முடியை அயர்ன் செய்வது இவை தவிர நெருப்புக்காய்ச்சல், அம்மை போன்ற நோய்த் தொற்றுகள், ஓமோன் பிரச்சினைகள், தைரொய்ட் கோளாறுகள், நீரிழிவு, கர்ப்பம் போன்றவைதான் பொதுவான காரணங்கள்.

உணவுக் குறைபாடு, குறிப்பாக இரும்புச்சத்துக் குறைபாடு முடி உதிர்தலுக்கு முக்கிய காரணமாக சொல்லப் படுகிறது.

ஆறுதல் செய்தி ஒன்று சொல்லட்டுமா.. ஆண்களுக்குத்தான் முடி உதிர்தலைத் தடுப்பது மிக மிகக் கஷ்டம். ஆனால் என்ன காரணங்களால் முடி உதிர்கிறது என்பதைக் கண்டறிந்து அதற்கான சிகிச்சை செய்தால் பெண்களுக்கான முடி உதிர்தலை மிகச் சுலபமாக கட்டுப்படுத்தலாம்.

தலைமுடி ஆரோக்கியம் என்பது பல வருடப் பராமரிப்பில் அடைகிற ஒரு நிலை. இக்கால இளைஞர்களும், யுவதிகளும் முடி இருக்கும் வரை அதற்கு எந்த மரியாதையும் தருவதில்லை. முடி உதிரத் தொடங்கினாலும் அங்கங்கே இருக்கிற முடியை இழுத்துப் பிடித்து கட்டி வைத்து "அவ்வளவா வழுக்கை தெரியவில்லை" என்று தாங்களாகவே ஆறுதல் சொல்லிக்கொள்கிறார்கள். "நிழலின் அருமை வெயிலில்தான் தெரியும்" என்பது போல முடியிழந்த பிறகுதான் .. "அடடா இப்படி ஆகிவிட்டதே" என்று வருத்தப்படுகிறார்கள்.

இப்படி ஒட்டு மொத்தமாக வழுக்கை விழுந்த நிலை, தலைமுடியின் ஆரோக்கியம் சிதைந்த நிலை தடிமன் போன்று மூன்றுநாள் வந்துவிட்டு காணாமற்போகிற வைரஸ் இல்லை இது. மறுபடியும் நீண்ட கவனமான பராமரிப்பு அவசியமாகிறது. இப்படி பராமரித்துச் சிகிச்சை செய்தாலும் கூட இழந்த முடியைத் திரும்பப் பெற நூறு சதவிகித உத்தரவாதம் கிடையாது என்பதுதான் கசக்கும் உண்மை. 'அடடா.. அப்படியா விஷயம் எனக்கு இன்னும் வழுக்கையாகவில்லை. ஆனால் முன்ன விட அதிகமாக உதிர ஆரம்பித்திருக்கிறது. இப்போ என்ன செய்வது?" என்று கேட்பவர்களுக்கு... கவலையேபடாதீர்கள். சிறந்த தோல் நோய் மருத்துவ நிபுணரால் கண்டிப்பாக உங்களுக்கு உதவமுடியும்.

உங்களைப் பரிசோதித்து ஒவ்வொரு காரணமாக அறிய வேண்டியிருக்கிறது. முதலில் சாப்பாடு. விட்டமின் குறைபாடுகள் தலைமுடி உதிர்தலை ஏற்படுத்தும். உணவில் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய விட்டமின்கள் சரியான அளவில் கிடைக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

வேறு ஏதோ பிரச்சினைக்காகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிற மருந்தும் கூட முடி உதிரக் காரணமாக இருக்கும். அதை டாக்டரால் மட்டுமே கவனித்து சரி செய்யமுடியும். அதற்குப் பதிலாக டாக்டர் பரிந்துரையோடு வேறு மருந்தை எடுத்துக் கொண்டால் முடி உதிர்வது கட்டுக்குள் வந்துவிடும்.

சிலருக்கு தைரொய்ட் குறைப்பாட்டால் முடி உதிரும். சரியான மருத்துவ சிகிச்சை பெற்றால் இதையும் சரிசெய்யலாம். மாதந்தோறும் ஏற்படுகிற கருப்பை சுழற்சியில் இருக்கிற குறைபாடுகள் கூட தலை முடிகளைப் பாதிக்கும். இதுவும் குணமாக்கக் கூடிபதே.

சரி.. நிலைமை சீரியஸாகி சுத்தமாக வழுக்கை விழுந்துவிட்டது. இப்போது என்ன செய்வது என்றால் விடை முடியை மாற்றிப் பொருத்தும் அறுவை சிகிச்சை.

பிறக்கும்போதே நாம் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வேர்க்கால்களுடன் பிறக்கிறோம். இந்த எண்ணிக்கையில் கடைசிவரை மாற்றமில்லை. புதிய வேர்க்கால்கள் உருவாகவும் வாய்ப்பில்லை. ஆனால் உருவான வேர்க்கால்கள் முடி உற்பத்தியைக் குறைத்து மெல்ல வழுக்கை நிலைக்குப் போக ஆரம்பிக்கும். இதை "ஆன்ட்ரோஜெனிபக் ஆலோபிஸியாரு" என்கிறார்கள்.

முடி மாற்றிப் பொருத்தும் அறுவை சிகிச்சையில் தலைக்குப் பின் புறம் கீழே அடர்த்தியாக உள்ள முடிகளை ஒவ்வொன்றாக எடுத்து வழுக்கைப் பகுதியில் நடுகிறார்கள். பொதுவாக இந்த இடத்தில் இருக்கிற முடிகள் சாகும்வரை விழுவதில்லை. அதனால் அது புதிய இடத்திலும் பற்றிக்கொண்டு உயிரோடு இருக்கும். இதுதான் அந்த சிகிச்சையின் தொழில்நுட்பம். சர்ஜரிக்குப் பிறகு புதிய முடிகள் வளர மூன்று முதல் ஆறு மாதங்கள் ஆகும். ஆரோக்கியம்தான் அழகு என்பதையும் அழகு என்பது தன்னம்பிக்கையின் அடிப்படையில் மிளிர்கிற ஒரு விஷயம் என்பதையும் இந்தத் தொடர் மூலம் நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள். தொடர்ந்த பராமரிப்பில்தான் அழகைக் குறையாமல் காப்பாற்ற முடியும் என்பதையும் தான்.

அழகு சிகிச்சை என்ற பெயரில் போலிகள் விளம்பரங்களின் மூலமாக உங்களைக் கவரும் நேரம் இது ஜாக்கிரதையாக இருங்கள். குறைபாட்டைச் சரி செய்வதைவிடவும் தவறான சிகிச்சையை சரிசெய்வது இரண்டு மடங்கு சிக்கலானது. எப்போதும் ஒரு நல்ல மருத்துவரை அணுகி விளக்கம் பெற்ற பிறகே சிகிச்சையைத் தொடருங்கள்.



## விசுக்விசுக் விசாலாச்சி

பாத்தியோடா அவங்கட சோடிப்புக் கதையள... 'விபத்துக்கொலையும் கோரக் கொலையும்' எண்டெல்லோ பேப்பரில போட்டிருக்கினம்... கூ தமிழர் செத்த ஒண்டில் தற்செயலா நடந்து போச்சு. இல்ல தவறுதலா நடந்துபோச்சு அதுகுமில்லாட்டி விபத்துமாதிரி நடந்து போச்சு. வித்தாரங் கொத்துகினம். அ... சனம் பிழங்கிற இடம்வழிய வந்து நிண்டு உவை துவக்குகள நீட்டுறது இண்டைக்கு நேத்துத்தானே நடக்குது. இந்த சண்டையள் துவங்க முதலே இவ்வன். செல்வம் எண்டு கடத்துவங்கி கொஞ்சப் பெடியளயோ சாட்சி சம்பந்தமில்லாமத் துலைச்சிட்டினம். இதுகளுக்கெல்லாம் சனம் குரல் குடுத்துக் குரல்குடுத்து ஓய்ந்துபோய்த்தானே துவக்குத் தூக்க எல்லாச் சனமும் வெளிக்கிட்டது.

இல்ல... தமிழ்ச்சனம் ஆமிக்கும் பொலிசுக்கும் பயந்து பயந்து திரிஞ்சதும் ஒரு காலந்தான். பிறகுதான் துவக்குகளோட ஆமிய எதிர்த்தும் நிண்டதுகள் தானே. இவை சொல்லுறமாதிரி எங்கள அவங்களுக்கு என்ன கோபம். சும்மா வந்து சுழட்டிக்கொண்டு திரிஞ்சவை முதல் வாகனங்களால சனத்தை மோதிக் கொண்டாங்கள். பிறகு அநாமதேயமா அள்ளிக்கொண்டு போனாங்கள். இப்ப பழைய குருடி கதவைத் திறவடியெண்டு துவக்குறாங்கள் என்ன சொல்லு. பாலையூத்தியேபாம்பை வளர்த்தாலும் அது கடிக்கத்தான் செய்யும்.

பின்ன சும்மாவே சொன்னவங்கள்... குதிரைக்கு நாலுமுழம். கொம்புள்ளதுக்கு ஐந்து முழம். வம்பருக்கோராயிரம் காதமெண்டு தள்ளி நிக்கச் சொல்லி. இதுகளெல்லாம் மேல விழுந்து பிராண்டுறதுக்கு முதல் நாங்கள் கலைச்சுப்போடோனும். இல்ல காலச்சுத்தின பாம்பு கடிக்காம விடாது. இனுவிலுக்க நடந்த பிரச்சினையிலயும் ஆவேசம் வந்த சனம்தான் பொதுசுக்காரனைக் கடத்தினதெண்டு கண்ணால பார்த்தவையே சொல்ல கொழும்புப் பத்திரிகைகள் முழுப்புசணிக்காயச் சோத்தில சொருகி விட்டிருக்கினம். அதோட ஒரு அறிவித்தல கண்காணிப்புக்குழுவல குடுத்திருக்கினமடா. எது மக்கள அமைதியா இருக்கச் சொல்லி புலிகளச் சொல்லட்டாம். ம்.. எப்பிடியிருக்கு கதை - பிறகேன் இவை யாழ்ப்பாணத்தை தங்கட கட்டுப்பாட்டுக்க வச்சிருக்கிறமெண்டு பிதற்றித் திரியினம். மக்கள இவை சுறண்டி விடுவினம். மக்கள் வாய்பொத்திக் கைகட்டி நிற்கவேணும். உது நல்ல சமாதானம் வேணுமெண்டா ரெண்டு தரப்பும் சேர்ந்து தான் கொண்டர வேணும்.

இது அவனடிச்சா நீ சும்மாயிரெண்டெல்லே புத்திமதி சொல்லுகினம். செம்மணி அரியாலையெல்லாம் இன்னுங் கலைஞ்சு துலைஞ்சு போச்சே. கணக்க ஏன் ஆயுதமில்லாம நிக்கிற புலியளச் சுடவேண்டாம் சுடவேண்டாமெண்டா என்ன கொள்ளிக்கட்டையாலயே சுடுகிறது.

முன்னம் உவை சுட்டகதை ஒண்டோ ரெண்டோ ஒவ்வொருக்கா பேச்சுவார்த்தை நடக்கயுக்கயும் உந்த விளையாட்டு நடக்கிறதுதானே. உப்பிடித்தான்ரா திம்புப் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கயுக்க வவுனியாவுக்க பாவக்குளம் கல்லாறுப் பகுதியளுக்க புந்து இளந்தாரியளாப் புடிச்சுக்கொண்டுபோய் பாழ்படுவார் சாம்பல் தோட்டத்தடியில துவங்கி பம்பமடுகாண தமிழ்த்துக்கு எல்லைகளிலை போடுறமெண்டு இருநூறு பேரைச் சுட்டுப்போட்டு பாதத்துக்கொருத்தராப் போட்டவங்கள்.

கடவுளே அந்த மாதிரி மல்லாதி மல்லனுகள் அண்டைக்கு பிரண்டு போயக் கிடந்த இந்தக் கண்ணால பாத்தனான்டா. அதோட போச்சே எங்கட புவலாற்ற ராசன் பெடியன் தெயிருந்தானே மிதிச்சித் துப் புல்லுஞ்சாகாது. கல்லு மலைப் பிள்ளையாருக்கு பொங்கல் வைக்க வந்தபொடியன் புக்கைப் பானை கொதிக்குது.

கற்பூரத்த மறந்து போனனெண்டு கடைக்கு ஓடிப்போனவன். சும்மா ஜீப்பில போனவன் போறபோக்கில சுட்டுப்போட்டுப் போகேல்லயே அதைவிட உவன் வெளிக்கிடையில வெட்டுப்பட்ட நவத்தான் வீட்ட நீண்டு கல்லுப் பொழியேல்லய ஒரு கறுவல் கண்டங் கண்டமாத் திரண்ட உடம்பு.. போச்சா நல்ல பேர் வாயில வருதில்ல அ...ஆ சிங்கராயன் சாக்காட்டிப் போட்டு கக்கூசுக் குழிக்க போடயில லயே வவுனியாக் கடைத்தெருவுக்க உப்படி எத்தின பேரை நாய் சுட்டமாதிரித்தானே சுட்டவங்கள்.

உப்பிடி எத்தினை. இப்ப சண்டைய விட்டிட்டு சமாதானமெண்டு வெளிக்கிட அதைக் குழப்பிப்போட படாதபாடு படுகினம். முழுக்க நனைஞ்சவைக்கு என்னபயம் முக்காடு.

# காரசாரம்

## எதிர்காலம் முதியோருக்கு இருள் சூழ்ந்ததாக இருக்கலாமா?



**பிள்ளைகளின் மனதில் வாழ்வில் பாசம் என்ற பேச்சுக்கே இடமில்லாமற்போகிறது. எதிர்காலம் முதியோர்களுக்கு இருள் சூழ்ந்ததாக இருக்கிறது. இவர்களது வேர் பேரப்பிள்ளைகளைச் சுற்றி இருந் தாலும் அது வலுக்கட்டாயமாகப் பறிக்கப்பட்டு முதியோர் இல்லங்களை நோக்கி இவர்களைத் தள்ளி விடுகிறது.**

உலகம் முழுதும் ஒரு கோடி பொன் கொண்டு போனாலும் வாங்க முடியாதது உயிர், அன்பு என்ற இரண்டும். வாழ்நாள் முழுவதும் ஒருவர் உழைத்துச் செலுத்தினாலும் கட்டமுடியாத கடன் தாயின் கடன். இந்த அடிப்படையில் எழுந்த பழமொழிகள், பொன் மொழிகள் ஏராளம். எல்லாமே சம்பிரதாயமாகக் கூறப்படும் மொழிகள் தான் என்றளவில் இன்று மாறிவிட்டது.

தாய் வீட்டுக்கு வீடு பிச்சையெடுக்க மகன் சிவலிங்கத்துக்குப் பூசை குடுத்தானாம் என்று என் தந்தை கூறுவார். அப்படியும் நடக்குமா என்று நான் அப்போது வியந்ததுண்டு. ஆனால் இன்று என் கண்ணூடாகவே கண்டுவிட்ட அவலங்களைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. தாயும் தந்தையும் அவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும் ஒரு குழந்தைக்காக எவ்வளவோ தியாகங்களைச் செய்கிறார்கள்.

தள்ளாத வயதில் நிற்பதும் நடப்பதுமாக ஒரு அம்மா சந்தைக்குப் போகிறாள். 'ஏன் வேறுயாரையாவது அனுப்பலாமே' என்றால்.... மிகவும் சோர்வாக எனக்கு ஆர் இருக்கினம் என்கிறார். அயலில் விசாரித்தால் அம்மாவுக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். எல்லோரும் வசதியாகத்தான் இருக்கிறார்கள் என்கிறார்கள்.

மகனிடம் கேட்டால், அவவ ஆர் திரியச் சொன்ன, 'றாங்கிக்கு திரிஞ்சா நானென்ன செய்யிற' என்கிறார். இந்த 'றாங்கி' என்றால் என்ன. எல்லோரும் றாங்கியா வாழுறதத்தான் விரும்புகினம். 'றாங்கியா' கதை சொன்னா கொஞ்சப் பேருக்கு பிடிக்காது. இந்த றாங்கிச் சீவியம் சீவித்த பெரியவர்கள் வயதுபோன பின் பும் தமது றாங்கியை விடமுடியாமல் துன்பப்படுகின்றனர். றாங்கியாக் காலக்கைய ஆட்டிக் கொண்டிருக்கயுக்கயே செத்துப்போக வேணும் என்பதும் பலரது அவா.

இந்த றாங்கித்தனம்தான் உலகின் பெரிய செயல்களுக்கெல்லாம் காரணம். இந்தவகையில்தான் இன்னமும் ஆண்,பெண் சமத்துவமும் கேள்வியில் நிற்கிறது. பெண்கள் றாங்கி காட்டக்கூடாது. அடக்கமாகத்தான் இருக்க வேண்டும். ஆண்கள் எவ்வளவும் றாங்கியா இருக்கலாம்.

பாடசாலைகளில் பிள்ளைகள் றாங்கியாக் கதைக்கக்கூடாது. ஆசிரியருக்கு அது மதிப்புக் குறைவு. தாழ்த்தப் பட்டவர்கள் றாங்கியா (செருப்பு,குடையுடன்) திரியக்கூடாது. அது உடையவனுக்கு மதிப்புக்குறைவு. ஏழைகள் றாங்கியாத்திரிஞ்சால் அல்லது நின்றால் வேலை கிடைக்காது. இப்படி றாங்கித் தனம் அமெரிக்காவுடையது என்றால், ஆப்கானிஸ்தான் சும்மா இருக்கலாமே. ரஷ்யா வல்லரசு நிலை இழந்தபிறகு ஏன் றாங்கி.

இப்படியே இந்த றாங்கி எப்படியோ எங்கள் கலாசாரத்துள் புகுந்து படாதபாடு படுத்துகிறது. எங்களுக்கென் றொரு பண்பாடு. பழக்க வழக்கம் இருந்தது. அதைத் தொடர்ந்து கடைபிடித்தால் என்ன? என்ற கேள்வி இப்போது என்ன அர்த்தத்தில் வருகிறது என்றால் தொடர்ந்து ஆளுவோர் ஆள்வோராகவே இருக்க அடிமைகள் அடிமைகளாகவே இருந்தால் என்ன என்பதாகத்தான் இருக்கிறது. யாரும் யாருக்காகவும் வாழத் தயாராகவில்லை.

இதை எப்படி வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். இந்த இருபத்தோராம் நூற்றாண்டில்கூட பிள்ளைகள் தனது விருப்பப்படியே சிந்திக்கவேண்டும். தனது விருப்பப்படியே நடக்கவேண்டும். அப்படி நடக்கக் கூடிய பிள்ளைகளைப் பெற்றவர்கள் பெருமைப் படும் காலமாகவும் இது மாறியுள்ளது.

எனது அயலில் ஒரு பதினெட்டு வயதுப் பையனை தான் விரும்பிய துறையில் கல்விகற்க வற்புறுத்திய தாயை அந்தப் பையன் ஒரு கேள்வி கேட்டான். "அம்மா! உனக்கொரு மூளையை வைத்த இயற்கை எனக்கும் ஒரு மூளையை ஏன் தனியாக வைக்க வேணும். என்னைச் சிந்திக்கச் சொல்லித்தானே. உங்கட யோசினையத்தான் நான் ஏற்க வேணுமெண்டா எனக்கேன் தனிய மூளை. நீங்கள் விரும்புற துறைய நீங்கள்தான் படிக்க வேணும்" இந்தத் தர்க்கம் அந்தத் தாயை வெகுவாகப் பாதித்தது.

பெற்று வளர்த்த பிள்ளை இப்படி எடுத்தெறிந்து பேசிவிட்டானே என்று சொல்லிச் சொல்லி வருந்தினாள். யோசித்துப் பார்த்தால் அந்தப் பையன் பேசியதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் 'தாயிடம் அவன இப்படி றாங்கியாக் கதைச்சிருக்கக்கூடாது' என்பது மட்டும் தான் இடறியது.

ஏராளமான முரண்பாடுகள் இந்த றாங்கியால்தான் வருகிறது. உண்மையில் முரண்பாடுகளின் மீது நடைபயிலும் ஒரு குடும்பம் ஒருபோதும் மகிழ்ச்சியாக இருப்பதில்லை. சொல்வழி நடவாத புத்திரர்கள், கூட்டுறவில்லாத தம்பதியர், ஒற்றுமையில்லாத அயலவர்கள் என ஒருவருடைய வாழ்க்கை அமையுமென்றால் அதில் என்ன சுகமிருக்கிறது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தால் குறைந்தா போய்விடுவோம்.

ஆனால் விடமாட்டோம். 'எல்லாம் எனக்கே தெரியும்'. 'நான்தான் முதலில் சொன்னேன்.' என்பது ஒருவகை, யாரோ முயன்று ஒரு வேலையை முக்காற்பாகம் செய்து விடுவார். அதன் கால்பங்கை நிறைவேற்றுபவரே அதை அறிமுகம் செய்யும் பேறு பெறுகிறார்.

உழைத்தவர் அதை செய்வதற்கான அடிக்கோடிட்டவர் ஒடுங்கிப் போயிருப்பார். முடித்வர் ஏதோ அதை அலைந்து திரிந்துதானே முயன்று முடித்ததாக பெரிய பந்தாவாகப் பேசுவார். இதனால் ஒரு எதிர்ப்பாளரை அவர் பெற நேர்கிறது. ஏன் உண்மையைச் சொன்னால என்ன? நான் பெரிது என்ற மனநிலை இதை ஏற்பதில்லை.

ஒரு பழமொழி உண்டு "வெட்டின கிணத்துக்கும் கட்டின வீட்டுக்கும் தருச் சொல்லக்கூடாது" என்று. ஆனால் அப்படிச் சொல்பவரே அதிகம். ஒருவர் கட்டிய வீட்டை தச்சுத் தொழிலர் ஒருவரிடம் காட்டிப் பாருங்கள். சுற்றிப்பார்த்து விட்டு ஒரு குறை சொல்வார். மேசனும் அப்படியே. பயிர் நன்கு செழித்திருந்தாலும் அதைப்பார்க்க வரும் இன்னொரு விவசாயி அதில் ஏதோ ஒரு குறையை சொல்லத்தான் செய்கிறார்.

இந்தப் பண்பு மனிதர்களுக்கு தொட்டில் பருவத்தில் புகட்டப்படுவதுதான் என்றால் நம்பக் கஷ்டமாக இருக்கும். பால் புகட்டும் போதே "பிள்ளைதான் நல்லபிள்ளையாம், அவை கக்கா..." என்று கூறும் தாய் உணவூட்ட ஆரம்பித்தால், 'என்ர செல்லம் நீ சாப்பிடாட்டி காகத்துக்குக் குடுப்பன், இல்லாட்டி மாலாவுக்கு... அ... இல்ல நான் குடுக்க மாட்டன் பிள்ளைக்குத் தான் எல்லாம். "அவவுக்கில்ல...." என்றும்.

கொஞ்சம் ஓடியாடித்திரிய படிக்க ஆரம்பிக்க "அவைக் கொண்டும் தெரியா பிள்ளைக்குத்தான் எல்லாம் தெரியும்" முதலே சொல்லிப்போட வேணும்' என்றெல்லாம் ஊட்டிவிடும் நஞ்சின் எதிர்விளைவுகளே சமூக முரண்பாடுகளாக மலர்கிறது. கிடைத்தவற்றில் உயர்ந்த அன்பு, தாயன்பு என முன்னமே சொன்னேன். இந்தத் தாயின் இந்த வளர்ப்பு முறையே இறுதிக்காலத்தில் அவளுக்கெதிராகவும் திரும்பி விடுகிறது.

"எனக்கெல்லாந்தெரியும் நீங்க சும்மாகிடவுங்கோ" என ஒரு பிள்ளை கூறும் போது தாயின் மனதில் கடந்தகாலம் ஓடிவரும். 'பிள்ளைக்கு எல்லாந்தெரியும்" என்று பேசாமல் விட வேண்டியது தான். சில வேளைகளில் முரண்பாடுகள் முற்றி தாயோ மகனோ வெளியேறவேண்டிய நிலை ஏற்படுகிறது. பெற்றோர் என்பது வழிவழி தொடர்வதுதானே. ஒரு தடவை, அடம் பிடிக்கும் தனது பிள்ளைக்கு உணவூட்டும்போது தானும் அப்படித்தான் என்பதை நினைவூட்டும் தாய் எவ்வளவு பசுமையாக எங்கள் நினைவுகளைச் சுமக்கிறாள். அவளுடைய வார்த்தைகளைவிட நாம் கூறும் வார்த்தைகளை அவள் எவ்வளவு பொறுமையாக செவிமடுத்திருப்பாள் என்பதை மீட்டுப் பார்க்க எவ்வளவு சுகமாக இருக்கும்.

கடந்தகாலங்களில் "உளவியல்' என்பது கற்பிக்கப்படாத நிலை இருந்தது. இன்று குழந்தைகள் எத்தனை விதமாக மனம் நோகாமல் வளர்க்கிறார்கள். முன்பெல்லாம் பட்டிகளில் அடைபட்ட மாடுகள்போலதான் பிள்ளைகள். வீட்டில் தந்தையிடமும் அடியுதை பட்டனர். பாடசாலையிலும் மோசமான அடி ஆக்கினைகள் பெற்று வளர்த்தனர். அவர்கள் இன்னமும் அந்த வளர்ப்பு முறையே சிறந்தது என்றும் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த முரண்பாடுகளின் பின்னணியில் புதிய தலைமுறை வசதிகளைப் பெறும் அதே சமயம், உணர்வூட்டல்களைப் பெறத் தவறிவிடுகின்றது. ஒன்று குழந்தைகளைக் கைவிட்டுப் பெண்கள் வேலைக்குச் செல்கின்றனர். அவர்களது பூரணமான அரவணைப்பு பிள்ளைகளுக்கு இல்லை. அடுத்தது இடம் மாறிமாறிச் செல்லும் பெற்றோர் பிள்ளைகளை விடுதிகளில் தங்கிப் படிக்க விடுகின்றனர்.


பிள்ளைகளின் மனதில் வாழ்வில் பாசம் என்ற பேச்சுக்கே இடமில்லாமற்போகிறது. எதிர்காலம் முதியோர்களுக்கு இருள் சூழ்ந்ததாக இருக்கிறது. இவர்களது வேர் பேரப்பிள்ளைகளைச் சுற்றி இருந்தாலும் அது வலுக்கட்டாயமாகப் பறிக்கப்பட்டு முதியோர் இல்லங்களை நோக்கி இவர்களைத் தள்ளி விடுகிறது.

தாயன்பு, தந்தையின் அரவணைப்பு, உறவினர்களின் லயிப்பு எதுவும் இல்லாத நிலையில் வாடும் இவர்கள் ஒரு காலத்தில் றாங்கியா சீவித்தவர்கள்தானே. இப்பவும் றாங்கியா இருக்க முடியாதவர்கள்தானா. பிள்ளைகள் யோசிப்பார்களா?.... அது சரி றாங்கி என்றால் என்ன?

-மாயா-




# இப்படியாக...



சிவசிதம்பரம் நடந்து கொண்டிருக்கின்றார். வீட்டில் இருக்கவும் பொழுது போவதாயில்லை. ஒவ்வொரு நாளும் காலை எட்டு மணிக்கு வெளியிலே வந்தால், நாளாந்தப் பத்திரிகைகளுடன் வீடு திரும்புவார். வயது எழுபத்தாறைத் தாண்டி விட்டது. கையில் ஆதரவாகக் கைத்தடி. அனுபவத்தின் பதிவுகள் பலவிதமாய் அவரது முகத்திலும் இழையோடியிருந்தன.

நல்லூர்ச் சிவன் கோயிலடியில் நின்று சிவனைக் கும்பிட்டு விட்டு ஏதோ வேகத்தில் திரும்பினார்.

சிதம்பரம் மாமா!

ஆ! ஆ! எப்படி? எப்படி? இங்காலை எப்போது? மிகவும் சந்தோஷமாகக் கேட்கின்றார். இவரது பால்ய நண்பன் சுப்பிரமணியத்தின் மகன் சர்வானந்தன்.

சிதம்பரம் மாமா! நாங்கள் இப்போ கோயில் வீதியில் கிட்டத் தான் இருக்கிறம். வீட்டை வாங்களன். அப்பா மிகவும் சந்தோஷப்படுவார்.

நண்பனைப் பார்க்கும் ஆவலில் தனது உடற்களைப்பையும் மறந்து சுப்பிரமணியத்தார் வீட்டைச் சென்றடைந்து விட்டார்.

அங்கே, அமோக வரவேற்பு.

சிவசிதம்பரமும் சுப்பிரமணியமும் பாடசாலைக் காலத்திலிருந்தே நல்ல, இனிய நண்பர்கள். படிப்பில் ஒரு கரை கண்டு, சிவசிதம்பரம் தபாலதிபராகவும், சுப்பிரமணியம் அதிபராகவும் இருந்து, வாழ்விலும் ஒரு கரை கண்டு ஓய்வு பெற்றவர்கள்.

சுப்பு! நீங்கள் இப்போ வெளிக்கிடுவதில்லையே? கன நாளாகக் காணக் கிடைக்கவில்லை.

இல்லை சிதம்பரம். முந்தின மாதிரி உடல் நிலையும் ஒத்துப்போகவேணுமே. அப்படி வெளிக்கிட்டாலும் தூர இடங்களுக்குப் போவதில்லை.

புதினங்கள் எப்படி?

புதின்மென்ன? இப்போ யாழ்ப்பாணத்திலை ஒரே கொள்ளையும் களவுமாயிருக்கு. மனிசனை மனிசனே தின்கிற வேலையளும் நடக்குது.

அதையேன் பேசுவான்! தொண்ணூற்றியைந்தாம் ஆண்டில் கந்தசஷ்டியோட ஒரு சூரன் போர் வந்தது. அத்தோடை இடப்பெயர்வும் ஒன்று வந்தது. மறு வருடம் திரும்பி வந்தோம். எங்கள் இடங்களும் சனங்களும் கெட்டுப்போச்சு. அதற்கு முன்பு சனங்கள் ஒழுங்காக இருந்தவை தானே. பயப்படாமல் எந்த நேரமும் உலாவக் கூடிய மாதிரி இருந்ததுதானே.

ஓ! பத்து வருடத்துக்கு முதல் உந்தக் களவையும் காணோம் சேட்டைகளுமில்லை. எவ்வளவு நிம்மதியாக இருந்தம். அவங்களின் ஷெல் சத்தத்தாலை தான் எங்களுக்கு உபத்திரவமாக இருந்தது. இப்ப தானே வழிப் பறிகளும், கோஷ்டி மோதல்களும், பொம்பளைச் சேட்டைகளும், கோதாரியளுமாய் காலம் கெட்டுக் கிடக்கு.

போன கிழமை எங்களுடைய றோட்டிலை ஒரு பொம்பிளையிண்ட தாலிக்கொடியையும் சங்கிலியையும் மோட்டார் சைக்கிளில் வந்தவங்கள் ஒத்திக் கொண்டு போட்டாங்கள்.

உங்கை யன்னல்களை உடைக்கிறாங்கள். வீட்டிலை உள்ளவற்றை அள்ளிக்கொண்டு போறாங்கள். இப்போது கேட்டுக் கேள்வியில்லைத்தானே. என்ன மாதிரி இருந்த யாழ்ப்பாணம் இப்போ கொள்ளையும் களவுமாயிருக்கு.

சுப்பு! முந்தின காலங்களில்தான் அன்பு, பாசம், இரக்கம், பெரியோரைக் கனம் பண்ணுதல் எல்லாமிருந்தது. இப்போ எல்லாம் வியாபாரமாகிவிட்டது. அதை விட நடிக்குதுகள். கணக்கில்லை.

ஓமோம்! இளைய தலை முறையினர் யார் தான் பெரியவரை மதிக்கினம்? நாங்கள் சொல்லுவதைக் கேட்கினம்.?

இப்போ, இரண்டு நாளுக்கு முந்தி, இப்படித்தான் பேப்பர் எடுப்பமென்று நடந்து வந்துகொண்டிருந்தன். பார்த்தால் படிக்கிற மாணவர்கள், பழசு! என்ன பொல்லிடியிலை திரியிறாய்? என்று சத்தம் போட்டு சிரித்துக்கொண்டு போயினம். என்னத்தைப் பேச?

"காவோலை விழ குருத்தோலை சிரித்த கதைதான்"

சிதம்பரம்! இப்படி இருக்கின்ற பெரும்பாலான பிள்ளைகள் பெற்றோருக்கோ, பெரியோருக்கோ, பாடசாலைக்கோ கட்டுப்பட்டவர்களில்லை.

அதற்கு மேல் பெற்றோர் ஒத்துக் கொள்ள வேண்டுமே. தங்களுடைய பிள்ளைகளின் நிலைமைகளை தெரிந்தும் தமது கௌரவத்திற்காக அவர்களும் சேர்ந்தெல்லே பொய் புரட்டு பேசுகினம். எங்களுடைய அயலிலை ஒரு பொம்பிளைப் பிள்ளை பாடசாலை மாணவி. கொஞ்ச பொடியன்கள் கொஞ்ச நாட்களாகப் பிள்ளைக்கு முன்னுக்குப் பின்னுக்கு சேட்டைகள், கரைச்சல்கள். இதிலை ஒரு பொடியன் தெரிந்த பொடியன். மாஸ்ரர் ஒருக்கால் கதையுங்கோ என்று அந்தப் பிள்ளையின் தாய், தகப்பன் வந்து கேட்டார்கள். போய்க் கதைத்தால், தாயும், தகப்பனும் ஒரே பேச்சில் எங்கண்டை பிள்ளை அப்படியில்லையாம். பிள்ளைகளைச் சீர் திருத்துகிற கதையில்லை. அப்ப கதைச்சுப் பாருங்களன்.

மூத்தோர் என்று ஒரு மரியாதை இல்லை. பழசு,நைன்ரி பட்டங்களுக்கும் குறைவில்லை.

நாங்கள் அந்த நேரம் வளர்ந்த விதம். நாகமுத்துச் சட்டம்பி பள்ளிக்கூடம் போகாட்டி பிரம்போடை வீட்டுக்கு வந்திடுவார்.

ஓ! எவளவு பணிவாகக் கல்வி கற்றனாங்கள். ஆச்சி, அப்புவுக்கு எவளவு மரியாதை. எங்கண்டை கலாசாரத்தை தொலைக்கினம். சரி அந்தக்காலம்தான் பழமையென்றால் இந்தக் காலம் கொடும்பாவிகள் செய்கிற வேலைகள் செய்யச் சொல்லியிருக்கே?

ஒரு சில சனமிருக்குது, பிள்ளையளுக்குப் பேசப் பழக்கிறதேகாணும் வெளி நாடுக்குப் போன எங்களுடைய சனங்கள் கூட தமிழ்ப்பற்றை விடாத பிடியாக வைத்திருக்கினம். இவர்கள் என்னென்றால் மம்மா, டடா என்னென்னவோவெல்லாம் கதைக்குதுகள். அதிலை வேறு பெருமையுமெல்லே படுகினம்.

பெயர்கள் கூட கசு, புசு தான். ஒரு அர்த்தமும் இல்லை. கூப்பிடுகினம் அதுவுமொரு தினிசு. இப்படியாக எத்தனை அலங்கோலங்கள். அவர்களுக்கு அப்படி ஒரு விருப்பம்.

முந்தின காலங்களிலை எங்களுடைய பேரன், பேத்தியை பிதா, மாதாவை எவளவு கண்ணும் கருத்துமாக நாங்கள் பார்த்தனாங்கள். எங்களை வளர்த்து ஆளாக்கியவர்கள் எனும் கடமையோடும், பாசத்தோடும் பணிவிடை செய்த காலங்கள் மலையேறி விட்டன.

இப்பதானே முதியோர் இல்லங்கள். எங்களுடைய பழக்க வழக்கங்கள் பந்த பாசங்கள் எந்த நிலைமையிலே இருக்கு பாருங்கோ. பிள்ளைகளைப் பெற்று,வளர்த்து ஆளாக்கியதற்கு கடைசி கால கடமை இப்படியிருக்கு.

இப்ப தானே சின்னவர்கள் புதுமொழி ஒன்று சொல்லுகினம் "அன்னையும் பிதாவும் பின்னடிக்கிடைஞ்சல்"

அந்தக் கால பாச பந்தம், பிறருக்குதவுகிற பண்பு, நன்றியுடைமை எல்லாம் இப்போ குறுகி வந்திட்டுது பாருங்கோ. சுய நலமும் வக்கிரமுமான காலம்.

ஓ! ஓ! இந்த வக்கிர புத்தியாலை தானே இப்படியாக ஆளை ஆள் தட்டுதுகள்.

இப்போவெல்லாம் தன்னேறு சட்டத்திற்குத் தானே வளருகினம்.

நடை, உடையைப் பாருங்கோ கொஞ்சச் சனம் தலை கீழாய் நிற்குது. அலங்கோலமான உடுப்புகள். உந்தப் பொம்பிளைப் பிள்ளையள் கொஞ்சம் சினிமாக் காரிகளின் நாகரிகத்திலை திரிய ஆம்பிளைப் பிள்ளையள் கையுக்குள்ளே ஒரு போன், ஒரு மோட்டார் சைக்கிள், உல்லாசப் பயணங்கள், கேலிக்கைகள், கூத்துகள், அதற்கு மேல் மனிசருக்கு உபத்திரவங்கள்.

அதுகள் அங்கை, வெளிநாட்டில பனியுக்கையும், குளிருக்கையும் படாதபாடு படுகிதுகள். இதுகள் உருப்படியில்லாத ஊதாரி வேலை பார்க்குதுகள்.

அதை விட கோஷ்டிச் சண்டை, வெட்டுக் குத்து யார் கேட்கிறது? இதுகளையெல்லாம். வாய் பத்திரம். கை பத்திரம்.

சாராயக் கடைகளும் முழுத்துக்குமுழம் குடிச்சுக் கொண்டாட வசதி. ஊதித் தள்ளுகிறது. அவர்களின் நடத்தைகளுக்கு யார் பொறுப்பு? தாங்களே கெட்டுக் குட்டிச் சுவராகுதுகள். வயதுக்கேற்ற குணங்குறியில்லை.

கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் என்று ஒரு குழு உந்தப் பிறள்வான உருவங்களைக் கண்டு பிடித்து சீர் திருத்துவதாக பேப்பரிலை இருந்தது.

இவர்களை திருத்தியாக வேணும். நாங்கள் என்னத்துக்காக? இவளவு காலமும் எத்தனையோ உயிர்களைத் தியாகம் செய்தும் இந்த யுத்தத்திலை அப்பாவிகளைப் பறி

**இனியவள்**

கொடுத்திருக்கிறம். எங்களுடைய உடைமைகளை, இருப்பிடங்களையெல்லாம் யாரோ அந்நியர் பறித்துக்கொண்டு எம்மை ஊர் ஊராக அலைய விட்டிச்சினம். எங்களுடைய மக்கள் உன்னதமான இலட்சியங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்போது இந்தக் கொடும்பாவிகளின் தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

சிவா! என்னுடைய பேத்தி சங்கானையிலை கந்தோர் ஒன்றிலை வேலை செய்கிறாள். பஸ் பிரயாணம் தானே. பஸ்ஸிலையும் ஒழுங்காப் போகுதுகளே? ஒருத்தர் சேட்டையிலை நின்றிருக்கிறார். இவள் பிள்ளையும் சொல்லியே பார்த்திருக்கிறாள். பிள்ளையின் சிநேகிதியும் சொல்லியிருக்கிறாள். கேட்பதாயில்லை. இவள் துணிஞ்சவள். ஒருவரும் வாலாட்டேலாது. சட்டைப் பின்னாலை ஏற்றிச் சொல்லியிருக்கிறாள். இது சொறி நாய்க்குப் போடுகிற ஊசி என்று "ஊ" என்று திருப்பிப் பார்த்தாராம். மற்றப் பிள்ளை, வட்டாரியைக் காட்டிச் சொன்னாளாம் இது விசர் நாய்க்குப் போடுகிற ஊசி என்று. இதுக்கென்று பஸ்ஸிலை ஏறுகிறதுகளுமிருக்குதுதானே.

அப்படியில்லை, உடனே பஸ் டிறைவரிடம் சொல்லி, பஸ்ஸை நிற்பாட்டச் சொல்லி, சம்பந்தப்பட்டவனை தள்ளிக் கொண்டு போய் ஏதும் மரம் தடிகளிலை கட்டி, நாய்க்கு மட்டை கட்டின மாதிரி எழுதித் தூக்கி உதுலை உரஞ்சிக் கொண்டு நில் என்று விட்டிட வேணும். பொம்பிளையள் துணிவாய் இருக்க வேண்டும். அப்பதான் ஆளாளைப் பார்த்துத் திருந்துவினம்.

கொள்ளை, கொலை, கோஷ்டி மோதல், வன்முறைகள் என்று இப்படியாக யாழ்ப்பாணத்திலை அக்கிரமம் கூடிப் போச்சு.

இடப்பெயர்வுகள், இந்த யுத்தக் கொடுமை, சுனாமி அழிவு சனம் இதுகளுக்குப் பிறகும் திருந்திதோ என்றால் இல்லைத் தானே.

'நீர்மேல் குமிழி போல் நிலையற்ற வாழ்வு' அது விளங்காமல் அக்கிரமம் கூடிப் போய் விட்டுது.

கள்ளன் ஒத்துறான் என்று பயப்படுகிறவை பிறகேனப்பா உந்தச் சங்கடங்களைப் பூட்டிக்கொண்டு போறவை.

வீட்டிலையும் திருட்டு, வெளியிலையும் திருட்டு. உந்த நகைகள் தானே ஏதோ தங்களது விரல் வீக்கத்தைக் காட்டுறவை என்று நினைக்கினம்.

உது கதைச்சு வேலையில்லை.

அன்பாய், உதவியாய் நேர்மையாய், புரிந்துணர்வாய் யாரும் இருக்கினமோ? என்று கேட்கின்ற நிலையிலை தானே எல்லோரும் இருக்கிறம். ஒவ்வொரு நாளும் பேப்பர் பார்த்தால் எங்களுடைய யாழ்ப்பாணத்தின் நிலைமைகள் தெரியும். எப்படியாக இருந்த யாழ்ப்பாணம் இப்படியாகப் போச்சுது.


என்னவோ கட்டடத்தை கட்டினம், அந்த அபிவிருத்தி, இந்த அபிவிருத்தி என்றினம். புனர் நிர்மாணம், புனர் வாழ்வென்றினம், எங்களுடைய சமுதாயப் பிரச்சினைகளைப் பற்றி யார் யோசிக்கினம்.

இப்படியாக, சமுதாயம் சீரழிஞ்சு போச்சு. சமுதாயச் சீர்கேடுகளை ஒழிக்க வேண்டும். இல்லையென்றால் பெரும் கரைச்சல்களை நாங்கள் காண வேண்டி வரும்.

பேப்பர் கடைக்குப் போனவரைக் காணவில்லையென்று தேடப்போகினம்.

சர்வா!சிதம்பரம் மாமாவை வீட்டிலை கொண்டு போய் விட்டிட்டு வா.

ஓமப்பா! ... சைக்கிளிலை ஏற்ற... போய் விட்டிட்டு வா.



# நூல் அறிமுகம்

நூல் :- உயிருட்டும் கடதாசி.
ஆசிரியர்:- த.சிவகுமார்.
வெளியீடு:- மணிமஹால் ஊரெழு.




கடந்தமாதம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி அரங்கில் இந்நூல் வெளியாகி உள்ளது. கல்லூரியின் கற்பித்தல் சாதன மூலவள உருவாக்கற்துறை விரிவுரையாளரான த.சிவகுமார் கடதாசிகளைக் கொண்டு உருவங்களை உருவாக்குவது சம்பந்தமான செய்முறை விளக்கங்களுடன் இப்புத்தகத்தை வடிவமைத்துள்ளார்.

சிறுவர்களுக்கு மகிழ்வூட்டவும் அவர்களின் உற்சாகமான செயற்பாட்டை மேம்படுத்தவும் இவ்வாறான கடதாசி விளையாட்டுக்கள் உதவக்கூடியதாகும். இந்த வகையில் இப்புத்தகத்தினை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மட்டுமல்ல பெற்றோர்கள் கூட இந்தப்புத்தகத்தை பெற்று பிள்ளைகளின் புத்தாக்கத்திறனை வளர்க்க உதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

சோ.சி. கலைக்கதிர்

# கல்லின் காயம்

சமாதியில் உன் நடுகல்லைப் பார்க்கிறேன்.

உன் பெயர். கீழே இரண்டு எண்கள்.
பிறந்த ஆண்டு; இறந்த ஆண்டு,
நடுவே ஒரு கோடு.

இதுதானா உன் முகவரி? இவ்வளவுதானா
உன்சரித்திரம்? இவைதாமா உன்
சாதனைகள்?

உன்பெயர்-நீ சம்பாதித்ததா?
உன் பிறப்பும் இறப்பும் உன் சாதனைகளா?

இந்த ஆண்டுகள்-வெறும் உளிக் கீறல்கள்
அல்லவா?

உன் பிறந்த ஆண்டு புன்னகையால்
செதுக்கப்பட்டதா?
உன் இறந்த ஆண்டு கண்ணீரால்
வரையப்பட்டதா?

கல்வெட்டா இது? இல்லை; கல்லின் காயம்.

இடையில் இந்தக் கோடு. என்ன
அர்த்தம் இதற்கு?

நீ வெறும் கோடுதானா?

வெற்றிடத்தை நீ நிரப்பவில்லையா?
அல்லது நீ நிரம்பவில்லையா?

இல்லை, இது கழித்தல் குறியா?
பிறப்பிலிருந்து இறப்பைக் கழித்தால்
வரும் விடைதானா நீ?

கழித்தலாக மட்டும் தான் இருந்தாயா?
கூட்டலாக, பெருக்கலாக, வகுத்தலாக
நீ இருந்ததில்லையா?

நீ எண்களால் மட்டும் ஆனவனா?
உனக்கென எழுத்துக்கள் இல்லையா?
நீ எழுதப்படவே இல்லையா?

இந்தக் கல் மட்டும்தான் உன்னை
நினைக்கிறதா? எந்த இதயத்திலாவது
உன்னை எழுதிக்கொண்டதில்லையா?

இந்த மண்ணில் மட்டும்தான் அடக்கமாகி
இருக்கிறாயா? எந்தப் புத்தகத்திலும்
நீ பொருளடக்கம் ஆனதில்லையா?

உன் மூச்சுக்கள் மரணத்தை நோக்கி
எடுத்துவைத்த அடிகள் மட்டும்தானா?
நீ பிறருக்குச் சுவாசமாக இருந்ததில்லையா?

மனிதன் ஆரம்பத்திலும் இல்லை; முடிவிலும்
இல்லை, நடுவில் இருக்கிறான்.

நீ உன்னைப் பெற்றெடுக்கவே இல்லையா?
அல்லது கண்டுபிடிக்கவே முடியாதபடி
உன்னைத் தொலைத்துவிட்டாயா?

மக்கள் தொகைக்கணக்கில் மட்டும்தான்
இருந்தாயா? வேறு எந்தக் கணக்கிலும்
நீ தொகையாக இருந்ததில்லையா?
வரவாகக் கூட வேண்டாம் பற்றாகக் கூட
இருந்ததில்லையா?

அப்துல் ரகுமான்

## படித்ததில் பிடித்தது

# திடங்கொள் கலங்காதே

விடிந்தது மார்கழி இருபத்தாறு
விரைந்தது சீற்றத்துடன் சுனாமி
தகர்ந்தது எதிர்காலக் கனவு
சிதைந்துபோனது எம் தாய்தேசம்
அகன்றது இறை அச்சம்.

எம்மைவிட்டு
ஆட்கொண்டது உலக இச்சை
எம்மோடு
சிந்திக்கத்தூண்டியது சுனாமியின்
சீற்றம்
போதித்தது இயற்கை தர்மத்தை
எமக்கு

விரக்தியின் முதுகில் ஊஞ்சலாடும்
மனிதனே
உன் சோகம் எமக்குப்புரிகிறது
எல்லாம் மாயை என்றெண்ணி
திடங்கொள் கலங்காதே
ஓரறிவுள்ள புல் பூண்டும்
மெல்ல மீண்டும் தளிர்க்கிறதே
ஆறறிவு பெற்ற மனிதனே
எல்லாம் அவன் செயல் என்றெண்ணி
திடங்கொள் கலங்காதே.

அன்பு கலந்த உள்ளத்தோடு
ஒன்றுபட்ட எண்ணமுடன்
ஜாதிமதபேதமின்றி
உடன்பிறந்த சகோதரராய்
மீண்டும் எம்தேசத்தை நாம்
கட்டியெழுப்புவோம் நீ அதற்காக
திடங்கொள் கலங்காதே.

தமிழில்:-இ.றஜித்
ஆங்கிலத்தில்:- சுமிடேவிட் அகமட்.

# உண்மைமுன் எழுவோம்

எல்லோரும் ஏதோ ஒன்றை
இழந்தும் பெற்றும்
கொண்டிருக்கிறார்கள்.

இரண்டு நிலைகளுக்கான
பரிமாற்ற நியதி
தவறுகளை நிகழ்த்துவதான
"காட்சிப்படிமம்"
பிரமாண்டம் உருக்கொள்கிறது.

தேவைகளுக்கான பொழுதுகள்
தீர்ந்து கருகின பின்.

"உரியது யாருக்கு வேண்டும்?"
அது இப்போது
யாருக்கானதோ தேவையாயிருக்கும்.

இழப்புக்களின் மீதான
"சமனீடு"
இழப்புக்களாயே நிகழ்த்தப்படுகிறது.

இழப்பின் பின்னான பெறுகையின் பெறுமானம்
"தேற்றமாய்" மட்டுமிருப்பின்
யாருக்கு வேண்டும் "தேற்றம்"?
இழப்பின் பெறுமதியே வரலாறாகட்டும்-

எல்லாவற்றை இழந்தாலும்
உரியது கிடைக்காவிட்டாலும்
"வாழ்வுப் பெறுமானம்"
கல்லறைகள் மீதாவது எழுதப்படட்டும்.

கடைசியில் கல்லறையும் எல்லோருக்கும்
இராது!-ஆயினும்
"வாழ்வுப் பெறுமானம்"
மண்ணிலே கலந்து நின்று
காலமெல்லாம் "வீரக்கதை பேசும்"
அது போதும் எமக்கு!
"உண்மை முன் எழுவோம்."

சின்னத்.தர்மராஜா

# கனவுகளின் காயம்

இடிகளை தாங்கி
உடைகிறது மனசு
பின்
நெருங்கும்,
பொருந்தும்.
கனவுகளின் தொடர்ச்சியில்
பிணைந்து
உயிர் காவுகிறது காலம்.
ஆசைத் துழையில்
முளைவிட்டு
பிரபஞ்ச வெளி
தாண்டும்
எண்ணக் கனவலைகள்.
ஒவ்வொரு தோல்வியும்,
ஒவ்வொரு சலிப்பும்,
விரக்தியின்
விஸ்வருபங்களும்
அனல் கொதிக்க
அடைத்து மூடி
சாந்தியடையும் சரீரம்
இன்னொரு புன்னகையின்
ஆரம்பம்
ஒரு கண்ணீரின் முடிவு.
உள்வெறி செத்து
புதிதாய் எழுந்தாலும்
உயிர் உரசி
எரியும்
நினைவுகளின் தலையில்
தோற்ற
கனவுகளின் காயம்.

ப.அருள்நேசன்

## சொற்சிலம்பம்-99

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச | ப் | ட | டு | ன் | தூா | பூ |
| மா | கு | ல் | பா | ந் | மி | ல |
| க | ரி | தி | ரோ | னி | ண் | வ |
| ஞ் | னா | ப | லி | னை | சீ | இ |
| டி | ட் | தா | ஷி | ர் | லி | கை |
| ற் | ர் | யா | க் | ஸ் | க | வு |
| ங் | வ | யோ | ன் | கி | த் | ஹி |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -97 இன் விடைகள்

01. மன்மோகன்சிங்.

02. பாஞ்சாலிசபதம்.

### சொற்சிலம்பம் - 97 இன் பரிசுக்குரியவர்

தே.தேவிகா, தரம் -6.
யா/அல்வாய் வித்தியாசாலை,
அல்வாய் வடக்கு,
பருத்தித்துறை.

### சொற்சிலம்பம் - 97 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. அ.ஷிபோ, தரம்-7, உடையார்கட்டு ம.வி, மூங்கிலாறு.

02. தி.சஜீவகாந், மு/பாரதி வித்தியாலயம், விசுவமடு.

03. செல்வி, இல-27, ஜெயந்திநகர், கிளிநொச்சி.

04. பா.வேணு, 565, யோகபுரம், மல்லாவி.

05. ர.ஜெகதீபன், யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், அல்லைப்பிட்டி.

06. க.கபில்ஸ்வரன், நீர்ப்பாசன விடுதி, வவுனின்குளம்.

07. சு.மாதவி, தரம்-5, றோ.க.பாடசாலை, புதுக்குடியிருப்பு.

08. தெ.சிவசீலன், வற்றாப்பளை ம.வி, முள்ளியவளை.

01. 1945 ஆம் ஆண்டு அமெரிக்காவினால் அணுகுண்டு வீசப்பட்ட நகரத்தின் பெயர்?

01) ........................................

02. உலகில் மிகப்பெரிய தங்கச்சந்தை உள்ள நாடு?

01) ........................................

சொற்சிலம்பம்-99
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ........................................

முகவரி :-........................................

........................................

........................................

## நகைச்சுவை



ஒருவர்:-
"எதுக்கு அந்த வாயில்லாத ஜீவனை அடிக்கிறீர்கள்"

மற்றவர்:-
''இதுவா வாயில்லாத ஜீவன். என்பையன் கிட்டே ஏப்ரலுக்கு அடுத்தது என் னமாதம் எண்டு கேட்கும் போது இது 'மே' எண்டு கத்துது"

சு.கௌரிஷன்




# அனகொண்டா

அனகொண்டா என்று ஒரு திரைப்படம். அந்தப் படத்திலே அது மனிதர்களையே விழுங்கிவிடுவது போல் சித்தரிக்கப்பட்டுள்ளது. பாம்பு வகைகளிலேயே மிகப்பெரியது இதுதான். ஒரு குழந்தையையே விழுங்கும் திறன்கொண்டது தான். ஆனால் மனிதர்களை விழுங்கியதற்கான ஆதாரம் இதுவரை கிடையாது. உண்மையில் மனிதர்கள் வசிக்கும் இடத்தைவிட்டு ஒதுங்கியே வாழக்கூடியது இது.

அனகொண்டாவை நீர்ப்போவா என்றும் கூறுவார்கள் நட்சத்திரபோவா அனகொண்டா என்றும் கூறுவதுண்டு. விஷமற்றது. இது தென் அமொிக்காவில் அதிகம் காணப்படும். இப்பாம்புகள் சதுப்பு நிலங்களிலும் ஆற்றங்கரையோரங்களிலும் வாழ்பவை. இவற்றின் உணவு பறவைகள், கொறி விலங்குகள், காட்டுப்பன்றி, கெய்மான் எனப்படும் தென் அமெரிக்க முதலை இனம், மீன் முதலியன.




பொதுவாக இவை 4 முதல் 6மீற்றர் நீளமுடையவை. மிக அபூர்வமாக 12 மீற்றர் நீளம்வரை வளரக்கூடியவையும் உள்ளன. பராகுவே ஆற்றுப்பகுதியில் காணப்படுபவை சிறிய இனம். இதன் வயிற்றுப் பகுதி மனிதனின் கைபருமன் இருக்கும். இது 270கிலோ எடைவரை இருக்கும்.

இரவு இரைதேடியான இது தன் இரைகளைச் சுற்றி வளைத்து நெருக்கி மூச்சுத் திணறும்படி செய்து கொன்றுவிடுகிறது. பிறகு இரையை தலைப்பகுதியில் இருந்து விழுங்கி விடுகிறது. பொதுவாக இது யாரையும் கடிப்பதில்லை. ஆனால் இதன் பற்கள் ஆழமான காயத்தை உண்டுபண்ணக்கூடியவை. ஒருமுறை இரை எடுத்துவிட்டால் பல மாதங்களுக்கு இதற்கு இரை தேவையில்லை.

இதன் உடல் புகைபடிந்த மஞ்சள் அல்லது பொன் பழுப்பு நிறத்திலிருக்கும். முதுகுப்புறத்தில் பெரிய கறுப்புப் புள்ளிகளும் பக்கவாட்டில் சிறிய கறுப்புப் புள்ளிகளும் இருக்கும். பெண் அனகொண்டா வருடத்திற்கு 40 முதல் 70 குட்டிகள் வரை போடும். முட்டைகள் உடலினிலுள்ளேயே பொரிந்து குட்டிகளாக வெளிவருகின்றன. ஒவ்வொரு குட்டியும் ஒரு மீற்றர் நீளமிருக்கும்.


விலங்கியலில் ஊர்வன வகுப்பில் ஸ்குவாமாட்டா வரிசையில் போவா குடும்பத்தைச் சேர்ந்ததுஇது.

## கைவண்ணம்



மோ.டெனிசி பேபி, தரம்-7ᶜ, சுண்டிக்குளம் சந்தி, விசுவமடு.

## பாம்புக்குப் பரிசாக சப்பாத்து




நன்றி:- பன்டேடைம்ஸ்

(முற்றும்)

# வீடு



# பிள்ளைகளுக்கு நீங்களே வழிகாட்டி

**நல்ல குணம் கொண்டவர்களாலேயே பிறரிடம் நல்ல மதிப்பை பெற்றுக்கொள்ளமுடியும்.**

நாங்கள் எவ்வளவுதான் பட்டம், பதவி, பணத்துடனும் வாழ்ந்தாலும் அந்த வாழ்க்கை எங்களினுடைய பிள்ளைகளைப் பாதிக்காத வாறு நடந்துகொள்வது ஒவ்வொரு தாய் தந்தையர்களின் கடமை. பணமிருந்தும் குணமில்லாமலும், பதவியிருந்தும் பிறரை மதித்து நடக்காமலும், பட்டமிருந்தும் பெருந் தன்மையுடனும் உங்களினுடைய வாழ்க்கைப் பாதையை நகர்த்திச் சென்றீர்களாயின் உங்களுடைய பிள்ளைகளின் மனதில் ஒரு பண்பற்ற, பாச உணர்வற்ற உறவாக மாறப்போவதை யாராலும் தடுக்க முடியாது.


உங்களினுடைய வாழ்க்கையில் எத்தனையோ கசப்பான கட்டங்கள் தோன்றியிருக்கும். எத்தனையோ இடையூறுகள் வந்திருக்கும். எத்தனையோ தோல்விகளுக்குப் பிற்பாடு தான் நீங்கள் வெற்றியை பெற்றிருப்பீர்கள். அதில் அத்தனை விடயங்களையும் உணர்த்துதல் வேண்டும். உணர்த்துதலின் மூலந்தான் அவர்களின் வாழ்க்கை வளர்ச்சி தங்கியுள்ளது. அதைவிடப் பெரியவிடயம் அதனை எவ்வாறு உணர்த்துதல் என்பதுதான் முக்கியவிடயம். ஒரு பண்புள்ளங்கொண்ட, பாச உணர்வு கொண்ட, பண்புள்ளங்கொண்ட கட்டுப்பாடுடன் அவர்களின் மனதில் படர விடுவீர்கள் என்றால் அது அவர்களின் மனதில் பசுமரத்தாணி போல பதியும் பலன்கிட்டும்.

நல்ல கற்பனையுடையவனாலேயே நல்ல ஆக்கப் படைப்புகளை செய்யமுடியும். நல்ல புத்தகம் வாசிப்பாலேயே நல்ல கருத்துகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். இதே போலதான் நல்ல குணம் கொண்டவர்களாலேயே பிறரிடம் நல்ல மதிப்பை பெற்றுக்கொள்ளமுடியும். இதனால் குடும்ப உறவு மேலோங்கிக் காணப்படும். எனவே பட்டம், பதவிகளைக் கண்டு பிள்ளைகளை நிற்கதியற்ற நிலைக்கு இட்டுச் செல்லாதீர்கள். உங்களின் பிள்ளைகள் உங்களுக்கு பெருமை தேடித்தருவார்கள். அதற்கான சூழலை நீங்கள் தேடிக்கொடுக்க வேண்டும். வளர்ப்பிலேயே நல்லவன் கெட்டவனாகவும், கெட்டவன் நல்லவனாகவும் ஆவதற்கு தாய் தந்தையர்களின் வளர்ப்பிலேயே தங்கியுள்ளது. அந்தக் கடமையில் கை நழுவுவீர்கள் என்றால் வாழ்க்கை சுபீட்சகரமாக இருக்காது என்பதை ஒவ்வொரு தாய்தந்தையரும் உணர்ந்து நடந்துகொள்ளுங்கள். உங்களின் பிள்ளைகளின் வாழ்க்கை வளம் பெறுவதற்கு.

**மு.கவிதரன்**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



# புரிந்துகொள்ளுங்கள்

**பொருளாதாரம் வாழ்க்கையை தீர்மானிக்கிறது. என்றாலும் ஒட்டு மொத்த வாழ்க்கையை பொருளாதாரம் தீர்மானிப்பதில்லை.**

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது. அது ஆயிரம் காலத்து பயிர் என்பவற்றுக்கப்பால் அந்தத் திருமண வாழ்க்கை வெற்றி பெறவேண்டுமாயின் கணவன் மனைவி இருவரும் வெளிப்படையாக மனம் விட்டு பேசிக்கொள்ளவேண்டும்.

இதுவரைக்கும் நீங்கள் திட்டமிட்டு செயற்பட்டு வந்தமைக்கு புறம்பாக இனி உங்கள் திட்டமிடல் ஒழுங்காக இருக்கவேண்டும். நீங்கள் திட்டமிடாமல் செயற்படுவீர்களேயானால் நிச்சயம் நீங்கள் திட்டமிட்டே உங்கள் இல்லறத்தில் தோல்வியை தழுவிக்கொள்கிறீர்கள் என்பதில் மாற்றமில்லை. எனவே குடும்ப வாழ்வில் முதலில் திட்டமிட்டுக்கொள்ளுங்கள் அதிலும் தனிக் குடித்தனம் நடத்தத் துவங்கிவிட்டீர்கள் என்றால் நிச்சயமாக நீங்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி செய்ய பழகிக் கொள்ளவேண்டும். மனைவி மாத்திரமே சில வேலைகள் செய்ய வேண்டும். இந்த வேலைகளை கணவன் மாத்திரமே செய்யவேண்டும். என்ற நிலைக்கு அப்பால் நீங்கள் செயற்பட வேண்டும்.

முதலில் உங்கள் மனங்களிலிருந்து ஈகோவை(Ego) விரட்டியடிக்கவேண்டும். கணவன் மனைவியிடமும் மனைவி கணவனிடமும் மரியாதை, கௌரவம் என்பவற்றை எதிர்பார்ப்பதையோ அல்லது அவ்வாறு நடந்துகொள்வதையோ விடுத்து தனியே அன்பை மட்டும் எதிர்பாருங்கள் அவற்றின்பால் நடந்துகொள்ளுங்கள் நிச்சயம் உங்கள் இல்லறம் நல்லறமாக அமையும்.

அலுவலகங்களில் நீங்கள் உயர் பதவிகளில் இருந்தால் உங்கள் அதிகாரங்கள் மற்றும் பதவி நிலை சார்ந்த அனைத்தையும் அங்கேயே விட்டுவிட்டு வீடு திரும்பும் போது நல்ல கணவனாக அல்லது நல்ல மனைவியாக அல்லது உங்கள் பிள்ளைகளுக்குரிய நல்ல, தாயாக தந்தையாக தனியே பாசத்தோடு மட்டும் வீட்டிற்குள் நுழையுங்கள், வீட்டினை அன்பால் ஆட்சி செய்யுங்கள். இருவருக்கும் ஏற்படும் கருத்து முரண்பாடுகளை மனம் விட்டு பேசித் தீர்த்துக்கொள்ளுங்கள்.

பெரும்பாலும் இரவு வேளைகளில் குடும்பத்தவர்கள் அனைவரும் ஒன்றாக உணவு உட்கொள்ளப் பழகிக்கொள்ளுங்கள். ஒருவருக்கொருவர் நன்றாகப் பேசிக் கொள்ளுங்கள். ஆலோசனைகளை வழங்குங்கள் பெற்றுக்கொள்ளுங்கள். குடும்ப வேலைகளை பரஸ்பரமாக பகிர்ந்துகொள்ளுங்கள், தட்டிக் கொடுங்கள். பொறுமை மற்றும், விட்டுக்கொடுப்பு என்பவற்றை வளர்த்துக்கொள்ளுங்கள்.

முடிந்தால் அனைவருமாக சேர்ந்து சிறு சுற்றுலாவை மேற்கொள்ளுங்கள், மகிழ்ச்சியாக நகைச்சுவையாகப் பேசுங்கள். உங்கள் முகத்தை எப்போதும் ஒரு புன் சிரிப்புடன் வைத்துக்கொள்ளுங்கள், சரியோ, பிழையோ கருத்துக்களை கேளுங்கள். பிழையாயின் நாகரிகமான முறையில் எடுத்துக்கூறுங்கள் வார்த்தையோடு பாசத்தை தவிர வேறு எதனையும் பிரயோகிக்காதீர்கள். அன்பால் எதையும் செய்யலாம் என்பதனை மறந்துவிடாதீர்கள். குடும்பத்தில் உங்கள் உங்கள் பொறுப்புகளை உணர்ந்து செயற்படுங்கள்.

பொருளாதாரம் வாழ்க்கையை தீர்மானிக்கிறது. என்றாலும் ஒட்டுமொத்த வாழ்க்கையை பொருளாதாரம் தீர்மானிப்பதில்லை. எனவே இல்லறம் நல்லறமாக அமைய கணவன் மனைவி இருவரும் புரிந்துணர்வுடன் திட்டமிட்டு செயற்படுங்கள் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள். அதற்காக இப்போதே எனது வாழ்த்துக்கள் உங்களுக்கு.



# வாழ்க்கை சுமையல்ல..!

**மனஉறுதியும், தன்னம்பிக்கையும் இருந்தால் போதும். எதையும் வெல்லலாம்.**

வாழ்க்கையை எல்லா பெண்களுமே சுமையாகத்தான் நினைக்கின்றார்கள். ஆனால் வாழ்க்கை என்பது சுமையல்ல சுகம். இந்த வாழ்க்கை மீண்டும் மீண்டும் சந்திக்கப் போவதில்லை. இன்று போனால் இந்த நாள் நாளை உங்களிற்குக் கிடைக்கப்போவதில்லையே. ஏதோ மலை வந்து மடியில் விழுந்தது போல் இத்தனை கவலை உங்களிற்கு எதற்கு?

உங்களை விட இன்னல்கள் ஏராலம் இருக்கும். உங்கள் அன்றாட வாழ்க்கை பிரச்சினையை மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்டு இருக்கும் நீங்கள் இவ்வளவு குழப்பமாக இருப்பதனால் இயற்கை அழகை இரசிக்கத் தெரியவில்லை உங்களிற்கு. மழையின் குறும்புகள் கூட எரிச்சலாகத் தான் தெரிகின்றது.

உழைப்பு வியர்வையில் சலிப்புத்தான் மிஞ்சுகின்றது. காதலனோடு கூட உங்களிற்கு ஆத்மார்த்த நேரத்தில் தேய்மானம் தெரிகின்றது. இது ஏன் எதற்காக? உங்களை நீங்கள் மாற்றிக்கொள்ளுங்கள். சின்னச் சின்ன முயற்சிகள் செய்தால் போதும். உங்கள் வாழ்க்கைக்கு சிறகு முளைக்கும் வசந்தம் வந்து பூவாய் பூக்கும். மகிழ்ச்சி, தென்றல் சாரலாய் வீசும். உங்கள் கடந்த காலம் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும் அதனை மறந்துவிடுங்கள். மனதுக்கு பிடித்த மகிழ்ச்சியான விடயங்களை அடிக்கடி நினையுங் கள், பேசுங்கள், கொஞ்சமாவது சிரியுங்கள். மூக்கின் மீது கோபம், கவலை, சிடுசிடுப்பு, குழப்பம் எதிரிப் பார்வை ஆகியவைகளை தூக்கி தூரே எறியுங்கள். இவைதான் உங்கள் வாழ்க்கையின் விரோதிகள்.

நானும் மகிழ்ச்சியாக இருப்பேன். பிறரையும் மகிழ்ச்சியாக வைத்திருப்பேன் என்ற தாரக மந்திரத்தை நெஞ்சில் பதியுங்கள், நன்றாக உழையுங்கள். உழைப்பதற்காகத்தான் கைகள் உள்ளன. வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களையும் ரசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

மனஉறுதியும், தன்னம்பிக்கையும் இருந்தால் போதும் எதையும் வெல்லலாம். வாழ்க்கை முடிவதற்கு முன் நிச்சயம் வெற்றி பெறலாம். இன்றைய பொழுதிலிருந்து நீங்கள் புதிய பெண்ணாக உணருங்கள். நீங்கள் புரட்சி படைக்க வேண்டும். புத்துணர்வு பெறவேண்டும். சாதனை படைக்கவேண்டும். தனிமையில் உங்களை அசை போடுங்கள். துன்பம் மீது கெடுதல், சோகம் மறந்து இன்பம், நலம், சுகம் தேடுங்கள். உங்கள் வாழ்க்கை உங்கள் கையில்.

**நா.மேனகா**

## வெனிலா ஐஸ் கிரீம்




தேவையான பொருட்கள்:-

$1\frac{1}{2}$ கோப்பை பால்
3/4கோப்பை சர்க்கரை
2 முட்டைகள்
1/4கோப்பை தண்ணீர்
1 கோப்பை கிரீம்
1/2 தேக்கரண்டி வெனிலா எஸ்ஸென்ஸ்
1/4 தேக்கரண்டி உப்பு

செய்முறை:-

* முட்டை வெள்ளைக்கரு மஞ்சள் கருவை பிரித்துக்கொள்ளவும்.
* தண்ணீரை ஒரு பாத்திரத்தில் சூடாக்கிக்கொண்டு அதன்மீது இன்னொரு பாத்திரம் வைத்து அதில் மஞ்சள் கரு, பால், சர்க்கரை ஆகியவற்றை சேர்த்து ஒரு கரண்டியால் நன்றாகக் கலக்கவும். கரண்டியின் பின்னே ஒரு படலமாகப்படியும் வரைக்கும் கலக்கவும். இதில் உப்பு மற்றும் வெனிலா எஸ்ஸென்ஸ் மற்றும் கிரீம் சேர்த்து மெதுவாக மடிக்கவும். கரண்டியின் மூலம் மெதுவாக எடுத்து மடித்து மடித்து கலக்கவும். இதனை குளிர் சாதனப்பெட்டியின் உறை அறையில் வைத்து முக்கால் பாகம் உறையும் வரை வைக்கவும். பிறகு வெள்ளைக்கருவை தனியே எடுத்து தீவிரமாக அடித்து நுரை நுரையாக வரும்வரை அடித்து இதனுடன் கலந்து மீண்டும் நன்றாக அடித்து இதனை உறை அறையில் இரவு முழுவதும் வைக்கவும். காலையில் எடுத்து உண்ணலாம்.




குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்—59

பெயர்:............................................

முகவரி:..........................................

..........................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# மன்னார் மாதோட்ட மண்ணில் கூத்துக் கலை மரபுகள்

**தமிழரின் பண்பாட்டுக் கோலங்களில் கலைகள் தனித்துவமானவை. அதிலும் நாடகக் கலை சங்ககாலத்தில் இருந்து வளர்ச்சிகண்டு வந்துள்ளது. எனினும் இந்த வளர்ச்சிக்கான சான்றாதாரங்களை முழுமையாகப் பேணிக் காப்பதில் நம்மவர்கள் தவறிழைத்துவிட்டனர். ஈழத்துக் கலை வளர்ச்சியில் நாடகக்கலை தனித்துவச் சக்தி வாய்ந்தது. பிரதேசவாரியான நாடக வளர்ச்சியை நோக்கும்போது மன்னார் மாவட்டத்தின் நாடகக்கலையானது "கூத்து" வடிவத்தை நீண்ட காலமாகக் கொண்டது.**



ஈழத்தமிழர் தம் வாழ்வு யுத்த அனர்த்தங்களால் சிதைக்கப்பட்டுள்ள நிலையிலும், மன உறுதியுடன் சமூக, பொருளாதார, கலாசார அம்சங்களில் நமது இருப்பினைத் தங்க வைக்கவேண்டும் என்ற வைராக்கிய உணர்வு தமிழ் மக்கள் மத்தியில் என்றுமில்லாதவாறு உத்வேகம் அடைந்துள்ளது என்பது வெளிப்படை. இயங்கியல் விதியின் பிரகாரம் மனிதனை நெருக்கடிகள் சூழ்கின்ற போதுதான் மனிதனின் சிந்தனைச் சக்தியும் செயல் திறனும் கூர்மை அடைகின்றது. நாம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகள் எமது சிந்தனையை வளம்படுத்தவேண்டும். எமது வாழ்வின் இருப்பினை அடுத்த தலைமுறையினருக்கு வழங்கவேண்டுமாயின் முதலில் நமது மொழி சார்ந்த பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்கவேண்டும்.

தமிழரின் பண்பாட்டுக் கோலங்களில் கலைகள் தனித்துவமானவை. அதிலும் நாடகக் கலை சங்ககாலத்தில் இருந்து வளர்ச்சிகண்டு வந்துள்ளது. எனினும் இந்த வளர்ச்சிக்கான சான்றாதாரங்களை முழுமையாகப் பேணிக் காப்பதில் நம்மவர்கள் தவறிழைத்துவிட்டனர். ஈழத்துக்கலை வளர்ச்சியில் நாடகக்கலை தனித்துவ சக்தி வாய்ந்தது. பிரதேசவாரியான நாடக வளர்ச்சியை நோக்கும்போது மன்னார் மாவட்டத்தின் நாடகக்கலையானது "கூத்து" வடிவத்தை நீண்ட காலமாகக் கொண்டது.

பொதுவாக நோக்கும்போது 'தமிழினத்தின் நாடகக்கலையின் மூலவேர் "கூத்து" வடிவத்தையே கொண்டது' என்பது ஆய்வாளரின் கருத்தாகும். அதனால்தான் "கூத்து" என்பது நாடகம் என்ற கருத்தினைக் கொண்டது. தமிழரின் புகழ் பூத்த கூத்து நாடக வடிவானது மன்னார் மாவட்ட மக்களால் காலங்காலமாக பயில் நிலையில் பேணப்பட்டு வருகின்றது. நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டதும், கடல்வளமும், பயிர் வளமும் சிறக்கும் மன்னார் மாதோட்ட மானிலமானது கிழக்கே ஆலங்குளத்தையும், மேற்கே பாக்குநீரிணையையும், தெற்கே மோதரகம் ஆற்றையும், வடக்கே வெள்ளாங்குளத்தையும், எல்லைகளாகக்கொண்ட பரந்த விஸ்தீரண முடைய நிலப்பரப்பாகும்.

பல நூற்றாண்டு காலமாக தமது பாரம்பரிய சமுதாய ஒழுங்கமைப்புக்களுடன் வாழ்ந்துவரும் மன்னார் தமிழ் பேசும் மக்கள் கூத்து வடிவிலான நாடகக்கலையை தமது வாழ்வில் பிரிக்கமுடியாத அம்சமாகப் பேணிக்காத்து வந்துள்ளனர் என்பது மறுக்கமுடியாத உண்மை.

16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பியரான போத்துக்கேயரின் வருகையோடு இலங்கையில் கத்தோலிக்க-கிறிஸ்தவ மதம் பரவலடைந்துள்ளது. கத்தோலிக்க மதப் பரப்புதலின் செல்வாக்குக்குட்பட்ட முதன்மைப் பிரதேசமாக மன்னார்ப் பிரதேசமே விளங்கியது. கத்தோலிக்க குருக்கள் மக்களை மதமாற்றம் செய்வதற்கான சிறந்த "பிரசார ஊடகமாக" இங்கு ஏற்கனவே பயில் நிலையிலிருந்த கூத்து நாடக வடிவங்களையே தேர்ந்தெடுத்தனர். அந்த அளவுக்கு கூத்துக்கலை மக்களின் வாழ்க்கை முறையுடன் பின்னிப் பிணைந்திருந்தது.

இதனால் கத்தோலிக்க குருக்கள் கலை இலக்கியங்களில் அன்று சிறந்து விளங்கிய புலவர்களை இனங்கண்டு அவர்களை அணுகி கிறிஸ்தவ மதக் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் கதைக்கருக்களைக்கொண்ட கூத்து நாடகங்களை எழுதுவித்து அவற்றைப் பக்தி பூர்வமான கலை நிகழ்வுகளாக அரங்கேற்றினர்.



இத்தகைய கூத்து நாடகங்கள் புனிதர்களின் தியாக வாழ்வைப் பிரதிபலித்தமையால் மக்கள் இக்கூத்துக்களை பக்தி பூர்வ நிகழ்வாகக் கருதினர். இரண்டு மூன்று இரவுகள் ஆடி நடிக்கக்கூடிய கூத்துக்களை நாடகம் என்றும், ஓர் இரவில் நடிக்கும் கூத்தினை "வசாப்பு" என்றும் வழங்கினர்.

"வாசாப்பு" என்பது வசனமும் பாவும் கலந்த நாடக வடிவமாக விளங்கி காலகதியில் "வாசாப்பு" என மருவியதாகக் கூத்தியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நாடகம், வாசாப்பு போன்ற கூத்து வடிவங்களுடன் வசன வாசாப்பு சபா, டிறாமா, பாசுக்கை போன்றபுதிய நாடக வடிவங்களும் கிறிஸ்தவ மதப்பரப்புதலின் பயனாக தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டன.

"பாஸ்கு" நாடகம் என்பது உலக இரட்சகர் கிறிஸ்து பெருமானின் திருப்பாடுகளின் நிகழ்வுகளைச் சித்தரிக்கும் நாடகமாகும். இப்பாஸ்கு நாடகங்கள் ஆரம்பத்தில் "உடக்கு" என்ற மரப்பாவைகளினாலான மனித உருவங்களைக்கொண்டு நடிக்கப்பட்டது. இதனை மக்கள் "உடக்குபாஸ்" என்று அழைத்தனர்.

தென்னிந்தியாவில் அன்று பயில் நிலையில் இருந்த பாவைக்கூத்தின் மற்றொரு பரிமாணமாக உடக்குபாஸ் அமைந்தது. இன்றும் உடக்குபாஸ் எனப்படும் பாவைக்கூத்து பேசாலையில் பயில் நிலையில் உள்ளது. மன்னார் பெருநிலப்பரப்பில் உள்ள பறப்பாங்கண்டல் பெரியகோயில் இலங்கையிலேயே பாஸ்கு நாடகம் நடிக்கப்படும் பிரபல்ய புனித ஆலயமாக அன்று விளங்கியதாக வரலாற்று ஆதாரங்கள் உண்டு.

நாடக வடிவங்கள் கிறிஸ்தவ மதக் கருத்துக்களைப் பிரதிபலித்தாலும் நாடகத்தின் பாவடிவங்கள் ஏற்கனவே வழக்கில் இருந்து வந்த பாவடிவங்களைக்கொண்டுதான் நாடகங்கள் உருவாக்கப்பட்டன. உதாரணமாக ஒரு கிறிஸ்தவ கூத்து நாடகத்தினை முழுமையாக ஆழ்ந்து நோக்கும்போது வெண்பா, கவி, விருத்தம், சிந்து, வண்ணம், தாளிசை, கட்டளைக்கலித்துறை, தோடையம், இன்னிசை போன்ற பல்வேறு பாவடிவங்களைக்கொண்டதாக இருப்பதை அறியலாம். இப்பாவடிவங்கள் யாவும் நமது தமிழ் மொழியின் இலக்கண வரம்புக்குட்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய காலப் பகுதியில் கத்தோலிக்க குருக்களால் கூத்து நாட கங்களை உருவாக்கி அரங்கேற்றுவதற்கான ஊக்குவிப்பு வழங்கப்பட்டதால் மன்னாரில் பரவலாக வாழ்ந்த பல புலவர்கள் ஒவ்வொருவரும் பல நாடகங்கள் எழுதினர். எமது பொதுவான கணிப்பீட்டின்படி 1957ஆம் ஆண்டு வெள்ளப்பெருக்கில் அழிந்தவை போக ஏறத்தாழ 150 நாடக ஏடுகள் இன்றும் பல கிராமங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என அறியமுடிகின்றது.

மன்னார் மாதோட்ட மண்ணில் 16ஆம் நூற்றாண்டுக்கு முன்பு நாடகக் கலை எந்த நிலையில் இருந்தது என்பதற்கான சான்றாதாரங்கள் அவ்வளவாக இல்லை. 16ஆம் நூற்றாண்டில்தான் மாதோட்ட அரங்கக் கலையினை தடங்காண முடிகின்றது என அமரர் புலவர் பெஞ்சமின் செல்வம் அவர்கள் தனது ஆய்வின் மூலம் நிறுவியுள்ளார்.

**திரு.எஸ்.டேவிட் (அதிபர்),**
**கல்வி முதுமாணி கற்கை நெறி,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

மன்னார் மாவட்டத்தில் வளர்ச்சியடைந்த கிறிஸ்தவ நாடக மரபின் தந்தையாக அமரர் லோறன்ஸ் புலவர் என இனம் காணப்பட்டுள்ளார். இவரது காலப்பகுதி கி.பி.16ஆம் நூற்றாண்டின் பிற் பகுதிக்கும் 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலமாகும்.

அவரால் இயற்றப்பட்டதெனக் கருதப்படும் வெண்பா வடிவிலான காப்புக் கவியானது மிகவும் பக்தி பூர்வமானதும் பிரபலமானதுமாகும்.

அமரர் லோறன்ஸ் புலவர் அவர்கள் பாடிய இந்த முதன்மையான காப்புக்கவியானது மன்னார் மானில கிறிஸ்தவ நாடக மரபின் தேசிய கீதமாகவும், நாடக நிகழ்வின் ஆரம்பத்துக்கு முன்பு பாடப்படும் புகழ் மிக்க வெண்பாவாகவும் விளங்குகின்றது.

வெண்பாவிலான அவர் பாடிய வல்ல சிலுவை காப்புக்கவி இவ்வாறு அமைகின்றது;

வல்லசிலுவைமரத்தைப் புயத்தேந்தி
சொல்லரிய வாதைத்துயரோடு-
கல்வாரி
மேட்டுக்கு மேல் நடந்த தேவபரனே-
எமது
பாட்டுக்கு முன் நிற்பதாம்.

அமரர் லோறன்ஸ் புலவர் அவர்களிடம் இலக்கண இலக்கியம் கற்ற பல மாணவர்களே பிற்கால கிறிஸ்தவ கூத்து நாடகங்களை உருவாக்கியும் மேடையேற்றியும் கூத்து நாடக மரபை வளப்படுத்தினர். லோறன்ஸ் புலவர் அவர்களின் முதன்மை மாணவர்கள் வரிசையில்

★தென்பாங்கில் என்றிக் எம்பிரதோர் நாடகம் பாடிய குருகுல நாட்டுத் தேவர்.

★கோது கப்பித்தான் நாடகம் பாடிய சந்தியோகுப் புலவர்.

★மரிகிருதாள் நாடகம் பாடிய வெள்ளைப் புலவர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

★அவர்களை அடியொற்றி பிற்காலத்தில் ஏராளமான கிறிஸ்தவ, இஸ்லாமிய புலவர்கள் பல நாடகங்களை எழுதினார்கள். இப்புலவர்கள் அனைவரும் பரஸ்பரம், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மதக்கொள்கைகளை தெளிவுற அறிந்திருந்தார்கள் என்பதை மன்னார் புலவர்களின் வரலாற்றைத் தொகுத்தளித்த அமரர் புலவர் பெஞ்சமின் செல்வம் அவர்கள் தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மக்கள் கிராமியக் கலையான கூத்து நாடகங்களை அரும்பெரும் கலைப் பொக்கிசமாகக்கருதினர். ஒவ்வொரு ஊருக்கும் உகப்பான ஒவ்வொரு நாடகம் உண்டு. இவை வயல் அறுவடை முடிந்த ஓய்வு காலங்கள், ஆலய உற்சவ காலங்கள் போன்ற வேளைகளில் அனேகமாக நடிக்கப்படுகின்றன. ஊர் ஒற்றுமைக்காகவும், செழிப்பான வாழ்வுக்காகவும் பஞ்சம், பசி, பிணி நீங்கி செல்வமும் நல்வாழ்வும் பெறுவதற்காகவும் இறைவனின் கருணையை நாடி மிகவும் பக்தி பூர்வ நிகழ்வாக நாடகத்தை அரங்கேற்றி முடிப்பர்.

### கூத்துக்கலையின் இன்றைய அவலநிலை


மன்னாரில் கூத்துக்கலை இன்று உறக்க நிலையில் உள்ளது. மிக மோசமான யுத்தம் நடைபெற்ற காலங்களில் வசதி வாய்ப்புகள் அற்ற நிலைமையிலும் பரவலாக ஆங்காங்கே பல கிராமங்களில் கூத்து நாடகங்கள் துணிச்சலுடன் அரங்கேற்றப்பட்டன. ஆனால் அமைதி நிலவுகின்ற மூன்று வருடகாலப் பகுதிக்குள் வசதி வாய்ப்புக்கள் சாதகமாகி உள்ள நிலையில் எத்தனை கூத்து நாடகங்கள் அரங்கேறின என எண்ணிப்பார்க்கும்போது ஏமாற்றமாக உள்ளது.

இப்போதெல்லாம் மக்களின் அனைத்து வயதுப்பிரிவினரும் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்குள் 'அடக்கம்' செய்யப்பட்டுள்ள நிலையிலேயே உள்ளனர்.

ஆலய உற்சவ காலங்களிலும், நெல் அறுவடை முடிந்த பின்னரும் ஆங்காங்கே ஏட்டிக்குப்போட்டிபோல பரவலாக பல கிராமங்களில் கூத்து நாடகங்களை ஒற்றுமையாக பக்திபூர்வமாக அரங்கேற்றும் முயற்சிகள் இன்று பெரும்பாலும் கைவிடப்பட்டுள்ளன.

கூத்துக்கலைகளின் வரன்முறைகளையும், இராக தாளங்களையும், சம்பிரதாய மரபுகளையும் நன்கு அறிந்த பல மூத்த கலைஞர்கள் முதுமை அடைந்துவிட்டனர். இந்நிலையில் இளைய கலைஞர்கள் மன்னாரின் பாரம்பரிய கூத்துக்கலையை அரங்கேற்ற முயற்சிகளை முன்னெடுக்கவேண்டிய கடப்பாடு இன்றைய காலத்தின் கட்டளையாக உள்ளது. தொலைக் காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் தவம் கிடக்கும் அனைத்து வயதுப் பிரிவினரையும் நமது பாரம்பரியக்கலைகளை உ[illegible]டன் அரங்கேற்றுவதனூடாக, விழி[illegible]ய்வதன் மூலம் தமது கலைப்[illegible]தை பேணிப்பாதுகாப்பது நம[illegible]ாய கடமையாகும்.

## இருளில் மூழ்கும் நகரம்



கிளிநொச்சி நகர் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. அரசியல் ரீதியாக மற்றும் பல்வேறு வகையிலும் தற்போது முக்கியத்துவம் பெற்ற நகராகக் கிளிநொச்சி விளங்குகின்றது. ஆனால் ஒரு நகருக்குரிய அனைத்து வசதிகளும் காணப் படுகின்றதா? என்றால் இல்லை யென்றே கூறவேண்டும். குறிப்பாக ஒரு நகருக்கு வீதி விளக்குகள் என்பது இன்றியமையாததொன்று. ஆனால் கிளிநொச்சி நகரினை பொறுத்தவரை தெருவிளக்குகள் கிடையாது.

இரணைமடுச் சந்தியிலிருந்து பரந்தன் சந்திவரை வீதி விளக்குகள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததே தவிர இன்றுவரை நடைமுறைக்கு வரவில்லை.

கிளிநொச்சி நகரைப் பொறுத்தவரை தெருவிளக்குகள் பொருத்தப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

# ஆரோக்கியமாகச் சிந்திக்க பின்னடிக்கிறம்... எங்களுக்குள் மனமாற்றம் வரவேண்டும்!

## ஏ9-ஏரம்பு

உலா 45

**சினிமாப்படங்களில மட்டும் நாங்கள் விரும்பிற முடிவுகளை ஏன் எங்களுக்கிடையில இருக்கிற ஆக்களுக்கெண்டு வரேக்கிளை மட்டும் கூச்சம் ஒண்டுமில்லாமல் நாங்கள் வில்லன்களாகவும், வில்லிகளாகவும் மாறிக்கொள்றோம் ? first hand, second hand எல்லாம் பார்க்கிற எங்களில பலர் இண்டைக்கு உதவி நிறுவனங்களின்ரை hand ஐ நம்பித்தான் வாழிறம் எண்டதையும் மறக்கக்கூடாது. இக்கட்டான நிலைமைக்கு போரும், இயற்கையும் கொண்டு வந்தது தவிர்க்க முடியாதது. ஆனால், நாங்களே எங்கட சக மனிதனுக்கு குழிபறிக்கிற ஆக்களாய் இருக்கப்படாது.**

வணக்கம் எல்லாருக்கும்! எப்பிடி இருக்கிறீயள் எல்லாரும்? நான் உங்களுக்கு முந்தி சொன்னனானோ இல்லையோ? பொதுக்கட்டமைப்பு பற்றின வழக்கு விசாரணையை செப்ரெம்பருக்கு ஒத்திப் போட்டவை. இப்ப செப்ரெம்பர் அண்மிக்கிற நேரம் பார்த்து ஒக்ரோபருக்குத் தள்ளிப்போட்டிருக்கினம். உதுகளுக்கு இப்ப நானோ, நீங்களோ கதை சொல்லத்தேவையில்லை. என்ன செய்யவேணுமோ, அதைச் சனமே அந்தமாதிரிச் செய்து கொண்டிருக்கிது.

மற்றது பாருங்கோ! அண்டைக்கொரு இடத்துக்குப் போனனான். அப்ப தெரிஞ்ச ஒராள் வந்து கதைச்சுக்கொண்டு நிண்டிட்டு, “அப்ப வாற கிழமை இஞ்சத்தையப் பற்றித்தான் வரப்போகுது போல!'' எண்டு சொல்லிச்சிது. ஐயோ பாருங்கோ! போற போற இடங்களைப் பற்றியெல்லாம் எழுதி குறை சொல்லிற ஆள் நானில்லை. என்ரை மனசை ஏதாவதொரு விதத்தில பாதிச்சிருக்கோணும்; நாலு பேரோட பேசிப் பகிர்ந்துகொள்ளவேண்டிய விசயமாகவும் இருக்கோணும்.

அப்பிடித்தான் தவறாமல் வாராவாரம் ஏதோ ஒரு விசயம் இருக்கத்தான் செய்யிது. அப்பிடித்தான் அண்டைக்கு பிபிசி-தமிழோசையில போன செய்தியில சொல்லப்பட்ட விசயம் ஒண்டு மனசுக்குள்ள ஜீரணிச்சுக்கொள்ளிறதுக்கு கஷ்டமாய் இருந்திச்சிது. அதைப்பற்றி உங்களோட ஒருக்கால் கதைக்கோணும் எண்டு நினைச்சனான்.

ஏனெண்டால் பெரியளவில 26500 பேரைப் பறிகொடுத்திட்டு இருக்கிற நாங்கள் இது விசயத்தில இன்னும் எங்கட பார்வையளை மாத்திக்கொள்ளாட்டி அது பெரிய பாவம் பாருங்கோ! என்ன யோசிக்கிறீயள்? சுனாமியில மனைவிமாரைப் பறிகொடுத்த புருசன்மார் திரும்ப தங்களுக்கெண்டு ஒரு துணையைத் தேடி மணம் முடிக்கினமாம். சந்தோசமான விசயம்தான்.

ஆனாலும், அவையள் தங்களுக்கு வர்ற துணை புதுப் பொம்பிளையாத்தான் இருக்கோணும் எண்டு 1008 காரணங்களைச் சொல்லி நியாயப்படுத்தப் பார்க்கினம். அவையளை மாதிரி புருசனை இழந்த இளம்பெண்களின்ரை நிலைமையையும் கொஞ்சம் யோசிச்சுப்பாருங்கோ! மனைவியை இழந்த புருசன்மார் தான், கணவனை இழந்த பெண்களை மணம் முடிக்கோணும் எண்டு நான் சொல்லேல்லை. அவையள் எல்லாருமே வாழ்க்கையைத் தொடர வேண்டிய ஆக்கள்தான்.

கொண்ட உறவுக்கு உண்மையாய் இருக்கிறதுதான் ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவான கற்பு. அதைவிடுத்து சும்மா விசர்க்கதையளை இன்னும் எத்தினை காலம் கதைச்சுக்கொண்டிருக்கப்போறோம்? 20 வருசம் போர் நெருக்கடியளுக்கு முகங்கொடுத்த எங்கட இனத்துக்கிள்ளை ஏன் இந்த விசயத்தில முழுமையான (விதிவிலக்கானவர்களை மனமகிழ்வுடன் நினைக்கும் அதேவேளை) ஒரு மாற்றம் வரேல்லை?

சரி அப்பிடித்தான் ஆராவது சிலர் நல்லமாதிரி நடக்க வெளிக்கிட்டாலும் குடும்ப, சமூக நெருக்கடிகள் படுபிற்போக்காய் துள்ளிக்கொண்டு எதிர்க்கிற போக்கு வேற இருக்கிது. நான் வெளியில நிண்ட நேரமும் பத்திரிகையில இஞ்சத்தைய செய்தியொண்டு படிச்சனான்: கணவனை இழந்த இளம்பெண்ணை ஒரு தம்பியொண்டு விரும்பியிருக்கு. அந்தப் பெண்ணுக்கு பிள்ளையளும் இருந்திருக்கு.

அப்பிடியான நிலைமையிலயும் அந்தப் பொடியன் ஆழமாயும், உண்மையாயும் அவாவுக்குப் புருசனாகவும், அவாவின்ரை பிள்ளையளுக்குத் தகப்பனாகவும் ஆக விரும்பியிருக்கு. ஆனாலும், பொடியன்ரை வீட்டில கடுமையான எதிர்ப்பு வந்ததால மனம் உடைஞ்சுபோய் கை, காலைக் கட்டிக்கொண்டு கிணத்துக் கிளவிழுந்து தற்கொலை செய்திருக்கிது. அதிலையும் நீச்சல் தெரிஞ்ச தான் தப்ப முயற்சிக்காமல் இருக்கிறதுக்காக கையளையும், காலுகளையும் கட்டிக்கொண்டு குதிச்சிருக்கிது அந்தப் பொடியன்.



சம்பவத்தைக் கேட்ட அந்தப் பிள்ளையும் வேதனையில மருந்து குடிச்சிருக்கிது. யோசிச்சுப்பாருங்கோ! வாழத்தலைப்படுகிற 2 அப்பாவியள் இப்பிடிக் கோரமான முடிவுகளுக்கு உட்படுகிறதுக்கு ஆர் காரணம்? சத்தியமாய் நானும், நீங்களும், எங்களைப் போல இன்னும் வேற பலரும்தான்.

சினிமாப்படங்களில மட்டும் நாங்கள் விரும்பிற முடிவுகளை ஏன் எங்களுக்கிடையில இருக்கிற ஆக்களுக்கெண்டு வரேக்கிளை மட்டும் கூச்சம் ஒண்டுமில்லாமல் நாங்கள் வில்லன்களாகவும், வில்லிகளாகவும் மாறிக்கொள்றோம்? first hand, second hand எல்லாம் பார்க்கிற எங்களில பலர் இண்டைக்கு உதவி நிறுவனங்களின்ரை hand ஐ நம்பித்தான் வாழிறம் எண்டதையும் மறக்கக்கூடாது. இக்கட்டான நிலைமைக்கு போரும், இயற்கையும் கொண்டு வந்தது தவிர்க்க முடியாதது. ஆனால், நாங்களே எங்கட சக மனிதனுக்கு குழிபறிக்கிற ஆக்களாய் இருக்கப்படாது.

ஏனெண்டால் நாளைக்கோ, நாளையிண்டைக்கோ அதே நிலைமை எங்களுக்கு வராதெண்டிறது உறுதியில்லை. எங்கட முழு இனமும் ஒழுங்காய் மூச்சு விடிறதுக்கான வாழ்வியல் ஆதாரமாயும் இது இருக்கிது. இல்லாட்டி பண்பாடு(?) எண்ட பேரிலை எங்களைப் பீடிச்சிருக்கிற பீடையளைக் கருப்பொருளாக்கி எங்கட எதிரி 'சறோஜா' போன்ற திரைப்படங்களை எடுக்கத்தான் செய்வான். படம் பார்க்காத ஆக்கள் கதையை எதிர்பார்ப்பியள்.

ராணுவத்தால வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட தமிழ்ப் பெண்ணை சமூகம் 'கற்பழிக்கப்பட்டவள்' எண்டு ஒதுக்கி வைக்கிறதால வேற வழிதெரியாமல், தன்னை அந்த நிலைக்கு ஆக்கின ஆமியோடையே அந்தப்பெண் தெற்குக்குப் போறதை ஒட்டி கதை அமைஞ்சிருக்கிது. என்னைப் போலவே உங்களுக்கும் கதையைக் கேட்ட உடன ஆத்திரம் வரலாம். ஆனால், யோசிச்சுப் பாருங்கோ! வரவேண்டியது ஆத்திரம் இல்லை; மனமாற்றம் தான்!

இந்த விசயத்தைப் பற்றிச் சொல்ல வெளிக்கிட்டதுக்கு வேற 2 சம்பவங்களும் காரணமாயிருக்கிது. நான் வெளியில நிண்ட நேரம் ஒரு தம்பியோட நல்ல கூட்டாளி ஆகீட்டன் (வயசுக்கேற்றபடி இன்னுமொரு நைன்ரியை விட்டிட்டு இளந்தாரி நினைப்பில சின்னப்பொடியளோட நட்பு வைக்கிறார் ஏரம்பர் எண்டு நினைப்பியள். வயசென்ன வயசு ! எல்லாம் மனம்தான்!).

அந்தப் பொடியன் இஞ்சை இருந்த நேரம் குறிப்பிட்டதொரு உதவி நிறுவனத்தில வேலை செய்தது. இடையில ஆமிக்காரர் பொடியனுக்கு இயக்கத்தோட தொடர்பு இருக்கிதெண்டு பிடிச்சுக் கொண்டு போய் நாலாம் மாடி, அங்கையிஞ்சை எண்டு 2 வருசம் வைச்சிருந்த காலத்தில, வீட்டுக்காரர் காசைக்கீசைக் கட்டி ஒருமாதிரி வெளியால எடுத்துத்தான் ஐரோப்பாவுக்கு அனுப்பியிருக்கினம். அங்கை பொடியன் வேலைநேரம் போக மிச்சத்துக்கு ஓய்வில்லாமல் இயக்க அலுவலாய்த்தான் ஓடித்திரியும்.

அந்தப் பொடியன் வழமைக்கு மாறாய் கொஞ்சம் வேற மாதிரி சிந்திக்கிற நல்ல பொடியன். தன்ரை ஊரில இருந்த வாய்பேச வராத பிள்ளையொண்டை கல்யாணம் செய்யப்போறதெண்டு விரும்பி 2 வீட்டாரும் சம்மதிச்சிருந்தவை. பொடியன் எனக்குச் சொல்லிக் கட்டாயம்: “எனக்கு பெரிய எடுப்பாய செய்ய விருப்பமில்லை. என்னை முழு மனசோட வாழ்த்த விரும்பிற கொஞ்சப்பேரே காணும். அம்மா விதவையாய் இருக்கலாம். ஆனாலும், அவா தாலி எடுத்துத் தர நான் கட்டோணும்.

இது எல்லாத்தையும் சந்தோசமாய் ஒழுங்காய் நாலு நல்ல விசயங்களை எடுத்துச் சொல்லி நடத்திறதுக்கு ஒராளைத் தேடிக்கொண்டிருந்தனான். உங்கட போக்கு எனக்குப் பிடிச்சிருக்கு. நீங்கள்தான் நிண்டு எல்லாத்தையும் முடிச்சுத்தரோணும்”, எண்டு அந்தத் தம்பி உரிமையோட சொல்லிச்சிது. எட இப்பிடியான நல்ல காரியத்துக்கு மறுப்புச் சொல்லுவனே நான்! ஆ! சந்தோசமாய் 'ஓம்' எண்டன். ஆனாலும், குறிச்ச திகதிக்கு முன்னால அந்தப் பொடியன் கவலையோட ரெலிபோண் எடுத்துச் சொல்லிச்சிது: தன்னை 2 வருசம் ஆமிக்காரன் வைச்சிருந்த காலத்தில அடிச்சுக் கிடிச்சு ஏதோவொரு குறை இருக்கிதெண்டு பொம்பிளை வீட்டுக்காரர் சந்தேகப்படிகினமாம். அப்பிடிக் குறை இருக்கிறதாலதான் வாய்பேச முடியாதெண்டு தெரிஞ்சும் தங்கட பிள்ளையைக் கட்ட விரும்பிறன் எண்டு அவையள் யோசிக்கினமாம்.

வீட்டை போய் வேண்டாம் எண்டிட்டினமாம். என்னை நிண்டு நடத்தித்தரச் சொன்னதொரு நல்ல காரியம் இப்பிடியாகிட்டிதே எண்டு எனக்கும் வேதனையாய் இருந்திச்சிது. அது பொடியனுக்கு அப்பிடியானதொரு குறையும் இருக்கிறதாய் தெரியேல்லை. சரி ஆமி பிடிச்சு வைச்சிருக்காத ஆக்களை மட்டும் என்ன பரீட்சித்துப்போட்டே இந்தக் கண்டுபிடிப்பாளர்கள் எடுக்கிறவை!

ஏன் கேட்கிறனெண்டால் யாழ்ப்பாணப் பக்கம் நடந்த வேறொரு சம்பவத்தில பொடியன் கனடாவில வெள்ளைக்காரப் பொம்பிளையளோட பிரச்சினைப்பட்டு கனதரம் பொலிஸ் கேஸில சம்பந்தப்பட்டு, உளவியல் டொக்டரிட்டை கூட போயிருக்கிதாம். சம்பவத்துக்கு வர முதல் ஒரு விசயம்: நீங்கள் நினைக்கக்கூடும் வெள்ளைக்காரப்பொம்பிளையள்தானே ஒருமாதிரி, அவையள் பெரிய கற்புக்கரசியள் மாதிரி பொலிசுக்குப் போனவையோ எண்டு. எல்லாத்துக்கும் அங்கை சட்டம் இருக்கிது. அந்தச் சட்டங்களைப் பயன்படுத்தி ஒவ்வொருத்தரும் தங்களுக்கான பாதுகாப்பைத் தேடிக்கொள்ளலாம்.

அதன்படி சொந்தக்கணவனுக்கெதிராகக்கூட மனைவி வலுக்கட்டாயமான வல்லுறவு விசயத்தில வழக்குப்போடலாம். ஆனாலும், தனிமனித கௌரவங்களை வெறுமனே சட்டங்கள் போட்டுக் காப்பாற்றேலாது. அதுக்கு மேலால ஆண்-பெண் இரண்டு தரப்பின்ரை பார்வையும் பண்படோணும். ஆளாளுக்கு மாறி மாறி அடிச்சுப்போட்டு, கடைசியில எல்லாருமே அழுகிறதொரு நிலைமை! அதைவிட ஒவ்வொருதரும் மற்ற மற்றவையின்ரை கண்ணீரைத் துடைக்கிறவையளாய் ஏன் இருக்கக்கூடாது!

சரி இனி விசயத்துக்கு வருவம். அந்தக் கனடாப் பொடியனுக்கு ஊரில சம்பந்தம் பேசியிருக்கினம். தம்பியர் போன நாட்டில விட்ட சேட்டையள் ஊருக்கும் எட்டியிருக்கிது. விசாரிச்ச ஆக்களுக்கு தாய்,தகப்பன் சொல்லியிருக்கினம்: அது வேற ஆரோ ஆக்கள் தங்கட மகளுக்குக் கட்டிறதுக்காக வசியம் செய்தவை, சூனியம் செய்தவை, அதாலதான் அப்பிடி. ஆனாலும், குறிப்புப்படி கலியாணம் செய்து வைச்சால் அதெல்லாம் மாறீடும் எண்டு. என்ன இருந்தாலும் மாஸ்ரரின்ரை பிள்ளை, அதுவும் கனடா! குறிப்பு வேற மாறீடும் எண்டு சொல்லேக்கிளை ஏன் தயங்கோணும் எண்டு பெண்தரப்பாரும் சம்மதிச்சிருக்கினம். கொழும்பில கல்யாணம் முடிஞ்சு மாப்பிள்ளையோட தங்கின முதல்நாளே பொம்பிளை அவற்றை இம்சையளுக்கு முகங்கொடுக்க ஏலாமல் ஓடீட்டிது. ஓடிப்போய் தன்ரை கூட்டாளிப்பிள்ளையின்ரை வீட்டை இரவு இருந்திட்டு தாய் வீட்டுக்கு அழுதுகொண்டு காலையில போயிருக்கிது. இதுக்கு மேல நான் சொல்லேலாது.

அந்தப் பிள்ளை ஓடிப்போய் நிண்ட கூட்டாளிப்பிள்ளை வீடு எனக்குப் பழக்கம் எண்டதாலதான் விசயம் என்ரை காதுக்கு எட்டினது. அவற்றை வியாதியளுக்கு(?) வசியமும், சூனியமும் காரணமெண்டு காரணம் கண்டுபிடிக்கிற எங்கட சனத்தையும், அதை நம்பி மோசம்போகிற கோஸ்டியையும் யோசிச்சுப் பாருங்கோ! எங்கட மூளையை(?) நாங்கள் எதுக்குப் பாவிக்கிறோம்? நல்லதை விமர்சிச்சு கொச்சைப்படுத்தி, பொல்லாததுக்கு இரையாகிப் போறோமே தவிர ஆரோக்கியமாகச் சிந்திக்கிறதுக்குப் பின்னடிக்கிறோம். பாதகத்துக்குத் துணைபோகிற நாங்கள்தான் பாதிப்புக்குள்ளாகிறோம் எண்டதை விளங்கி கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ! வாறமுறை சந்திப்போம்!

இலங்கை பல்கலைக்கழகத்தின் தமிழ் சங்கம் 1968-1969 காலப்பகுதியில் வெளியிட்ட இளந்தென்றல் என்னும் வருடாந்த மலர் படிக்கக் கிடைத்தது.



பேராசிரியர் கா.குலரத்தினம் அவர்கள் வடக்கிலும் கிழக்கிலும் பொருள் வளம் பெருக என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

## பொருண்மிய வாசல்


## எங்கள் பொருண்மிய வளம்.

சிதம்பரதிரு

அக்கட்டுரையில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் முத்துக்குளித்தல் என்னும் தலைப்பில் அவர் எழுதிய பகுதி பின்வருமாறு அமைகின்றது.

''நமது முத்துக் குளித்தல் அண்மைக் காலங்களில் தோல்வியைத் தழுவிக்கொண்டுள்ளது. அது மீண்டும் புத்துயிர் பெறுமென்ற நம்பிக்கையும் அருகிவிட்டது. இன்று முத்து உற்பத்தித் தொழில் இலாபகரமானதாகவும் விஞ்ஞான ரீதியானதாகவும் கருதப்படுகின்றது. செயற்கை முத்துக்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் ஜப்பான் வருடாந்தம் சுமார் 4 கோடி அமெரிக்க டொலர்களைத் சம்பாதிக்கிறது. கட்டுப்படுத்தப்பட்ட நிலைமைகளில் நமது கடலில் முத்துச் சிப்பிகளை வளர்ப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு. மன்னார் கடலில் மட்டுமன்றி மட்டக்களப்பு, முல்லைத்தீவு பரவைக் கடல்களிலும் முத்து உற்பத்தித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு இடம் இருக்கிறது'' என்று குறிப்பிடுகின்றார் பேராசிரியர்.

"இக்கட்டுரையாளர் (பேராசிரியர் கா.குலரத்தினம்) தனது சொந்தச் செலவிலே ஜப்பானுக்குச் சென்று இத் தொழிலைக் கற்று அவ்வாறு கற்ற அறிவை மற்றவர்களுக்கும் பகிர்ந்தளிப்பதற்காக ஜப்பானிய அதிகாரிகளுடன் அதற்கான எல்லா ஏற்பாடு



களையும் செய்துகொண்டார். ஆனால் பிரயாணத்துக்கான பணத்துக்கு நாணய செலாவணி வழங்க அரசாங்கம் மறுத்து அவரது மனுவை நிராகரித்து விட்டது. அந்தப் பணம் ரூபா3000 (மூவாயிரம்) க்கு மேற்படாத ஒரு சிறு தொகை மட்டுமே"

என்ற குறிப்பு இளந்தென்றல் மலர் ஆசிரியரால் குறிப்பிடப்படுகின்றது. கிட்டத்தட்ட 36 வருடங்களாகியும் இந்த நிலைமையில் ஏதேனும் மாற்றம் ஏற்படாத சூழ்நிலையை நாங்கள் கவனிக்க வேண்டும்.

'முத்துக் குளித்தல்' தொடர்பாக துறை சார்ந்த நிபுணர்கள் கவனம் செலுத்தினால் எங்கள் மண் விடுதலை பெறும்போது பயனுள்ள முறையில் இத்துறையினை வளர்த்தெடுக்க முடியும்.

---

கமநல அபிவிருத்தித் திணைக்களங்களால் தமிழீழத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மாவட்டப் பொறுப்பாளர்கள், மாவட்ட இணைப்பாளர்கள், பிரதேச இணைப்பாளர்கள், மாவட்ட உட்கட்டுமான முகாமையாளர்கள், திட்ட இணைப்பாளர்கள் ஆகியோருடன் தளம்பலற்ற புரிந்

இந்த உணர்வூட்டலானது உதாசீனம் செய்யப்படலாகாது. உணர்வூட்டல் மூலமே அவர்களை வலுப்படுத்தமுடியும்.

நியாப் 2இல் கமக்கார அமைப்புக்களை வலுப்படுத்துவதற்கு பிரத்தியேக நிதி ஒதுக்கீட்டிற்கு சாத்தியப்பாடுண்டு. அமைப்புக்களால் அரைகுறையாகக் கை விடப்பட்ட வேலைத்திட்டங்கள் அனைத்தும் நிறுவனத்தினாலேயே முடித்துக்

னூடாக புள்ளிவிபரங்கள் துல்லியமாகச் சேர்க்கப்பட்டு அவற்றினடிப்படையில் திட்டமிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். நிதி நிறுவனங்களின் நிதியினைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். எம்மால் வழங்கப்பட்ட திட்டமுன் மொழிகளில பல கிடப்பிலேயே இருக்கின்றன. இந்த வகையில் ஒரு பொதுக்கூட்டமைப்பின மூலம வேலைகளை நகர்த்த வேண்டும்.

### நிதியானது வங்கியிலிடப்பட்டு முடக்கப்படுகின்றதே ஒழியபயன்படுத்தப்படுவதில்லை.

துணர்வுடன் செயலாற்றுவதற்கு ஏதுவாக ஒரு பொதுக்கட்டமைப்பின் கீழ் ஒருமுகப் படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு,வவுனியா, மன்னார் மாவட்டங்களின் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர்களும் பெரும்பாக உத்தியோகத்தர்களும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியக கேட்போர் கூடத்தில் கலந்துகொண்ட ஒன்றுகூடலில் த.பொ.மே.நிறுவனப் பொறுப்பாளர் திரு.சி.கரிகாலன் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூறுகளில் விடுதலைப் புலிகளை அடக்கவும், விடுதலைப் புலிகளிடமிருந்து மக்களை அந்நியப்படுத்தவும் சிறிலங்கா அரசினால் பொருளாதாரத்தடையும், ஆழ் கடல் மீன்பிடித்தடைச் சட்டமும் தீவிரமாக அமுல்படுத்தப்பட்ட போது தமிழீழ மக்களை அணிதிரட்டி சகல பகுதிகளுக்குமான வேலைத் திட்டங்களை இதய சுத்தியுடன் ஆற்றியதன் மூலம் எமது மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் காப்

கொடுக்கப்பட்டன. அமைப்புக்களிடமிருக்கும் நிதி குளங்களைப் பராமரிப்பதற்கெனினும் அவை பயன்படுத்தப்படுவதில்லை. அத்துடன் இந்த நிதி அரச வங்கிகளில் இருப்பதனால் அது அரசிற்கே பயன்படுத்தப்படுகின்றது. அந்த நிதி எமக்கெதிராகவும் முடுக்கி விடப்படலாம். எதிர்பார்க்கும் சண்டையினை விடுதலைப் புலிகளே ஆரம்பிக்கக் கூடியதாக திசை திருப்பும் வேலைகள் திட்டமிடப்பட்ட முறையில் மேற்கொள்ளப் படுகின்றன.

இதனைச் சர்வதேசமும் அவதானித்துக்கொண்டிருக்கின்றது. தேசியத் தலைவரும் ஒரு முடிவினை எட்டிவிட்டார். மக்கள் ஏமாற்றப்படுகின்றார்கள். காலம்

COASTAL DEVELOP-MENT PROGRAMS இருக்கின்றன. ஆனால் வலுவான சங்கங்கள் இல்லாத நிலையில் விவசாயிகள், கால்நடைவளர்ப்போரின் பிரச்சினைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதில்லை. விவசாயிகள் கால் நடை வளர்ப்போருக்கு உதவ பலமான சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். சங்க உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுபவர்களாக இருக்க வேண்டும். உலகில் முன்னேற்றமடைந்த நாடுகளில் விவசாய அமைப்புக்களே அரசை நடத்துகின்றன. எமது libco இனைப் பார்வையிட்ட அமெரிக்கர் ஒருவர் ஒரு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க ஒரு



## இணைந்து செயலாற்றுவோம்

பாற்றியபோது நிறுவனத்துடன் இணைந்து சேவையாற்றிய திணைக்களங்களில் கமநல அபிவிருத்தித் திணைக்களம் முதன்மை பெறுகின்றது.

2002 பெப்ரவரி 22 இல் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதையடுத்து உருவான கட்டுக்கோப்பின்மை எம்மத்தியில் முரண்பாடுகளைத் தோற்றுவித்திருப்பதை எம்மால் உணரமுடிகின்றது. இந்த முரண்பாடுகளைக் களைந்து திட்டமிட்ட ரீதியில் செயற்பாடுகளை வழிநடத்திச் செல்வதற்கு நாம் எல்லோரும் ஒருங்கிணைய வேண்டும். நிதியின் அளவுக்கேற்ற வேலையாயின்மைஅத்தோடு வேலையினைத் தரமாக முடிவுறுத்துவதற்கு வேண்டிய நிதியாக அமையக் கூடியதாக எம்மால் சமர்ப்பிக்கப்படும் மதிப்பீடுகள் தயாரிக்கப்படவேண்டும்.

இந்த வகையில்தான் விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களின் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காண்பதன் மூலம்தான் அவர்களுக்கே உரித்தான குளங்களில் அவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய 7 1/2 சதவீத பங்களிப்பினைச் செய்வதற்கு அவர்களை உணர்வூட்டலாம்.


போய்க்கொண்டிருக்கிறது. தளபதிகளின் போக்குவரத்துக்கான ஒழுங்குபடுத்தப்படுதல் தடைப்பட்ட நிலையும் போரைத் தூண்டு வதற்காகவே அமைகின்றது. ஆதலால் இந்த இடைக்காலத்தில் கமக்காரர் அமைப்புக்களைப் பயன்படுத்தி தரமானவர்கள் இதயசுத்தியுடன் செயற்படுவதற்கு இடமளிக்க வேண்டும். வேலைகளை இலகுபடுத்தும் நோக்குடன் ஒப்பந்தகாரர் சங்கம், நிர்மாணிகள் சங்கம் ஆகியன சகல வேலைகளையும் பொறுப்பெடுக்கின்றன. தயாரிக்கப்படும் மதிப்பீடுகளிலிருந்து வேலை செய்யும் ஒப்பந்தகாரர் வேலையின் தரநிர்ணயம் ஆகிய சகலவையும் நிர்மாணிகள் சங்கத்தாலேயே கையாளப்படும். வேலைக்கான நிதியாயிராது நிதிக்கான வேலை என அழுத்தம் கொடுக்கப் படுவதை எதிர்த்து நிற்பதன் மூலம் சரியான மாறுதலை மேற் கொள்ளலாம். கிராமங்களில் அமையப் பெறும் வீதிகளுக்கு கிரவல் போடுதல் சூழல் சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதால் இவை அனைத்தும் தார் பூசப்படுவது வலியுறுத்தப் படுகின்றது.

மாகாணசபை நிர்வாகம் நிக்கோட், நியாப் நிறுவனங்கள், சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதி கூறியுள்ளன. அமைப்புக்களி

சிறியளவிலான கூட்டுறவுச் சங்கமே போதுமென்றார். இங்கு நிதியானது வங்கியிலிடப்பட்டு முடக்கப்படுகின்றதே ஒழிய பயன்படுத்தப் படுவதில்லை. பயன்படுத்துவதற்கான கொள்கை உந்தப்படல் வேண்டும். துணிந்து செயற்றிட்டங்களில் ஈடுபட வேண்டும். பாரிய அளவில் கமக்காரர் அமைப்புக்கள் இருந்தும் வேலைகள் சீராக முன்னெடுத்துச் செல்லப்படுவதில்லை. அமைப்புக்கள் இருந்தும் ஒரு பிரயோசனமுமில்லை.

எமது நிறுவனமே உரவினியோகத்தை நேரடியாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாம் நட்டமடையவும் நேரிடலாம். ஆனால் விவசாயிகளின் நன்மை கருதி இதனை மேற்கொள்ளவுள்ளோம். குறைந்த விலையில் இயந்திரங்கள் பெறுவதற்குச் சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு முக்கியமான இயந்திரங்கள் சில தருவிக்கப்பட்டும் உள்ளன. 25 கிராமங்களின் தெரிவில் உள்ள குளங்கள் மக்களுக்குப் பயன்படுவதையே உலக வங்கி விரும்புகின்றது. ஆதலால் இக்குளத் தெரிவில் சகலரும் கூடிய கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

---




கிடு கிடு என உயர்ந்து செல்லும் இந்த வரைபு காட்டுவது உலகத்தின் ஆபத்து அல்லது அழிவு என்றும் எடுக்கலாம். Law Dome ஆய்வு மையம் ஆண்டுக்காண்டு துருவங்களில் உறையும் பனிப்படைகளில் கரைந்திருக்கக் கூடிய $CO_2$ (Carbondioxide) வாயுவின் அளவைத் துணிவதன் மூலம் உலகச்சுழலில் அதிகரித்து வரும் $CO_2$ இன் செறிவை துணிந்ததற்கான காலத்துக்கெதிரான வரைபாகும் இது.

## அமைதியான பயங்கரம்

அதிகரித்து வரும் பெற்றோலிய பொருட்களின் பாவனை இயற்கைத் தாவர அழிப்பு என்பன வரைபை இந்த வடிவத்திற்கு ஆக்கிவிட்டன.

உயிர்ச்சூழலில் $CO_2$ வாயுவின் அதிகரிப்பு என்பது "மாரடைப்பு" போன்ற திடீர் ஆபத்து அல்ல. மாறாக "புற்றுநோய்" போல அமைதியான பயங்கரமாகும்.

* பச்சைவீட்டு விளைவு (Green house effcet)

* சூழல் வெப்பநிலை உயர்ச்சி (Global temperature rise) என்பன இதன் மூலம் உருவாகும் உப பயங்கரங்களாகும். இவை உயிர்க்கோளத்தில் வாழும் சூழலை சிதைத்து விடவும் துருவப் பாறைகளை உருக்கி புவி நிலப்பரப்பை குறைத்து விடவும் கூடியன.

$CO_2$ உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிப்பது பெற்றோலிய பொருட்களின் எரிவு என்பதை யாவரும் அறிவோம். விளக்குத் தொடக்கம் விமானம் வரைக்கும் அவற்றின் உயிர்த்திராவகமாகி செக்கனுக்கு "தொன்" கணக்கில் எரிந்துகொண்டிருக்கின்றன. அபிவிருத்திப் பாதையில் அவற்றின் முக்கிய பங்கு அவற்றை நிறுத்துவதற்கான எண்ணங்களுக்கு பலவீனத்தைச் சேர்க்கின்றன. பெற்றோலியத்திற்கு ஈடான வேறு பாவனைகள் (காற்று, சூரிய ஒளி)வேகமெடுக்கும் வரைக்கும் பெற்றோலிய பாவனைகளை குறைத்தல் சிரமமானதாகும். ஆனால் பெற்றோலிய பொருட்களின் பாவனையை குறைத்தல் மூலம் $CO_2$ அளவை குறைத்தல் சாத்தியத்தை விடவும் தாவரச்சூழலைப் பெருக்குவதன் மூலம் $CO_2$ பெருக்கத்தை குறைத்தல் சாத்தியம் கூடவாகும். ஏனெனில் $CO_2$ வாயுவானது தாவர ஒளித்தொகுப்பின் முக்கிய மூலமாகும். இந்நிகழ்வின்போது தாவரங்கள் $CO_2$ ஐ உள்ளெடுத்து உயிர்ச்சுவாசத்திற்கு தேவையான $O_2$ (ஒட்சிசன்) ஐ வெளியிடுகின்றன. அத்துடன் தாவரங்கள் ஆவியுயிர்ப்பின் போது வெளிவிடும் நீர் ($H_2O$) சூழலை குளிர்ச்சியாக வைத்திருக்கவும் உதவும். தாவரங்கள் மூலம் கிடைக்கும் ஏனைய இலாபங்களை விட நட்டங்களைத் தடுக்கும். இந்த இலாபங்கள் முக்கியமானவையாகும்.

எனவே எமது எல்லா சாபங்களுக்கும் விமோசனமாக தாவரச்சூழலைப் பெருக்குவோம். தன் அழிவுகளைத் தடுப்போம். எமது வருங்கால சந்ததி மீது எமக்கிருக்கும் அக்கறையை நிரூபிப்போம். பச்சை மரங்கள் மூலம் சூழலை சுத்திகரிப்போம்.

"சொர்க்கம் எவ்[illegible] நமக்கு சுத்தம் உள்ள கூ[illegible] தான்"







# புதிய விதிகளை பாராட்டும் முரளி

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் சமீபத்தில் அறிவித்த ஒருநாள் போட்டிக்கான புதிய விதிமுறைகள் ஆட்டத்தில் மேலும் பன்மடங்கு விறுவிறுப்பை கூட்டக் கூடியது. இதில் மாற்று வீரரை துடுப்பாட்டம், பந்துவீச்சு இரண்டிலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது போட்டியின் முடிவையே மாற்றக் கூடியதாக உள்ளது. பெரும்பாலும் இது இரண்டாவதாக துடுப்பாட்டம் செய்யும் அணிக்கே சாதகமாக அமையும். ஏனெனில் முதலில் பந்து வீசும் அணி ஐந்து பந்துவீச்சாளர்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். பின்னர் துடுப்பாட்டம் செய்யும் போது ஒரு பந்துவீச்சாளருக்கு பதிலாக மாற்று வீரரை களமிறக்கலாம்.

இது முதலில் துடுப்பாட்டம் செய்யும் அணியால் முடியாது. பொதுவாக துடுப்பாட்டம் நன்றாகத் தெரிந்த ஒருவரைத்தான் மாற்று வீரராகத் தேர்வு செய்வார்கள். இதனால் முதலில் துடுப்பாட்டம் செய்யும் அணி இக்கட்டான நேரத்தில் ஒரு பந்துவீச்சாளருக்குப் பதிலாக மாற்று வீரரை பயன்படுத்திக் கொண்டால், பந்துவீசும்போது சிக்கல் ஏற்படும். இதனால் நாணய சுழற்சியால் வென்றால் பெரும்பாலான அணிகள் களத்தடுப்பைத்தான் தேர்வு செய்யும். தவிர, புதிய விதிமுறைகள் கப்டன்களுக்கு அதிக பளுவை அளிப்பதாக உள்ளது.

மாற்று வீரரை களமிறக்குவதிலோ களத்தடுப்புக் கட்டுப்பாட்டை நிர்ணயிப்பதிலோ கப்டன் தவறு செய்யும் பட்சத்தில் அந்த அணி தோல்வி அடையும் அபாயம் கூட உள்ளது. இந்தப் புதிய விதிமுறைகள் தற்போது நடந்த முத்தரப்புத் தொடரில் பயன்படுத்தாதது ஏமாற்றத்தைத் தந்தது.



# செப்பல் கூறும் தோல்விக்கான காரணம்

மீண்டும் ஒரு இறுதிப் போட்டி. மீண்டும் ஒரு தோல்வி என்று இந்தியாவிற்கு அதிர்ச்சி தொடர்கிறது. புதிய பயிற்சியாளர், கப்டன் மாற்றம், ஐந்து பந்துவீச்சாளர்கள் என்று எத்தனை மாற்றங்கள் செய்தாலும் தோல்வியில் மட்டும் மாற்றம் ஏற்படவில்லை. இம்முறை முத்தரப்புத் தொடரில் கோப்பையை கோட்டை விட்டதற்கு வீரர்கள் மத்தியில் தன்னம்பிக்கை இல்லாததுதான் காரணமாம். இப்படி ஒரு புதிய விளக்கத்தை சொல்லி இருக்கிறார் இந்தியப் பயிற்சியாளர் கிரேக் செப்பல்.

கொழும்பில் நடந்த முத்தரப்பு கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணி இலங்கையிடம் மோசமான தோல்வியை சந்தித்தது. முதல் தொடரை தோல்வியுடன் துவக்கியதால் புதிய பயிற்சியாளர் செப்பல் கலக்கம் அடைந்திருப்பார். ஒருநாள் தொடரில் இந்திய அணியின் தோல்வி தொடர்வதற்கான காரணம் பற்றி செப்பல் கூறியிருப்பது.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான கடைசி லீக் போட்டியில் வெற்றி பெற்றதும் இந்திய வீரர்கள் மெத்தனமாக இருந்துவிட்டனர். அடுத்து வரும் போட்டிகளிலும் வெற்றி தொடரும் என்று தவறாகக் கணித்துவிட்டனர். இந்த நினைப்புத்தான் இறுதிப் போட்டியில் வினையாக அமைந் தது. இந்திய வீரர்கள் தன்னம் பிக்கை இழந்து காணப்பட்டனர். வெற்றிக்கு அதிக பயிற்சி தேவை. இலங்கை அணி தொடர்ந்து விளையாடியதால் அதிக பயிற்சியுடன் காணப்பட்டது. இந்திய அணியை பொறுத்தவரை தன்னம் பிக்கை மிகவும் குறைவாக இருந்ததால் சாதிக்கமுடியவில்லை.

இத்தொடரில் இலங்கைக்கு எதிராக மூன்று முறையும் வெற்றியை நெருங்கிய இந்திய அணி வாய்ப்பை கோட்டைவிட்டது. இதுபற்றி தெளிவாக ஆய்வு செய்ய வேண்டும். தவறுகளை விரைவாக திருத்திக்கொள்ளவேண்டும். தோல்விகளுக்கு பந்துவீச்சாளர்களை காட்டிலும் துடுப்பாட்ட வீரர்கள்தான் முக்கிய காரணம். இத்தொடர் துவங்குவதற்கு முன்பாக துடுப்பாட்டம் தான் வலுவானதாக இருந்தது. ஆனால் பந்துவீச்சாளர்கள்தான் சிறப்பாக செயல்பட்டனர். எனவே துடுப்பாட்டத்தில் அதிக கவனம் அவசியம்.

இறுதிப் போட்டியில் 8 விக்கெட் கைவசம் இருக்க, 108 பந்துகளில் 110 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலை இருந்தது. ராகுலும் யுவராஜும் களத்தில் இருக்க வாய்ப்பு பிரகாசமாக இருந்தது. ஆனால் விக்கெட்டுகள் அடுத்தடுத்து பறிபோக கோப்பை கைவிட்டுப் போனது. துவக்கத்தில் சேவக் தூள் கிளப்பினார். இவரது அதிரடி இந்திய அணிக்கு நம்பிக்கை தந்தது. இவர் கொஞ்சம் கவனமாக செயல்பட்டு 15 ஓவர் வரை நீடித்து இருந்தால் வெற்றிக்கனியை பறித்து இருக்கலாம்.

இத்தொடரில் இருந்து நிறையப் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். முழுமையாக ஆய்வு செய்து முன்னேற்றத்துக்கான புதிய எண்ணங்களை கண்டறிய வேண்டும். இந்த ஆண்டின் இறுதியில் 2007 உலகக் கோப்பைப் போட்டிக்கான திட்டங்களை வகுத்துள்ளேன். இதற்காக அணியில் பல்வேறு சோதனைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளேன். இவ்வாறு செப்பல் கூறினார்.

என்னதான் இருந்தாலும் இந்திய அணி தோற்றது சிறிலங்கா அணியிடம் மட்டுமல்ல செப்பல் மோடியிடம் தோற்றதும் தான்.

# ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஜயசூரிய 10000 NOT OUT



## சுய விபரக் குறிப்பு

முழுப்பெயர் : சனத் டெரான் ஜயசூரிய
பிறந்த திகதி : 1969 ஜூன், 30 வயது : 36
பிறந்த இடம் : மாத்தறை, இலங்கை.
இலங்கை அணியில் இடம் பெற்றது : 1989
பங்கு பற்றிய விளையாட்டு கழகங்கள் :
இலங்கை தேசிய கிரிக்கெட் அணி,
ACC ஆசியாவின் XI,
கொழும்பு கிரிக்கெட் கழகம்,
மெய்வல்லுநர் அணி
புளூம் பீல்ட் கழகம் மற்றும் பல...
துடுப்பாட்ட முறை : இடது கை ஆட்டக்காரர்.
பந்து வீசும் முறை : இடது கை சுழல் பந்து வீச்சு (ஓர்தடொக்ஸ்)
ஆட்ட தகைமை : டெஸ்ட், ஒரு நாள் போட்டிகள்



## ஜய சூரியவின் கிரிக்கெட் வரலாறு

- முதல் டெஸ் போட்டி : நியூசிலாந்து எதிர் இலங்கை, ஹெமில்ட்டன், 1991 பெப்ரவரி 22-26
- இறுதி டெஸ் போட்டி (இதுவரை) : இலங்கை எதிர் மேற்கிந்திய தீவுகள்
- முதல் ஒரு நாள் சர்வதேச போட்டி : அவுஸ்திரேலிய எதிர் இலங்கை, மெல்போர்ன், 1989, டிசம்பர் 26
- இறுதி ஒரு நாள் சர்வதேச போட்டிகள் (இதுவரை) : இலங்கை எதிர் இந்தியா

## இலங்கை அணித் தலைவராக

1999 - 2003 வரை - டெஸ் : 25

## சாதனைகள்

- 1997 ஆம் ஆண்டு சிறந்த கிரிக்கட் வீரருக்கான விஸ்டன் விருது ( Wisden Cricketers)
- ஒரு நாள் போட்டிகளில் அதி வேகமாக அரை சதம் பெற்று உலக சாதனை.
- இவரது அதி வேக ஆட்டத்தினால் இவருக்கு மாஸ்டர் பிளாஸ்டர் "Master Blaster" என்ற இயற் பெயர் சூட்டப்பட்டது.
- இந்தியாவுக்கு எதிராக டெஸ்போட்டி ஒன்றில் அதி இலங்கையில் அதி கூடிய ஓட்டங்களாக 340 ஓட்டங்களை பெற்ற முதல் இலங்கையர் ஆவார். இந்த போட்டியில் உலகிலேயே எந்த ஒரு அணிக்கெதிராகவும் 2ஆம் விக்கட்டுக்கான அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையை பெற்று சாதனை படைத்தார். இதில் இவருடன், றொஷான் மஹானாம இணைந்து ஆடியது குறிப்பிடத்தக்கது.

## சனத் ஜயசூரியவின் கிரிக்கெட் பயணம்

- சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில், கிரிக்கெட் மட்டையால் கிரிக்கெட் பந்திற்கு அதி வேகமாக தாக்கும் வீரனாக சனத்ஜெயசூரிய வர்ணிக்கப்படுகிறார்.
- 1969 ஆம் ஆண்டு மாத்தறையில் சாதாரண குடும்பத்தில் பிறந்த இவர் 1989 ஆம் ஆண்டில் முதல் ஒரு நாள் போட்டியிலும், 1991 ஆம் ஆண்டில் தனது முதல் டெஸ்ட் தொடரிலும் தனது கிரிக்கெட் பயணத்தை ஆரம்பித்தார்.
- தற்போது உலக கிரிக்கட் வீரர்தரப்படுத்தலில் முன்னணியில் நிற்கும் ஒரு சிறந்த சகல துறை ஆட்டக்காரராக( Allrounder) தரப்படுத்தும் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.
- 1997 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இலங்கை வெல்வதற்கு பெரும் பங்காற்றிய ஜெயசூரிய இந்த உலகக் கிண்ண போட்டிகளில் தொடர் நாயகனாகவும், 1997 ஆம் ஆண்டின் விஸ்டன் கிரிக்கெட்டர் ஒப் த இயர் (Wisden crickter of the year) என்ற விருதினை வென்றெடுத்தது குறிப்பிடத்தக்கது.
- 1999 ஆம் ஆண்டு அர்ஜுனா ரணதுங்கவிற்குப் பிறகு இலங்கை கிரிக் கெட் அணியின் தலைவராக பதவியேற்று, தலைமை பதவியிலும் தனது திறமைகளை வெளிப்படுத்தினார். 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டிகளின் பின் தனது தலைவர் பதவியை இராஜிநாமா செய்து தொடர்ந்தும் இலங்கை அணியில் தனது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## துடுப்பாட்டம், களத்தடுப்பு விபரப் பட்டியல்

| பிரிவு | போட்டி | இன்னி | ஆ.இ. | ஓட்டம் | அ.கூ.ஓ | சராசரி | 100 | 50 | 4ஓ | 6ஓ | கட்ச் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| டெஸ்ட் | 97 | 166 | 14 | 6521 | 340 | 42.34 | 14 | 29 | 852 | 52 | 72 |
| ஒ.ச.போ | 334 | 325 | 14 | 9967 | 189 | 32.01 | 18 | 57 | | 188 | 105 |
| மு.த.போ | 237 | 375 | 33 | 13767 | 340 | 40.25 | 29 | 66 | | | 149 |

## பந்து வீச்சு விபரப் பட்டியல்

| பிரிவு | போட்டி | பந்து | ஓட்டம் | விக் | சி.ப.இ | சி.ப.போ | சராசரி | கு.ஓ.வீ | ஆ.வி. | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| டெஸ்ட் | 97 | 7331 | 2990 | 92 | 5/34 | 9/74 | 32.78 | 2.44 | 80.56 | 6 | 2 |
| ஒ.ச.போ | 334 | 12202 | 9699 | 267 | 6/29 | 6/29 | 36.32 | 4.76 | 45.70 | 6 | 4 |
| மு.த.போ | 237 | 13611 | 5977 | 186 | 5/34 | - | 32.13 | 2.63 | 73.17 | | 5 |

**எழுத்துருக்களின் கருத்து**

பிரிவு : போட்களின் பிரிவு - போட்டி : போட்டிகளின் எண்ணிக்கை - இன்னி : ஆடிய இன்னிங்ஸ்களின் எண்ணிக்கை
ஆ.இ : ஆட்டம் இழக்காது ஆடியது - ஓட்டம் : முழு ஓட்ட எண்ணிக்கை - அ.கூ.ஓ. : பெற்ற அதிகூடிய ஓட்டங்கள் (1 போட்டியில்)
சராசரி : சராசரி ஓட்ட விகிதம் 100 : பெற்ற சதங்கள் 50 : பெற்ற அரை சதங்கள் 4 ஓ: பவுண்டரிகள் 6 ஓ: சிக்சர்கள்
கட்ச்: கொடுத்த கட்ச்களின் எண்ணிக்கை

## நாடுகளுக்கெதிரான ஜயசூரியவின் ஆட்ட விபரம்

| எதிரணி | போட்டி வகை | போ | ஓட் | அ.கூ.ஓ | ஆ.சரா | 100 | 50 | விக் | சி.பந் | ப.வீ.சரா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எதிர் இங்கிலாந்து | ஒருநாள் போட்டிகள் | 22 | 755 | 112 | 39.73 | 2 | 3 | 23 | 6/29 | 34.95 |
| எதிர் இங்கிலாந்து | டெஸ்ட் போட்டிகள் | 12 | 723 | 213 | 38.05 | 1 | 2 | 23 | 4/24 | 29.13 |
| எதிர் இந்தியா | ஒருநாள் போட்டிகள் | 55 | 1946 | 189 | 39.71 | 5 | 10 | 39 | 4/18 | 40.28 |
| எதிர் இந்தியா | டெஸ்ட் போட்டிகள் | 10 | 938 | 340 | 67.00 | 3 | 2 | 11 | 3/45 | 34.54 |
| எதிர் நியூசிலாந்து | ஒருநாள் போட்டிகள் | 36 | 1209 | 140 | 34.54 | 4 | 8 | 28 | 3/26 | 29.85 |
| எதிர் நியூசிலாந்து | டெஸ்ட் போட்டிகள் | 11 | 467 | 82 | 27.47 | 0 | 4 | 3 | 2/41 | 94.66 |
| எதிர் தென்.ஆபிரிக்கா | ஒருநாள் போட்டிகள் | 38 | 879 | 79 | 23.13 | 0 | 5 | 29 | 4/53 | 37.20 |
| எதிர் தென்.ஆபிரிக்கா | டெஸ்ட் போட்டிகள் | 13 | 733 | 148 | 30.54 | 1 | 4 | 20 | 5/34 | 26.30 |
| எதிர் அவுஸ்திரேலியா | ஒருநாள் போட்டிகள் | 36 | 704 | 122 | 21.33 | 1 | 3 | 28 | 5/28 | 40.82 |
| எதிர் அவுஸ்திரேலியா | டெஸ்ட் போட்டிகள் | 11 | 592 | 131 | 32.88 | 2 | 2 | 3 | 1/21 | 87.33 |
| எதிர் பாகிஸ்தான் | ஒருநாள் போட்டிகள் | 72 | 2288 | 134 | 34.14 | 3 | 18 | 65 | 5/17 | 36.04 |
| எதிர் பாகிஸ்தான் | டெஸ்ட் போட்டிகள் | 15 | 1457 | 253 | 56.03 | 4 | 6 | 5 | 1/4 | 48.40 |
| எதிர் மேற்கிந்திய தீவுகள் | ஒருநாள் போட்டிகள் | 27 | 739 | 88 | 28.42 | 0 | 5 | 26 | 5/58 | 30.50 |
| எதிர் மேற்கிந்திய தீவுகள் | டெஸ்ட் போட்டிகள் | 9 | 524 | 90 | 37.42 | 0 | 5 | 1 | 1/7 | 128.00 |
| எதிர் சிம்பாவே | ஒருநாள் போட்டிகள் | 32 | 823 | 102 | 27.43 | 1 | 5 | 22 | 4/19 | 38.04 |
| எதிர் சிம்பாவே | டெஸ்ட் போட்டிகள் | 13 | 730 | 157 | 42.94 | 2 | 2 | 20 | 5/43 | 19.70 |

**எழுத்துருக்களின் கருத்து**

- போ : பங்கு பற்றிய போட்டிகளின் எண்ணிக்கை.
- ஓட் : பெற்ற அதிகூடிய ஓட்டங்கள்.
- அ.கூ.ஓ. : குறிப்பிட்ட நாட்டுக்கெதிராக பெற்ற அதிகூடிய ஓட்டங்கள்.
- ஆ.சரா. : துடுப்பாட்ட சராசரி விகிதம்.
- 100 : பெற்ற சதங்கள்.
- 50 : பெற்ற அரை சதங்கள்.
- விக் ; பெற்ற விக்கட்டுக்கள்.
- சி.பந் : சிறந்த பந்து வீச்சு,
- ப.வீ.சரா : பந்து வீச்சின் சராசரி.

**பேராசிரியர் பொ.இரகுபதி அவர்கள் "ஈழத்தமிழர் பண்பாட்டடையாளம்" என்ற தலைப்பில் தெல்லிப்பழை மஹாஜனாக்கல்லூரியில் பாவலர் தெ.அ. துரையப்பா பிள்ளை அவர்களின் நினைவுப் பேருரையின் போது ஆற்றிய உரை.**

இந்தக் கால் நூற்றாண்டு காலத்தில் உலக அரங்கிலும் உள்நாட்டிலும் பாரிய மாற்றங்கள் நடந்தேறிவிட்டன. தேசியம் பற்றிய கேள்விகளுக்கும் இனம் பற்றிய கேள்விகளுக்கும் விடை காண்பதே அன்று வரலாறு- தொல்லியல் துறைகளிடம் இருந்து எதிர்பார்க்கப்பட்டது. அவற்றைக் கவனித்துக்கொண்ட அதே வேளையில், அவற்றிற்கப்பால், என தாய்வின் அடிநாதமாகவிருந்த, சூழலுக்கும் மனிதனுக்குமிடையிலான இடைத்தாக்கமென்ற பண்பாட்டுத் தளத்தை எவரும் பெரிதாகக் கருத்திற்கொண்டதாகத் தெரியவில்லை.

இந்திரபாலா அண்மையில் வெளியிட்டுள்ள 'The Evolution of an Ethnic Identity' என்ற நூலின் சமர்ப்பண வரியைக் குறிப்பிடவேண்டும். எனது மனதைத் தொட்ட வாக்கியம் அது.'To the innocents who lose their lives as a direct consequence of misinterpretations of history' (வரலாற்றுத் திரிபுகளின் நேரடி விளைவாக உயிரிழந்த அப்பாவிகளுக்குச் சமர்ப்பணம்.)

தேசியவாதம் உச்சத்திலிருந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஐரோப்பியத் தேசியங்களால் அவற்றிக்கு முட்டுக்கொடுப்பதற்காக உருவான சமூகவிஞ்ஞானக் கற்கை நெறிகள் இன்று முற்றாக மறக்கப்படவேண்டியவை, மாற்றியமைக்கப்படவேண்டியவை (Unthinking Social Sciences) என்பது உலகப் பொதுக் கல்விக் கருத்து.

மாறிவரும் உலகச் சூழல், கல்விக்கருத்துக்கள், சிந்தனைகள் இவற்றின் பின்னணியில் ஈழத்தமிழர் இருப்பை இயையப் பண்ணி வளம்படுத்தக்கூடிய அடையாளம் எது என்பது பற்றிய சிந்தனையையும் ஆய்வுகளையும் விவாதத்தையும் தூண்டுவதே இவ்வுரையின் நோக்கம். உலக அரங்கில் கடந்த காலங்களில் அடையாளங்கள் எவ்வகையில் மாறியுள்ளன என்று கவனித்தல் இங்கு அவசியம்.

***பண்பாட்டை அளவிடும் அளவுகோல்களும் இன்று வேறாகிவிட்டன. ஒரு சமூகத்தின் பழம்பெருமையோ பாரம்பரியமோ மதமோ மொழியோ கலைப் படைப்புக்களோ இசையோ நடனமோ பண்பாட்டின் முக்கிய அளவுகோல்கள் அல்ல. மாறாக உணவு, கல்வி, சமூக சமத்துவம், பாற்சமத்துவம் சுற்றுச் சுழலைச் சிதைக்காத இயைவான வாழ்வு வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் போன்றவையே ஒரு சமூகம் பண்பாட்டு மேன்மை உடையதா இல்லாததா என்பதைத் தீர்மானிக்கும் அளவுகோல்களாகியுள்ளன.***

பெறலாம் என்பது இதன் எதிரொலி. இன்று எந்தத் தேசத்திற்கும் உண்மையில் இறைமை இருப்பதாகத் தெரியவில்லை. ' கற்பனையில் உருவான சமூகங்கள்' (Imagined Communities) என்பது இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் தேசத்தின் வீழ்ச்சியை வருமுன் காட்டிய பிரபலமான நூல்.

உடைந்தது தேசம் மட்டுமன்று; குடும்பம் என்ற நிறுவனம், மத நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள்- இப்படிப்பல, தம்பாரம்பரிய வடிவங்களை இழந்துவிட்டன. தேசமும் இனமும் கடந்த, அவற்றுக்குள் அடக்கிவிடமுடியாத, வாழ்வியற் சிக்கல்கள் இன்றைய உலகில் வியாபித்திருக்கின்றன. வாழ்வியல் அடிப்படையில் மக்கள் அணிதிரளும் போக்கும் காணப்படுகின்றது. இதனால் இனம், மொழி, மதம் போன்ற பழைய அடையாளங்களுடன் புதிதாக எழுந்துள்ள வாழ்க்கை

விட்டன. ஒரு சமூகத்தின் பழம் பெருமையோ பாரம்பரியமோ மதமோ மொழியோ கலைப்படைப்புக்களோ இசையோ நடனமோ பண்பாட்டின் முக்கிய அளவுகோல்கள் அல்ல. மாறாக உணவு, கல்வி, சமூக சமத்துவம், பாற்சமத்துவம், சுற்றுச் சுழலைச் சிதைக்காத இயைவான வாழ்வு வாழ்க்கைமுறையைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் போன்ற

***பண்பாடு என்பது நாம் வழமையாக விளக்கிக் கொள்ளும் பொருளில் இன்று நோக்கப்படவில்லை. வாழ்க்கை முறை என்ற பொருளிலேயே இச்சொல் உபயோகிக்கப்படுகின்றது.***


வையே ஒரு சமூகம் பண்பாட்டு மேன்மை உடையதா இல்லாததா என்பதைத் தீர்மானிக்கும் அளவுகோல் களாகியுள்ளன.

எது பண்பாடு என்பதும் பண்பாடு பற்றிய விழிப்புணர்வும் அரசியலில் இருந்து தனிமனித

அடையாளங்குறித்து தமிழருக்கு, குறிப்பாக, ஈழத்தமிழருக்குள்ள சில பண்புகளையும் இங்கு நோக்குவது அவசியமாகின்றது. தென்னாசியாவில் மொழியை முன்னிறுத்தி மக்களையும் தேசத்தையும் இனங்கண்டதில் தமிழுக்கும் தமிழருக்கும் தொல்பாரம்பரியமுண்டு. மற்றைய மொழிகளின் சொற்பிறப்பை நோக்கினால் இது புலனாகும்.

உதாரணமாக, மலையாளம் மலைநாட்டிலிருந்தும்: கன்னடம் கருநாட்டிலிருந்தும், தெலுங்கு திரிலிங்க தேசத்திலிருந்தும், மராத்தி மகாராஷ்டிர தேசத்திலிருந்தும், குஜராதி கூர்ச்சர தேசத்திலிருந்தும்,

# ஈழத்தமிழர் பண்பாட்டடையாளம்



ஒரியா ஒட்டர தேசத்திலிருந்தும், வங்காளி வங்க தேசத்திலிருந்தும், சிங்களம் சிங்களதேசம் அல்லது இன மக்களிலிருந்தும் தத்தம் மொழிகளின் பெயர்களைப் பெற்றுக்கொண்டன. ஆனால் தமிழரும் தமிழ்நாடும் மொழியில் இருந்து தம் அடையாளங்களைப் பெற்றதையே இலக்கியச் சான்றுகள் சுட்டுகின்றன.

' வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகு' போன்ற தொடர்களும் பிறநாடுகளை 'மொழி பெயர் தேஷம்' எனக் குறிப்பிட்ட மரபுகளும் சங்க இலக்கியங்களின் காலத்திலிருந்து, மொழியை முன்னிலைப்படுத்தி, மொழியால் ஒன்றுபட்ட பண்பினைத் தமிழர்கள் பெற்றிருந்ததை உணர்த்துகின்றன. 'உலகில் தோன்றிய முதற்குரங்கும் தமிழ்க்குரங்கு

சமூகம், அந்த ஆய்வில் தனக்கு முக்கியமென்று கண்டதற்கே மதிப்பளித்தது. ஈழத்தில் தமிழர் தொன்மையை நிறுவுவதும் அதற்கூடாகச் சிங்கள-பௌத்த தேசியவாதச் சவாலை எதிர்கொண்டு ஈழத்தமிழர் தேசியத்தின் பரிமாணங்களுக்கு வலுக்கூட்டுவதுமே சமூக வரவேற்புக்குரியனவாயிருந்தன.

போராட்டந் தொடர்ந்தாலும் தளங்கள் மாறிவிட்டிருப்பதையும் மாறிக்கொண்டிருப்பதையும் அனைவருமறிவர்.

ஈழத்தில் தமிழர் தொன்மை இன்றொரு கேள்வி அல்ல. தொன்மையைக் காட்டித்தான் தேசியத்தை நிறுவவேண்டும் என்றநிலையும் இன்றில்லை. வரலாற்றிலும் தொல்லியலிலும் சிங்கள-பௌத்த தேசியவாதம் இன்றும் குந்தியிருக்கும் அதே மரக் கிளையில்தான் நாமும் இருக்க

பொதுவான மொழி, மதம், வரலாறு, பொருளாதாரம் என்பனவற்றின் அடிப்படையில் தேசங்கள் கட்டப்பட்டுத் தேசிய அடையாளங்கள்(National Identity) வலுப்பெற்றிருந்த காலத்தில், அவற்றுக்குள் அடக்கிவிடமுடியாத சிக்கல்கள் எழுந்தன. பொதுவுடமை தேசங்கடந்த சித்தாந்தமாக இருப்பினும் பொதுவுடமையைப்பிரகடனஞ் செய்த நாடுகளும் தேசியச் சிக்கலிலிருந்து விடுபட்டிருக்கவில்லை. தேசியங்களை மீறிய இச்சிக்கல்களை இன

***ஈழத்தில் தமிழர் தொன்மை இன்றொரு கேள்வி அல்ல. தொன்மையைக் காட்டித்தான் தேசியத்தை நிறுவவேண்டும் என்றநிலையும் இன்றில்லை. வரலாற்றிலும் தொல்லியலிலும் சிங்கள-பௌத்த தேசியவாதம் இன்றும் குந்தியிருக்கும் அதே மரக்கிளையில்தான் நாமும் இருக்கவேண்டு மென்றும் இல்லை.***

வேண்டு மென்றும் இல்லை.

வரலாற்றையோ தொல்லியலையோ இன்று எவரும் கருத்தி லெடுத்துப் படிப்பதாகவும் தெரிய வில்லை. அண்மையில் காலமான டெரிடாவின் தகர்ப்புவாத (Deconstr uction) சிந்தனைகளுக்குப் பின் வந்த புதிய வரலாற்றியல் (Neo Historiography) இலங்கைக்கு இன்னும் புதியதாகவே இருக்கின்றது. மாற்றங்களைக் கணக்கிலெடுக்காமல் ஆய்வுகள் போன போக்கில் இந்தத் துறைகளை இழுத்து மூடிவிடலாம் என்பது பரவலான கருத்து. வாழ்வின் இருப்பிற்கு உதவும் வகையில் இந்தக் கற்கை நெறிகள் நெறிப்படுத்தப் படவில்லை என்பதே காரணம்.

இந்த இடத்தில் பேராசிரியர்

அடையாளங்களால் (Ethnic Identity) வந்த சிக்கல்கள் என்று அழைத்தார்கள். இன அடையாளம் என்பதும் இனப்பிரச்சினை என்பதும் உலகின் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறு விதமாக விளக்கிக் கொள்ளப்பட்டது; கையாளப்பட்டது.

பொதுவுடமையின் வீழ்ச்சி, தேசங்களைத் தோற்றுவித்த ஐரோப்பாவிலேயே தேசியம் 'கண்டவடிவெடுத்து' ஐரோப்பிய கூட்டமைப்பு ஆனது, தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் , தேசங்களால் கட்டுப்படுத்தமுடியாத தொடர்புசாதனப் புரட்சி- இவையெல்லாஞ் சேர்ந்து இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் தேசம் ஏறத்தாழ இறந்துபோய் விட்டது. ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்களுக்கு ஒரேநேரத்தில் குடியுரிமை

'முறை அடையாளங்களையும் உள்ளடக்கக் கூடியதாக பண்பாட்டு அடையாளம் (Cultural Identity) என்ற கருத்தும் சொற் பிரயோகமும் இன்று பரவலாகிவருகின்றன.

பண்பாடு என்பது நாம் வழமையாக விளக்கிக்கொள்ளும் பொருளில் இன்று நோக்கப்படவில்லை. வாழ்க்கைமுறை என்ற பொருளிலேயே இச்சொல் உபயோகிக்கப்படுகின்றது. வாழ்க்கை முறைகள் என்றபன்மையில் விளங்கிக்கொள்வது மேலும் சிறப்புடையது என்ற கருத்தும் உண்டு. உண்மை ஒன்றாக இருக்கவேண்டியதில்லை; பலவாகவும் இருக்கலாம். பன்மையாக இருப்பதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம், பண்பாட்டுப் பக்குவம். இது பண்பாட்டுப் பன்மைத்துவம் (Cultural Pluralism) என்ற பெயரில் அரசமைப்பியல் விழுமியங்களுள் ஒன்றாக இன்று முன்வைக்கப்படுகின்றது.

தாராண்மை சனநாயகம் எனப்படும் மேற்கத்தைய சனநாய

**பேராசிரியர் பொ.ரகுபதி**

கங்கள் இதுவரை சர்வசன வாக்குரிமை, பிரதிநிதித்துவ அரசு, பல கட்சிமுறை, தனிமனித சொத்துரிமைச் சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படைச் சுதந்திரங்கள்- இவற்றையே சனநாயகத்தின் அளவுகோல்களாக வைத்திருந்தார்கள். இப்பொழுது, பண்பாட்டுப் பன்மைத்துவம், தனிமனித பண்பாட்டு உரிமை, வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் ஆகியவற்றையும் முக்கிய அளவுகோல்களாக இணைத் துள்ளார்கள்.

பண்பாட்டை அளவிடும் அளவுகோல்களும் இன்று வேறாகி

வாழ்க்கை வரை அனைத்திற்கும் ஆதாரமாகிவிட்டன. அண்மையில் பிரிட்டிஷ் பல்கலைக்கழகப் பொருளாதாரப் பேராசிரியர் ஆமாத்தியா சென்னுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டதை அறிந்திருப்பீர்கள். அபிவிருத்திக்கும் பொருளாதாரத்திற்கும் தொடர்பில்லை; அபிவிருத்தி பண்பாட்டுடன் தொடர்புடையது என்ற கருத்தை நிறுவியதற்காகவே அவருக்கு அப்பரிசு வழங்கப்பட்டது.

***பொதுவுடமையின் வீழ்ச்சி, தேசங்களைத் தோற்றுவித்த ஐரோப்பாவிலேயே தேசியம் 'கண்டவடிவெடுத்து' ஐரோப்பிய கூட்டமைப்பு ஆனது, தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள், தேசங்களால் கட்டுப்படுத்த முடியாத தொடர்பு சாதனப் புரட்சி- இவையெல்லாஞ் சேர்ந்து இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் தேசம் ஏறத்தாழ இறந்துபோய்விட்டது.***

பண்பாடும் அபிவிருத்தியும் (Culture and Development) என்பது இன்று மேற்குலகக் கல்வி நிறுவனங்கள் முன்வைக்கும் சுலோகமாகிவிட்டது.

சில தசாப்தங்களுக்கு முன்னர், அறுபதுகளில், ஏறத்தாழ இதே கருத்தைச் சீனாவில் மாவோ முன்வைத்தார். அவரது அபிவிருத்திக்கான பெரும்பாச்சல் (Great Leap Forward) வெற்றியளிக்காதபோது அதற்கான காரணம் மக்களது பண்பாட்டில் உள்ள குறைபாடு என இனங்கண்டு அவர் முன்னெடுத்த இயக்கமே பண்பாட்டுப் புரட்சி (Cultural Revolution) என அழைக்கப்பட்டது. மேற்குலகு அவரது கருத்தைச் சிலமாற்றங்களுடன் தனதாக்கியுள்ளது.

என்று சொன்னால் தான் நம்மவர்க்குத் திருப்தி என்றெழுதிய புதுமைப் பித்தனின் கிண்டலில் ஆழ்ந்த பொருளுண்டு. மொழி குறித்த அடையாளம் தமிழரிடையே சற்றுப் பலமானது. மொழியின் தொடர்ச்சி பேணப்பட்டதோடு பல பண்பாடுகளுக்கும் ஊடகமாகத் தமிழ் இருந்திருக்கிறது. சமணம், பௌத்தம், பிராமணீயம், சைவம், வைஷ்ணவம், சித்தர் மரபு, இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற பல சமயப் பண்பாட்டு மரபுகளுக்கு மாத்திரமல்லாமல் நஸ்தீக வாதத்திற்கும் தமிழ் பொதுவான ஊடக மானது. அவற்றால் செழுமையடைந்த பண்பாட்டுப் பன்மைத்துவம் தமிழ ்குப் புதியதன்று.

(மிகுதி அடுத்த வா ....)





# இனி எதிரி கலங்குவான்..!



**அடுத்தடுத்து தனது படைபலம், பணபலம், ஆயுதபலம், அரசியல் பலம் என சிங்கள தேசம் தன்னுடைய எல்லா பலத்தையும் பயன்படுத்தி எங்கள் நிலம்மீது மேற்கொண்ட படையெடுப்புக்கள் மக்களின் பலத்தின் முன்னால் சின்னாபின்னமாகி சிதைந்து ஓடிய வரலாற்றை தமிழர் தம் கண்களால் கண்டனர்.**

சமாதானம் என்ற போர்வையில் அரசு போரைத் திணித்து வருகிறது.

பலமற்று இருக்கும் எந்த இனமும் தலை நிமிர்ந்து இருக்க முடியாது.

இதிலும் தமிழர் தம் தாயக பூமியில் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழவேண்டு மானால் பலமான நிலையில் இருக்கவேண்டியது அவசியம்.

எத்தனை துயர் சுமந்தாலும் தமிழர் எப்போதும் பலமிழந்ததில்லை. அவர்கள் படைபலம் பெற்றே வருகின்றனர்.

ஒவ்வொருவரும் தன்னை காத்துக்கொள்ள தெரிந்ததுபோல தாயகத்தைக் காக்கத் தெரிந்திருக்கவேண்டும்.

அடுத்தடுத்து தனது படைபலம், பணபலம், ஆயுதபலம், அரசியல் பலம் என சிங்கள தேசம் தன்னுடைய எல்லா பலத்தையும் பயன்படுத்தி எங்கள் நிலம்மீது மேற்கொண்ட படையெடுப்புக்கள் மக்களின் பலத்தின் முன்னால் சின்னாபின்னமாகி சிதைந்து ஓடிய வரலாற்றை தமிழர் தம் கண்களால் கண்டனர்.

யாழ்ப்பாணத்தின் மீது எறிகணைகளை இடையறாது தூவி தமிழர் பண்பாட்டு தலை நகரத்தை சிதைத்து சின்னாபின்னமாக்கி வெறும் நிலத்தை பிடித்தபோது அழுத கண்ணீரோடு மக்கள் கிளாலி கடந்தனர்.

ஆனால் வெற்றியின் மமதையில் தன்னை மறந்த எதிரி கிளிநொச்சி என்றும் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையெனவும் தனது நிலம் பிடிக்கும் வெறியை அகல விரித்தபோது தமிழ் மக்கள் ஆலய முன்றல்களிலும் பாடசாலை மைதானங்களிலும் பிரதான வீதிகளிலும் எல்லைப் படை, கிராமியப்படை என தமது உடலுக்கும் உளத்துக்கும் தம் இலட்சியத்துக்கும் உரமூட்டியபடியிருந்தனர். ஆனால் எதிரிகளோ எம்மை குறைத்து மதிப்பிட்டபடி எக்காளமிட்டு இருந்தனர்.

விளைவு, ஒட்டு சுட்டானிலிருந்து தொடங்கிய ஓயாத அலைகள் மூன்று எதிரியை ஓட ஓட விரட்டி பிடிக்க முடியாது என திமிர்விட்ட ஆனையிறவையும் வீழ்த்தி முன்னேற மக்கள் பலம் துணைநின்றதைக் கண்டு எதிரி திகைத்தான். அழுதபடி யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய தமிழர் சிரித்தபடி ஆனையிறவு கடந்து யாழ்ப்பாணம் போனார்கள்.

இப்போது மீண்டும் தற்காப்புப் பயிற்சி பளையிலும் மட்டக்களப்பிலும் திருகோணமலை என தாயகமெங்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்தி பலம் பெறும் தமிழரின் படை கண்டு எதிரி கலங்குவான் இதுவே அவனுக்கு பெரும் இடரைக் கொடுக்கும்.

இனி எங்கள் கால்களும், கரங்களும் வலுப்பெறும். எதிரி முகாம்களுக்கு இனி நித்திரை செத்ததுதான். ஒவ்வொரு தமிழனும் தம் கால்களுக்கு சக்கரம் பூட்டி சுழல வேண்டும்.

கைகளில் ஏறும் கருவி போல எங்கள் மனங்களிலும் தாயகம் மீட்போம் என்ற உரம் ஏறவேண்டும்.

**வேழினி**

---

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாவி மக்களைக் கொன்ற இக்குண்டுவெடிப்பினால் உயிரிழந் தவர்களின் உறவுகளின் வேதனை களுடன் பங்குகொள்ளும் அதே நேரம், இவ்வெடிப்புக்குக் காரணமான குண்டுதாரிகளின் சிந்தனைகளில் முஸ்லிம் மத அடிப்படைவாதத்தை ஊட்டித் தாக்குதலுக்குத் தயார் செய்த வர்களென பிரித்தானியா இனங் காட்டும் 'மட்றசாஸ்'(madrasas) எனப்படும் முஸ்லிம் மதத்தலைவர் கள் பாகிஸ்தானில் பல்லாயிரம் பேர் உள்ளனர். இவர்களில் சிலரே இங்கிலாந்திலும் இவ்வாறான ஆட்திரட்டலில் ஈடுபடுவதாக பிரித் தானிய மட்டங்கள் குற்றம் சாட்டு கின்றன. ஆமாம்! யார் இந்த 'மட்ற சாஸ்'? பெயரைப் பார்க்க சென்னையுடன் தொடர்புடையவர்கள் போல இருந்தாலும் உண்மை அப்படியில்லை.

1979-1989 காலப்பகுதியில் ஆப்கானிஸ்தான் சோவியத் படைகளின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்தது. அணிசேரா நாடுகளின் முதன்மை நாடென்று கூறப்பட்ட இந்தியாவிற்கு ஆதரவாக அதன் அணியைச் சேர்ந்த சோவியத் படைகள் அமெரிக்க சார்பு பாகிஸ்தானைப் பக்கவாட்டாக நெருக்கும் வகையில் ஆப்கானிஸ் தானை 10 ஆண்டு காலமாக ஆக் கிரமித்திருந்தது (ஆப்கானிஸ்தானில் வாழ்ந்துவந்த வெவ்வேறு இனக் குழுமங்களும் இந்த ஆக்கிரமிப்புக் குக் காரணமாகும்).

இக்காலகட்டத்தில் சோவியத் படைகளை எதிர்த்து 'ரலிபான்' ஆயுததாரிகள் போரில் ஈடுபட்டிருந் தனர். 'மாணவர்கள்' (Students) என்று அர்த்தப்படும் ரலிபான்களில் பெருந்தொகையானவர்கள் பாகிஸ் தானில் ஆயுத மற்றும் முஸ்லிம் அடிப்படைவாதக் கற்கைகளைப் பற்றுக்கொண்டு, சோசலிச(?) சோவியத் படைகளை எதிர்த்துப் போராடினர் (ஆரம்பத்தில் முஜாகுதீன் என அழைக்கப்பட்டாலும், அதன் மீள்கட்டமைப்பாகவே ரலிபான் அமைந்துள்ளது. பழைய கள்ளுத் தான்!). 3ஆம் உலகநாடுகளில் பரவி வந்த சோசலிச சித்தாந்தத்தின் பரவலைச் சிதைப்பதற்காக ரலிபான் களுக்கு கடுமையான மதவெறி ஊட்டப்பட்டது. இந்த ஊட்டல்-பணிகளில் ஈடுபடுவதற்கென அமெ ரிக்காவின் உதவியுடன் பாகிஸ்தான், தன் நாட்டிலிருந்த மதபீடங்களி லிருந்து தெரிந்தெடுத்துக் கையா ண்ட கடும்போக்காளர்களே இந்த 'மட்றசாஸ்' எனப்படுபவர்கள். இது மட்டுமல்லாமல் தற்காலத்தில் பெரு மளவில் பரபரப்பை உண்டாக்கும் 'ஸ்ரிஞ்சர்' வகை விமான எதிர்ப்பு ஏவுகணை கூட சோவியத் உலங்கு வானூர்திகளை எளிதாகச் சுட்டு வீழ்த்துவதற்கென அவசரமாக அமெ ரிக்க ராணுவத்தினால் வடிவமைக் கப்பட்டதே! இருந்தபோதிலும் ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படைகள் வாபஸ் பெறப்பட்ட பின்னர், பயன்படுத்தப்பட்டவை போக மிகுதி 'ஸ்ரிஞ்சர்கள்' அமெரிக்கா வின் இடைத்தரகர்களால் அதிக விலைகொடுத்து வாங்கப்பட்டு விட் டன. அன்பளிப்பாகத் தாம் கொடுத்த வற்றை அதிகளவு டொலர் கொடுத்து மீளப்பெற்றதற்குக் கார ணம் 'அவை' முஜாகுதீன் அல்லது ரலிபான்களின் கைகளில் இருக்கக் கூடாது என்பதற்காகவே! ஆனால், அவர்கள் விதைத்த 'மட்றசாஸ்' களின் ஆற்றல் அவர்களை எதிர்க்கக்கூடும் என்று எண்ணாமல் விட்டதன் எதிரொலிதான் 07-07 குண்டுத்தாக்குதல்களா?

மீண்டும் ரொனிபிளேயர் தெரிவித்த 'எந்தக்காரணமும் தற்கொடைக்குண்டுத்தாக்குதல்களை நியாயப்படுத்தி விடமுடியாது' என்ற கருத்துக்கு வருவோம். 'நாலு பேர் உள்ள இடத்தில் நயமாகவே பேசியுள்ளார்' என்று வைத்துக் கொண்டு அமெரிக்கத்திரைப்படமான 'பேர்ள் ஹாபர்-Pearl Harbour' இற்கு வருவோம். 2ஆம் உலகயுத்த காலகட்டத்தில் நிகழ்ந்த 'பேர்ள்' துறைமுகம் மீதான யப்பானியத் தாக்குதல் உட்பட பல சம்பவங்கள் கற்பனைகளுடன் கலக்கப்பட்டு எடுக் கப்பட்ட இப்படம், உலகெங்கும் அதி கம் பேசப்பட்ட பிரமாண்டமான தயா ரிப்பும் கூட. அதில் ஒரு கட்டம்: போர் விமானிகளுக்கான வகுப்பொன் றிலே கற்பித்துக்கொண்டிருக்கும் மூத்த விமானப்படை அதிகாரியை நோக்கி, இளநிலை வீரன் ஒருவ னால் ஒரு சந்தேகம் முன்வைக்கப் படுகின்றது. 'விமானத்தில் குண்டு கள் அனைத்தும் தீர்ந்துபோன நிலையில் சண்டையிலிருந்து பின்வாங்க வேண்டுமா அல்லது என்ன செய்யவேண்டும்?' என்பதே அவனது கேள்வி.

'எனக்கு முன்னே இருக்கும் எதிரியின் மோசமானதொரு படை மையத்தை எனது இலக்காகத் தேர்ந்தெடுத்து, அதனுடன் எனது விமானத்தை மோதி அவர்களையும் அழித்து, நானும் அழிவேன்', என்கிறார் அந்த மூத்த அதிகாரி.

இது அவர்களின் தந்தை நாட்டுப்பற்று (அவர்கள் தாய்நாடு என்று பயன்படுத்துவதில்லை என்ப தால்) என்றளவிலே உயர்வாகவே வெளிப்படுத்தப்படுகிறது.

அமெரிக்காவில் தயாரிக்கப்படும் வரலாறு தொடர்பான படங்களில் அமெரிக்க அரசின் நலன்கள் பிரதிபலிக்கப்படும் அல்லது வேறு குறிப்பிட்ட சில கருத்துகள் பரப்பப் படும் தேவையிருப்பின் அவ்வாறான படத்தயாரிப்பாளர்களை 'பென்ரகன்' ஆதரித்து வருவதாகச் சொல்லப்படு கிறது. அதேபோல சில வருடங் களுக்கு முன்னர் இந்தியாவில் அர்ஜுன் தயாரித்து வெளியிட்ட சில திரைப்படங்களுக்கு (முஸ்லிம் பயங்கரவாதிகளைப் பந்தாடிக் கொண்டு இந்தியம் பேசும் வகை யிலமைந்த) 'றோ'வின் பொருளா தார நல்லாசிகள் இருந்ததாக இணையத்தளச்செய்தி ஒன்று கூறு கின்றது. அதுசரி! ரொனி பிளேயர் நிச்சயமாக 'பேர்ள் ஹாபர்' படத்தைப் பார்த்திருப்பாரா? இல்லை என்று எண்ணுவதற்கு இடமில்லை.

2ஆம் உலகயுத்தத்தில் யேர்மனியக்கூட்டணியைச் சேர்ந்த அணிகள் முற்றாகத் தோற்கடிக்கப் பட்ட நிலையிலும் யப்பானியப்படை கள் மட்டும் தங்கள் தோல்வியை நெருங்கிய நிலைமையை ஏற்க மறுத்து, மிச்சம்-மீதி இருந்தவற்றை வைத்து ஒன்றரை மாதங்களுக்கு அமெரிக்க-பிரிட்டிஷ் படைகளுடன் முட்டிக்கொண்டிருந்தன.

யப்பானைச் சரணடைய வைப்பதற்காக ஹீரோசிமாவிலும், நாகசாகியிலும் வீசப்பட்ட அணு குண்டுகள் பல்லாயிரக்கணக்கான இளம் அமெரிக்கப்போர்வீரர்களைக் காப்பாற்றுவதற்காக மேற்கொள்ளப் பட்ட, தவிர்க்க முடியாத நடவடிக் கையென அமெரிக்கத்தரப்பு இன்றும் கூறுகிறது. இந்த வருடம் 'D-Day' எனக் குறிப்பிடப்படும் யூன் 06 1944ஆம் ஆண்டு அமெரிக்க-கனடி யப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட புகழ்பெற்ற 'நோமண்டித்தரை யிறக்கத்தின்' 60ஆவது ஆண்டு பூர்த்தி நினைவுகூரப்பட்டது. இதன் போது சனாதிபதி புஷ் கூறியதாவது இந்தத் தரையிறக்கத்தில்உயிரை நீத்த பல அமெரிக்க வீரர்களின் சட்டைப்பைகளில் கூடவே எப்போ தும் பைபிள்களும் இருந்தன. 'நண் பனுக்காக உயிரை அர்ப்பணிப்பதை விட மேலான அன்பு எதுவுமில்லை' என்ற வாசகத்தை அவர்கள் தமது நெஞ்சிலே சுமந்து சென்றனர். உண்மையிலேயே அப்போர்வீரர்கள் பைபிளைக் கூடவே வைத்திருந்த னரா என்பது பற்றி எனக்குத் தெரி யாது. அநேகமாக அப்படி இருந் திருக்காது என்றே எண்ணத்தோன்று கிறது. எப்படியோ உலகம் இன் றுள்ள சூழலில் தனது 15 நிமிட உரையிலே சனாதிபதி புஷ் பைபிளை ஏன் எடுக்க வேண்டும்?

தற்கொடைக்குண்டுதாரிகளை மடக்கும் பரபரப்பில் பிரித்தானியப் பொலிசார் பிறேசில் நாட்டைச்சேர்ந்த ஒரு அப்பாவியைச் சுட்டுக்கொன்றி ருக்கிறார்கள். இதற்கு வருத்தம் தெரிவித்த அதேநேரம் தற்கொடைத் தாக்குதல்களைத் தவிர்க்கும் நடவடிக்கைகளில் இப்படியான சம்பவங்கள் தவிர்க்க முடியாதவை என்றும் அரச தரப்பால் கூறப்பட் டுள்ளது. எல்லோருக்கும் ஏதோ வொரு காரணம் இருக்கும்போலல் லவா தெரிகிறது.

இதேவேளை பொஸ்னிய யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஸ்றெபிறெனிக்கா என்ற நகரம் இடம்பெயர்ந்த மக்கள் தஞ்சம் புகுவதற்கென்று ஐ.நா.வின் படையணிகளால் "safe areas" என்று அறிவிக்கப்பட்ட இடமாகும். இருந்தபோதிலும் 1995 யூலையிலே சிறுவர்கள், பெண்கள் உட்பட 8500 முஸ்லிம் மக்கள் சேர்பியப்படை களால் அழிக்கப்பட்டபோது ஐ.நா. வின் நெதர்லாந்துப்படைப்பிரிவு முன்னே வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தது. அமைதி காக்க வந்த படைகள் தாங்கள், தாக்குதல் களுக்கு அனுமதியளிக்கப்பட வில்லை என்பதே அவர்கள் தரப்பால் சொல்லப்பட்ட நியாயமாக உள்ளது. இதை என்னவென்று வகைப்படுத்து வது?

கட்டுரைகள் வழக்கமாக குறித்ததொரு விடயத்தை எடுத்து விளக்கும் முகமாக அமைந்திருக் கும். ஆனாலும், இது உலகப்பிர முகர்கள் தாம் விளங்கிக்கொள்ள விரும்பாத ஒன்றைப் பற்றி மற்ற வர்களுக்குக் கொடுக்கும் விளக்கங்க ளை(?) கொஞ்சம் விளக்கமாகப் பார்த்து வாசிப்பவரின் விளக்கத்தைக் கெடுப்பதாக அமையக்கூடும். எது எப்படியோ!... 'பயங்கரவாதம்' என்ற சொல்லிற்கு எவருமே அறுதியான வரைவிலக்கணம் கொடுக்க வில்லை. ஆனாலும், 'பயங்கரவாதி கள்' யார்யாரென அவர்கள் பட்டிய லிட்டு வைத்துள்ளார்கள். 'அப்பட்டி யலில் உள்ளவர்கள் என்ன செய்தாலும் அது பயங்கரவாதமே!' என்றளவில் தான் உலகம் போய்க்கொண்டிருக்கிறது.



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 13


பகுதி -59

யாராவது ஒருவருக்கு உரியதாகவும் இருக்கும்"

"அப்பிடியோ?"

"ஓம்" என்றான் அவன். யாருக்காவது உரியது அல்லாதது என்று ஒரு நாளும் இருக்காது. நாட்காட்டியை செப்ரெம்பர் இருபத்து மூன்றுக்குத் திருப்பினான்.

"வசந்தகாலத்தின் முதல் நாள் என்று இதை அழைப்பேன்" என்றான். "இலையுதிர் காலமே உன்னை. வரவேற்கிறேன்" என்று



அந்தத் தாளில் எழுதினான்.

என்னுடைய சந்திப்பு அட்டை கோவையை தன்னருகே இழுத்துக் கொண்டான்."

"என்னுடைய பெயரும் உங்களுடைய சந்திப்பு அட்டைக் கோவையில் இருக்கிறதா? என்று அவன் கேட்டான்.

"டொக்டர் வைத்திருக்கிறது போல என்னுடைய பெயருள்ள ஒரு அட்டை உங்கட கோவையிலயும் இருக்குதா? அப்பிடி ஒரு அட்டை இருக்குதா?"

"நீங்களே பாத்துக்கொள்ளுங்கோவன்" என்றேன் நான்.

அவன் தனது குடும்பப் பெயரின் முதலெழுத்தின் கீழ் கோவையிடப்பட்டிருந்த அட்டைகளுள் தேடினான்.

"இல்லை அது இங்கே இல்லை" என்றவன், தொடர்ந்து ,"நான் "டி"யின் கீழ் பார்க்கப்போறேன். சில வேளை நீங்கள் அதை 'டி' யின் கீழ் கோவையில இட்டிருக்கக்கூடும். அது என்ர குடும்பப் பெயருக்குக் கீழதான் வந்திருக்க வேணும். எண்டாலும் நான் டிப்ஸ் என்று தேடிப்பாக்கிறன்"

"தேடிப்பாருங்க" என்று நான் சொன்னேன். அவன் தேடினான். எனினும் அவ்னது பெயர் சந்திப்பு அட்டை கோவையில் இருக்கவில்லை.

"அது இங்க இல்ல" என்றான் அவன்.

"அது அங்க இருக்க வேணுமெண்டு நீங்கள் விரும்புகிறீங்களா?"

"ஓம்"

"அப்பிடியெண்டா, நீங்களே அதை அங்கே வைத்துவிடலாமே?" என்றேன்.

அவன் வெற்று அட்டை ஒன்றை தெரிவு செய்து கொண்டான். தனது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் முதலியவற்றை தனித்தனி எழுத்துக்களால் அவதானமாக எழுதினான். அதற்குப் பின்பு, தனது குடும்பப் பெயரின் முதலெழுத்தின் கீழ் சரியான முறையில் கோவையில் இட்டான். பின் இன்னொரு வெற்று அட்டையை எடுத்து எனது பெயரை தனித்தனி எழுத்துக்களில் எழுதினான். முகவரிக்கு "விளையாட்டு அறை" என்று எழுதிக்கொண்டான். மையத்தினுடைய தொலைபேசி இலக்கத்தைக் கேட்டு அட்டையில் அதை எழுதினான். அந்த அட்டையை "ஏ"யின் கீழ் கோவையிலிட்டான்.

ஆலய மணிகள் மீண்டும் ஒலித்தன. கிட்டத்தட்ட சாப்பாடு சாப்பிடுற நேரமாகிற்றுது."என்று விட்டு அறைக்குக் குறுக்காக நடந்து சென்று ஜன்னலூடாக வெளியே பார்த்தான். சுரங்க ரயில் பாதையின் புகு வழியை நோக்கிச் செல்லும் ஆட்களின் தொகை அதிகரித்துக் கொண்டிருப்பதை காணக் கூடியதாகவிருந்தது. அவன் அவர்களை அவதானித்தான்.

"ஆட்கள் வேலை விட்டு வீட்டுக்கு. போகினம்.... வேலை விட்டு வீட்டுக்குப் போகினம்.... வேலை விட்டு வீட்டுக்குப் போகினம்." என்றவன், தொடர்ந்து, " வேலை விட்டு வீட்டுக்குப் போகும்போது கிழக்கு நோக்கித் தான் போவீனம். இரவுச் சாப்பாட்டுக்குப் போகினம். பிறகு நாளைக்கு அவையள் திரும்பியும் வருவினம். மேற்கு திசையாக அவயள் வருவினம். காலையில மேற்கு திசையில வேலைக்கு வருவினம்"

"ஓம்"என்றேன் நான்.

" எல்லா ஆக்களும் வீட்ட போகினம். வேலை செய்யிற ஆக்கள் எல்லாரும் வீட்ட போகினம். இரவுச் சாப்பாட்டுக்கெண்டு வீட்டுக்குப் போகினம். இரவுக்கு வீட்டுக்குப் போகினம். எல்லா ஆக்களும் கிழக்கால போகினம். பிறகு காலையில வேலைக்கு வ்ாறதுக்கு மேற்காக வருவினம்"

"ஓம் நீங்கள் சொல்லுறது சரிதான். சுரங்கரயில்ல அல்லது பஸ்சில வந்தா அப்பிடித் தான் வருவினம்" என்று விட்டு தொடர்ந்து, "இப்ப அவயள் வீட்ட போகினம். காலையில அவர்கள் வேலைக்கு வரக்கூடும்" என்றேன்.

"ஓம்" என்றான் டிப்ஸ். "அங்கயும் இஞ்சயும் ஒவ்வொரு நாளும்... ஒவ்வொரு நாளும்... இது சலிப்பூட்டுற வேலை"

அமைதியாக வெளியே பார்த்தபடி நீண்டநேரம் அங்கேயே



# முடுபனிக்குள் ஒரு தேடல்

மொழியாக்கம் :- வி.பி.யோசப்

நின்றுகொண்டிருந்தான். பிறகு திரும்பி என்னைப் பார்த்தான் "அம்மாவக் காணயில்ல" என்றான்.'

"அவ இன்னும் வரயில்ல. அவ வந்தா அங்கயிருந்து மணியை ஒலித்து எங்களுக்குத் தெரிவிப்பீனம்"

"அப்பிடிச் செய்வினமா?"

"ஓம்"

"அப்பிடி நடக்குமெண்டு உங்களுக்குத் தெரியும்... என்ன?" என்று கேட்டான்.

"ஓம் எனக்குத் தெரியும்" என்று பதில் சொன்னேன்.

"அங்கவெளியில இருக்கிற ஒருதர் அம்மா வந்ததும் மணி அடிக்கிறதா சொன்னவரா?"

"ஓம் நீங்கள் என்ன நினைக்கிறீங்கள்?"

"அவயள் சிலவேளைகளில சொல்லுற மாதிரி செய்யமாட்டினம்"

"சில வேளைகளில நீங்கள் ஏதாவது ஒண்ட எதிர்பார்க்க அது நடக்காம நீங்க ஏமாந்து போகலாம் எண்ட எண்ணம் இருக்குதா?"

"ஓம்" என்றவன் தொடர்ந்து,"அப்பிடி நடக்கலாம்.அத நீங்க நம்புறீங்கள் எண்டா, நான் வேற ஒரு வேலை செய்யவேணும்"

"நீங்கள் என்ன செய்யவேணும்?" என்று கேட்டேன்.

நாட்காட்டியை தனக்கு கிட்டவாக இழுத்துக்கொண்டவன் அதன் தாள்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். அன்றைய நாளுக்குத் திரும்பினான் "இது இன்றைக் குரியது. இதில நான் ஒரு X ஐப் போடப்போறன்"

"இன்றைய தாளில X ஐப் போடப் போறீங்களா?" என்ற நான் "ஏன்?" என்று தொடர்ந்து கேட்டேன்.

"ஏனெண்டா....இது எனக்கு முக்கியமான ஒரு நாள்" என்றான்.

"இன்றைய நாள் ஏன் உங்களுக்கு முக்கியமானது?" என்று கேட்டேன்.

"இது எனக்கு ஆக முக்கியமான நாள்" என்று கருத்தூன்றிய விதமாகச் சொன்னவன், "அது எனக்குத் தெரியும்"என்றான்.

உற்சாகமின்றி நாட்காட்டியை புரட்டிக் கொண்டு போனான். சரியான இடத்தில் நிறுத்தி, "இது பாஸ்கா நாள்" என்றான்.

"ஓம் அதுதான்" என்றேன்.

"அது ஒரு அழகான நாள்"

"அப்பிடியோ?"

"ஓம்பாஸ்கா நாள் நிறைய பூக்களக் காணலாம். கோயிலுக்குப் போகலாம்.... அல்லவா?"

"ஓம்" என்று நான் சொல்லவும் மணி அடிக்கவும் சரியாக இருந்தது.

" நீங்கள் சொன்னமாதிரியே மணி அடிக்குது" கதவைச் சுட்டிக் காட்டியபடி டிப்ஸ் சொன்னான்.

"ஓம் உங்கட அம்மாதான் வந்திருக்கிறா"

"எனக்குத் தெரியும்" என்ற டிப்ஸ், "போயிற்று வாறன்"

என்னை நோக்கி நடந்து வந்த் அவன் சிறிது வெட்கத்துடன் எனது கையைத் தொட்டான் "போயிற்று வாறன் மிஸ் ஏ"என்று அவன் சொன்னான்.

நாங்கள் இருவரும் இணைந்தே காத்திருக்கும் அறைக்கு வந்தோம். அவனது தாயார் இயல்பான சிநேகமானமுறையில் எனக்கு முகமன் கூறினாள் டிப்ஸ் அவளுக்குப் பக்கத்தில் எதுவும் பேசாமல் நின்றான். வெளி அலுவலகத்துக்கு அவர்கள் செல்லத் தொடங்கிய வேளை, "போயிற்றுவாறன் எண்டு....சொல்லுங்கோ" என்று தொடங்கிய தன் தாயாரை இடைமறித்த டிப்ஸ் "போயிற்று வாறன்" என்றான். உணர்ச்சிகள் இன்றி இயந்திரத்தனமாக வெளிவந்தது அவன் குரல்.

" நாங்கள் என்ர அலுவலகத்தால வெளிக்கிட முதலே போயிற்றுவாறன் எண்டு சொல்லிப்போட்டார்" என்று அவனது தாயாருக்குக் கூறினேன்.

டிப்ஸ்சின் முகத்தில் மலர்ச்சி தெரிந்தது. "போயிற்றுவாறன் மிஸ் ஏ" என்றவன், "சந்தோசமா போயிற்று வாறன்" என்றான்.

(தொடரும்)



# முயன்றால் முடியும்...!

இயலாமை என்பதனை எம் மனம் தான் ஏற்படுத்திக்கொள்கிறது. இக் காரணத்தினால்தான் எவ்விடயத்தினையும் முழுமை பெற முடியாமல் உள்ளது. இயலாமையை மனதிலிருந்து முளைவிடாது கிள்ளி எறிந்து எம்மால் எதனையும் செயற்படுத்தமுடியும் என்று எம் மனதில் உரமூட்டுவோமானால் எவ்விடயத்திலும் முழுமை பெறமுடியும். இயலாது என்றிருந்தால் என்றும் இயங்காத இயந்திரமாய்த்தான் எம் வாழ்வு இயங்கும்.

விதியென எண்ணி எம் வாழ்க்கையை இருள் சூழ்ந்த பொழுதாய் எம்மில் வாழ்கிறோம். எந்த ஒரு செயற்பாட்டிலும் எம்மை உற்படுத்திக் கொள்ளாமல் எல்லாம் விதி... விதி.... விதியென வாழ்வதில் பயனற்ற நினைவுகள் தான். விதியென கொள்ளாது மதியால் வெல்லமுடியும் என்ற மனநோக்கோடு வாழ்வோமானால் வாழ்வில் வெற்றி நிலைக்கும்.

எல்லாம் விதியென கொள்ளும் மனம் ஒரு நாளும் மதியால் வெல்லமுடியும் என்றெண்ணுவதற்குக் கூட பொழுதுகள் போதாமையாக உள்ளன. எம் மனதில் தைரியம் அற்று வாழ்வதால் தான்இருள்சூழ்ந்த வாழ்வினில் பயணிக்கிறோம்.

எம் மனதில் கவலை ஏற்படுத்திகொள்பவர்கள் நாம் துன்ப துயரங்கள் எமக்கு ஏற்படாது என நினைத்துவிடக்கூடாது. இவ்வாறு ஏற்படுகின்ற துன்ப துயரங்களை எண்ணி சலிப்பது பயனற்ற ஒன்று தான். இவ்வாறு இருப்பதினால் அடுத்த கட்ட நிலைக்குள் நாம் மாறுபடமுடியாதவர்களாய் போய்விடுகிறோம்.

"திடம்கொள் மனதோடு-நீ
தினம் வாழ் உண் வாழ்வில்
ஒளிமயம் தான்"

விதியின் கரங்களிலிருந்து எமைக் காப்பாற்றுவதென்றால் மனதாயுதத்தைக் கொண்டுதான் தகர்க்கமுடியும். இவ்வாறு பார்க்கின்ற போது எல்லாவற்றையும் நாம் அடையமுடியாது. உதாரணமாக நீரில் இரும்புத் துண்டு மிதக்கவில்லை, இதுவும் விதிதான் எனவும் கொள்ளலாகாது. வாழ்வினில் ஏற்படும் பள்ளத்தாக்கினை திடங்கொள்ளும் மனதோடு விதியென கொள்ளாது மதியெனும் மனதாயிதத்தினைக் கொண்டு மறுபடியும் முளைவிடும் மொட்டுக்களாய் மனவலிமைபெற்று, விதியெனக்கொள்ளாது மதியால் வெலவோம்.

எஸ். மதீஸ்



வளைகாப்பு வாழ்த்துக்கள்!

எமது அருமை நண்பரும்
தர்மபுரம் ஆர்.வி.பந்தல் சேவை
உரிமையாளருமாகிய
இ.விஜயரட்ணம்
அவர்களின் மைத்துனி

திருமதி
மதியழகன் வனஜா
அவர்களின்


வளைகாப்பு நிகழ்வை
முன்னிட்டு
அவர்களை
மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
திரு. செல்வராசா சிவமதி
குடும்பத்தினர்.

ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




பாவலா!
பெண்களை வேலைக்கு அனுப்பும் ஆண்களைப் பற்றி உங்கள் நினைப்பு என்ன?
ஆ.சுதர்சிகா,
தருமபுரம்.
வருமானத்தின் அருமை அறிந்த மனிதர் திருமதியை ஒரு வெகுமதியாக நினைப்பவர்.

பாவலா!
விதியை மதியால் வெல்லலாமா?
ஆனந்தி,
புளியங்குளம்.
மதிமயங்கிய நிலையில் வீதியில் விரையும்போது 'விதி'யை வெல்வது எப்படியாம்?

பாவலா!
உமக்கு பிடித்தது எது பிடிக்காதது எது?
ஆ.ஆனந்தி,
கிளிநொச்சி
பிடித்தது இசை. பிடிக்காதது வசை.

பாவலா!
யாரை நம்புவது? யாரை நம்பக்கூடாது.
சு.தர்ஷினி,
ஆனந்தபுரம்.
உங்களை, நம்புங்கள், உலகை சந்தேகியுங்கள்....!

பாவலா!
உண்மையான அன்பு காட்டும் ஒரு ஜீவனின் உள்ளத்தை ஊகிப்பது எப்படி?
ஆ.ஆனந்தி,
புளியங்குளம்.
அது ஆர்ப்பாட்டமின்றி அடக்கமாக, அமைதியாக இருக்கும்.

பாவலா!
நன்றியை சொல்லில் காட்டுவதா செயலில் காட்டுவதா நல்லது?
ஆனந்தி,
ஆயப்பகுதி.
நன்றியை வெளிக்காட்டுவதில்... அர்த்தமிழந்து போய்விடும்... நன்றியுணர்வு நாய்க்கு வாலில் இருப்பதுபோன்று மனிதனுக்கு மனதுள் இருக்கவேண்டும்.

பாவலரே!
காதலை கானல் நீர் என்கிறார்களே உண்மையா?
சுடர்,
ஜெயந்திநகர்.
காதல் உணர்வில் வரட்சி ஏற்படும்போது மட்டும் அது கானல் நீர்... இல்லையேல் பன்னீர்.

பாவலா!
உம்மை எங்கு சந்திக்கலாம்?
சுடர்,
கிளிநொச்சி.
சிந்தனையாளர்கள் மத்தியில்...

பாவலா!
தமக்குக் கீழ் அடிமையாக மற்றவர் வாழவேண்டும் என நினைப்பவர்கள் பற்றி உங்கள் கருத்து?
க.செந்தூரன்,
வல்வெட்டி.
கீழோர் குணமே அதுவாகும்.

பாவலா!
மக்களின் கோபங்கள் இனி யாழ்ப்பாணத்தில் படைமுகாம்களைத் தாக்கும் அளவுக்கு . போகுமா?
யாழினி,
கிளிநொச்சி.
மக்கள் சிறுமைகண்டு பொங்கத்தொடங்கிவிட்டனர்...படைமுகாம் இனித்தாங்காது....

பாவலா!
சுதந்திரத்தின் பெருமதிப்புப்பற்றி பாரதியாரின் கவிதை ஒன்று சொல்லும்?
பிரியா,
யாழ்ப்பாணம்.
''தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரை கண்ணீரால் காத்தோம் கருகத்திருவுளமோ...?''

பாவலா!
உலகத்தின் மனச்சாட்சிக்கு ஒரு உதாரணம் தாரும்?
ரதி,
புதுக்குடியிருப்பு.
சுனாமி தாக்கியபோது உலகம் துடித்ததே...! அதுதான்.

பாவலா!
நீர் வியர்ந்து பார்த்தது எதை?
தமிழினி,
பரந்தன்.
மனிதன் மனிதனாக சிலவேளைகளில் இயங்குவதை...!

பாவலா!
IRA ஆயுதங்களை ஒப்படைக்கப் போகிறதாமே உண்மையா?
வதனி,
விசுவமடு,
சொல்லுதல் யார்க்கும் எளியது அரியதாம்
சொல்லிய வண்ணம் செயல்... என்ற குறள்தான் நினைவுக்கு வருகிறது.

பாவலா!
எனக்கு என்னையே பிடிக்கவில்லை என்ன செய்வது?
மனோ,
பளை.
அவ்வளவு குரூரமானவரா நீங்கள்?




"என்னப்பா கடுமையா யோசினை?"

"இல்ல... ஒரு புத்தகம் எழுதுவமெண்டு பாக்கிறன்"

"ப்பூ... என்ன இருந்தாப்போல புத்தகத்தில போட்டுது மனம்"

" இல்ல இந்தியப்படை எங்கட மண்ணில நிண்டிட்டுப் போகயில்லயே அப்ப தளபதியா இஞ்ச வந்தவர் தன்ர தமிழீழ அனுபவத்தை புத்தகமாப் போட்டிட்டார்"

"நல்ல விசயம்...."

"எங்கட இந்த அரசியல் வங்குரோந்து நிலைமையப் பற்றி அரசியல் வாதியளும் புத்தகம் எழுதியிருக்கினம்"

"ம்...ம்... பாத்தனான்"

" நேரு மகாத்மாகாந்தி, சதாம் உசேன், நெல்சன் மண்டேலா எல்லாரும் தங்கட சுயசரிதை எழுதியிருக்கினம்"

"வரலாற்று நூல்கள் நல்ல விசயந்தான்"

"அப்ப நானும் ஒரு புத்தகம் எழுதவேணுமெண்டு சந்திரிகாட வரலாற்றையும் கிறேமிவில்சன் எழுதியிருக்கிறாராம்"

" அதுக்கும் இப்ப வெளியிட்ட நேரம்... சனாதிபதியின்ர மகன் மக்கள் மத்தியில வந்து மூஞ்சயக் காட்டியிருக்கிறாராம் எண்டு கேள்வி"

" அப்ப இவவின்ர ஆட்சியில சொல்லமுடியாத துன்பங்களையும் வெல்ல முடியாதெண்டு நினைச்சம் வெண்ட வெற்றியளை ஒரு தமிழன், அதுதான் நான் எழுதினா என்ன?"

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 132



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.


### படத்திற்கு மெருகூட்டுங்கள் – 132

.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................

பெயர் : .....................................................
முகவரி : .....................................................
.....................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 131



க.சசிமாலா,
284/01 முரசுமோட்டை,
பரந்தன்,
கிளிநொச்சி.

### பரிசுக்குரிய வரிகள்

போரவலம் தந்த வடு எத்தனையோ இந்த மண்ணில்
எமக்கான கல்வியதை சீரழித்தவரும் நன்கறிவார்.
தன்மான எம் மண்ணின் தனிச் சொத்து எம் கல்வி–அதை
எப்பாடுபட்டும் நாம் கற்போம் நாமுயர இந்த மண்ணில்.

### பாராட்டுக்குரிய வரிகள்

சாதனை பலபடைக்க சோதரியே-நீ
சோதனைகள் பலதா[illegible]ண்டி
வேதனைகள் மத்திய[illegible]ம்
வீறுநடை போடு வெ[illegible]யைத் தேடி.

கு.அன்பழகி,
புதுக்குடியிருப்பு.

மாண்ட எம் வீரரை மனதினில் நிறுத்தி
மீண்டிடும் ஈழத்தை மெருகூட்ட-கலை
பல கற்று-வளர்ந்து வரும் ஈழமணி
திருநாட்டின் எதிர்கால விழுதுகள்.

செ.கௌதமன்,
புதுக்குடியிருப்பு.

நேரம் என்றும் வீணாய் போகாமல்-ஈழத்
தூணாய் விளங்க நித்தமும் நீ படி
தூரம் கடந்து வீடு செல்லவேண்டும்
வீரமாய் எடுத்து வை காலடி.

முத்துசெல்வா,
தலைமன்னார்.

கல்வியை கண்ணும் கருத்துமாய் கற்று
நல்லோராய் நாளுமெம் நாட்டுக்காய் உழைக்கும்
வல்லோராய் நாம் வாழும் இந்நாளில் பிறர்
தொல்லைகள் நம் காலில் தூசு.

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்


அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு



எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும்
மருதமடு அன்னையின் பெருவிழா நன்நாளில்
இந்நாட்டில் சாந்தி, சமாதானம் நிலைத்திட -அன்னையின்
அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.



வன்னிப்பெருநிலப்பரப்பு வாழ் மக்களின் தங்கநகைத்தேவைகளை
நீண்டகாலமாக நம்பிக்கை நாணயத்துடன்
நிறைவேற்றி வரும் ஒப்பற்ற ஸ்தாபனம்

# லாவண்யா ஜுவல்லறி

45 பெரியகடை,
மன்னார்.
தொ.பே-023-223 2043

60 தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
தொ.பே-024-222 2484

(சி-12432)



வவுனியா நகரின் சிறந்த வைத்திய சேவைக்கு

## அபிஷா தனியார் வைத்தியசாலை

வீடியோ மூலமான
குடல் பரிசோதனை ஆரம்பம்

(VIDEO ENDOSCOPY/VIDIO COLONOSCOPY)

அதி நவீன கருவி மூலம் உங்கள் குடல் நோய்கள், அல்சர்(Gastritis)
மலவாசல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம்.


பரிசோதனை அறிக்கை கலர் பிறின்ட்
உடன் செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு

## அபிஷா தனியார் வைத்தியசாலை

தமிழ் மகா வித்தியாலயம் அருகாமை, வவுனியா. தொ.பே-024-222 1474,0777 237143.

(சி-12433)






த தே தொ
NTT

# தமிழீழ தேசியத்தொலைக்காட்சி

KU Band இல்

தினமும் தமிழீழ நேரம் இரவு 8.00 மணி முதல் 9.00 மணி வரை.











தென்கிழக்கு ஆசியாவிற்கு

## ஆகஸ்ட் 1ம் திகதி முதல் ஒளிபரப்பாகிறது

**தொழிநுட்பத்தகவல்:**

Satelite:Europe Star(1) Ku 45° E
Azimuth:258°, Frequency:11056 Mhz
Symbol rate: 2.894MS/s, polarity:Vertical
FEC:3/4

மின்னஞ்சல்: info@tamilntt.com T.P -021-228 5816

**தொடர்புகளுக்கு:**

தமிழீழ தேசிய தொலைக்காட்சி,
தொடர்பகம்,
மத்தியகல்லூரி முன்பாக,
யாழ்சாலை, கிளிநொச்சி,
தமிழீழம்.

(சி-12434)



இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 1௨ ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.